Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 40 | விலை 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :246 ஆடி 18ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 02 ஓகஸ்ட் 2020 வள்ளுவர் ஆண்டு 2051



# எமது போராட்டங்களில் பங்கேற்காதோர் எம்மிடமே வாக்குப் பிச்சை கேட்கின்றனர்

## பேரினவாத தரப்பினரை விரட்டியடித்துவிட்டு கூட்டமைப்புக்கே வாக்களியுங்கள் என ரவிகரன் அறிவுறுத்து

முல்லைத்தீவு, ஓக. 2



**தமிழ் மக்களின் உரிமைப் போராட்டங்களிலும், கவனவீர்ப்பு நடவடிக்கைகளிலும் பங்கெடுக்காத மாற்று இனத்தவர்கள் பலர், தற்போது தமிழ் மக்களிடம் வாக்குப் பிச்சை கேட்டு வருகின்றனர். அவர்களைப் புறமொதுக்கிவிட்டு தமிழர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே வாக்களிக்கவேண்டும்.**

இவ்வாறு வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு ஒலுமடுப் பகுதியில் நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது மக்கள் மீது பிரயோகிக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக நாம் போராடும்போது, வேறு இனத்தவர்கள் எமது உரிமைப் போராட்டங்களை நியாயமான கோரிக்கை என ஏற்று ஆதரவளிப்பதில்லை. தற்போது தேர்தல் என்றவுடன் தமிழ் மக்களின் வாக்குகளைச் சிதைக்கும் நோக்குடன் தமக்கு வாக்களிக்குமாறு தமிழ் மக்களிடம் வாக்குப் பிச்சை கேட்டு வருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் மற்றும் கருநாட்டுக்கேணி ஆகிய பகுதிகளில் தமிழ் மக்களின் பூர்வீக காணிகள் பலவும் அபகரிக்கப்படுகின்றன.

இதனைவிட கேப்பாபிலவு, வட்டுவாகல் பகுதிகளில் அமைந்துள்ள கோத்தாபய கடற்படை முகாம் ஆகிய பகுதிகளில் இராணுவத்தினர் தமிழ் மக்களின் காணிகளை அபகரித்து வைத்துள்ளனர். இன்னும் பல தமிழர்களுடைய காணிகளும் அபகரிக்கப்பட்டுள்ளன. அதற்காகவும் நாம் போராடுகின்றோம்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அவற்றுக்கெதிராகவும் போராட்டங்கள் இடம்பெற்றன. நீராவியடி, குருந்தூர் மலை, கொக்கிளாய், கற்சிலைமடு ஆகிய தமிழர்களின் பூர்வீக பகுதிகளில் திட்டமிடப்பட்ட பௌத்த மதத் திணிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்தகைய திட்டமிடப்பட்ட மதத் திணிப்பு செயற்பாடுகளுக்கெதிராகவும் நாங்கள் போராடுகின்றோம்.

இத்தகைய போராட்டங்களில் இனரீதியாக சிங்களக் கட்சிகளோ முஸ்லிம் கட்சிகளோ பங்கெடுப்பதில்லை. தமிழர்களின் போராட்டங்கள் நியாயமானவை என்றும் ஏற்றுக்கொள்வதில்லை.

அப்படியிருக்க, வேற்று இனத்தவர்கள் பலரும் எமது தமிழ் வாக்குகளைச் சிதைப்பதற்காக, எமது தமிழ் மக்களிடமே வாக்குப் பிச்சை கேட்கின்றனர்.

இதனைத் தமிழ் மக்கள் அனைவரும் சரியாகப் புரிந்துகொள்ளவேண்டும். தமிழர்களின் உரிமைக்காக தொடர்ந்தும் போராடுகின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே இந்தமுறை தமிழ் மக்கள் அமோகமாக வாக்களிக்கவேண்டும்-என்றார். (து-246)

# எம்மை அழிக்கும் இனவாதிகளுக்கு தமிழ் மக்களே வாக்களியாதீர்கள்!

## கூட்டமைப்புக்கே வாக்களியுங்கள் என்றும் சாள்ஸ் நிர்மலநாதன் கோரிக்கை

வவுனியா, ஓக. 2



இந்த மண்ணில் பல தமிழ் மன்னர்களின் பரம்பரையில் வந்த இனம் எங்கள் தமிழ் இனம். ஆனால் இன்று நாங்கள் சின்னச் சின்ன விடயங்களுக்காக எங்களை அழிப்பவர்களுக்காக அதிகாரத்தைக் கொடுக்கின்றோம்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னித் தேர்தல் தொகுதி வேட்பாளர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

சாள்ஸ்ஸிடம் நேராகவந்து கூட்டமைப்பு என்ன செய்தது எனக் கேட்க தைரியம் அற்றவர்கள் கூட்டமைப்பை விமர்சிக்கின்றனர். வடக்கு கிழக்கு தமிழர்களின் தாயகப் பகுதியில், தமிழர்களின் தனித்துவத்தை இல்லாதொழிப்பதற்காக தமிழர்கள் தங்கள் அடையாளங்களுடன் வாழக்கூடாது என்பதற்காக சிங்கள மக்களை குடியேற்றி வருகின்றார்கள். இதனால் கிழக்கு மாகாணத்தில் தமிழர்களுடைய காணிகள் பறிக்கப்பட்டு பல்லாயிரக்கணக்கான சிங்களவர்கள் குடியேற்றப்பட்டுள்ளனர். ஜனாதிபதி கோத்தாபய கிழக்கு மாகாணத்துக்கு மட்டும் தொல்பொருள் செயலணியை உருவாக்குகின்றார்.

ஆகவே வன்னியிலும் இந்தநிலை உருவாகி வருகின்றது. இங்கு சிங்கள முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களை வரமுடியாமல் செய்யமுடியும். இது ஏன் எமக்கு இன்னும் விளங்கவில்லை.

2015 ஆம் ஆண்டு ரிஷாத் பதியுதீனுக்கும் மஸ்தானுக்கும் 20 ஆயிரம் தமிழர்கள் வாக்களித்தார்கள். அவர்கள் மீண்டும் உங்களை நாடி வரும்போது ஏன் அபிவிருத்தி செய்யவில்லை என்று கேட்பதில்லை. சாளம்பைக்குளம் எப்படி உருவாக்கப்பட்டது. ரிஷாத் பதியுதீனுக்கு அரசியல் பலத்தைப் பெற்றுக்கொடுத்தது யார்? தமிழர்கள் வாக்களிக்காமல் ரிஷாத்தாலும் மஸ்தானாலும் வெல்ல முடியாது. அது எமது மக்களுக்கு விளங்குவதில்லை.

வன்னி மக்களுக்கு மிகப்பெரிய ஆபத்துள்ளது. கிழக்கை எவ்வாறு மகாவலி மூலம் அழித்தார்களோ அதைப்போலவே வன்னியில் தமிழர்களின் இனப்பரம்பலை இல்லாதொழிக்க முயற்சிக்கின்றார்கள்.

வன்னியில் என்ன நடக்கின்றது என்று கூட்டமைப்பில் இருந்து சென்றவர்கள் கேட்கின்றனர். அது அவர்கள் தங்களையே பார்த்துக் கேட்கவேண்டிய கேள்வி. இலங்கையின் பொருளாதாரத்துக்கு ஏற்றவகையில் அபிவிருத்தி நடக்கும். நான் என்னால் முடிந்த அபிவிருத்தியை செய்திருக்கின்றேன். ஆனால் அபிவிருத்தி செய்ததற்காக வாக்குப்போட வேண்டும் என்று இல்லை.

நாங்கள் அரசிடம் சண்டைபிடித்து கிடைத்த அபிவிருத்தியே இங்கு இடம்பெற்றுள்ளது.

2018 ஆம் ஆண்டு விக்னேஸ்வரன் சிவசக்தி ஆனந்தன் ஆகியோர் கூட்டமைப்பில் இருந்து பிரிந்து தமது சொந்த நலன்களுக்காக தமிழர்களின் இருப்பை இல்லாதொழிப்பதற்காக செயற்படுகின்றனர். எனவே மக்கள் இது தொடர்பில் சிந்திக்க வேண்டும் - என்றார். (து-110)

# ஐ.தே.க. வேட்பாளர் மஹிந்தவுக்கு ஆதரவு

ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் ஒருவர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவை வெளியிட்டு மொட்டுக் கட்சியில் இணைந்துள்ளார்.

மாத்தறை மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிடும் தெவுந்தர தொகுதி அமைப்பாளரான அச்சிர கல்ஹார இலங்கம் மேவே இவ்வாறு கட்சி தாவியுள்ளார்.

அம்பாந்தோட்டை - கால்ட்டனில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை நேற்றுச் சந்தித்த அவர் தனது ஆதரவை அறிவித்துள்ளார். (ஐ)

# இனப்படுகொலை அரசுக்கு பின்னால் தமிழ் இளைஞர்கள் நிற்பது வேதனை

## தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் தெரிவிப்பு

மன்னார், ஓக. 2

இராணுவத்திலிருந்து ஓய்வுபெற்றவர் வன்னியில் போட்டியிடுகின்றார். அவருக்குப் பின்னாலும் இனப்படுகொலை அரசின் நிகழ்ச்சி நிரலுக்கு பின்னாலும் தமிழ் இளைஞர்கள் போகின்றமை மிகுந்த வேதனைக்குரிய விடயம் என்று தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தெரிவித்தார்.

மன்னாரில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வன்னியிலும் யாழ்ப்பாணத்திலும் அதிகளவான வேட்பாளர்கள் களம் இறங்கி இருக்கின்ற இந்தச் சூழ்நிலையிலும் வாக்காளர்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்று முடிவெடுக்கக்கூடிய மனோநிலைக்கு அவர்கள் இன்னும் வந்துவிடவில்லை.

தென்னிலங்கையிலிருந்து களம் இறக்கப்பட்டவர்களும், தென்னிலங்கை கட்சிகளின் அனுசரணையாளர்களும் வடக்கு கிழக்கிலே பல சுயேச்சைக் குழுக்களாகவும் பல கட்சிகளிலும் களமிறங்கியிருக்கிறார்கள்.

தெற்கில் இருந்து வருகை தந்துள்ள வேட்பாளர்கள் வன்னியிலே பொது ஜன பெரமுன கட்சியில் பிரதானமாக போட்டியிடுகிறார்கள்.

அவர்கள் தூள் வியாபாரிகளாகவும் கஞ்சா வியாபாரிகளாகவும் உள்ளனர். அவர்கள் கோடிக்கணக்கான பணத்தைக்கொண்டுவந்து கொட்டிஎமது இளைஞர்களை ஆசைவார்த்தைகாட்டிஏமாற்றி வாக்குப் பெற்றுக்கொள்கின்ற அயோக்கியத்தனமான காரியத்தில் ஈடுபடுகின்றார்கள் - என்றார். (து-56)

நாடாளுமன்றத் தேர்தல் - 2020



யாழ்ப்பாணம் / கிளிநொச்சி மாவட்டம்
ஐக்கிய மக்கள் சக்தி
உங்களில் ஒருத்தி உங்களுக்காக...
X 3 X
உமாச்சந்திரா பிரகாஷ்
(ஊடகவியலாளர்)



Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 40 | விலை 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :246 ஆடி 17ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 02 ஓகஸ்ட் 2020 வள்ளுவர் ஆண்டு 2051



# நாடாளுமன்றத் தேர்தல் - 2020

## யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்

**எனது அன்புக்குரிய வாக்காளப் பெருமக்களே!**
**வர்த்தகப் பெருமக்களே!**





**5 ஆம் திகதி காலையில் நீங்கள் கையால் உண்ணும் கையை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்!**
**எனது 5 ஆம் இலக்கத்தையும் நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்!**

கை சின்னத்துக்கும் அங்கஜன் இராமநாதன் அவர்களின் வெற்றி இலக்கம் 1 இற்கும் எனது வெற்றி இலக்கமாகிய இலக்கம் 5 இற்கும் வாக்களித்து மேலும் நீங்கள் விரும்பிய ஒரு இலக்கத்துக்கும் வாக்களியுங்கள். கட்டாயமாக மூன்று இலக்கங்களைத் தெரிவு செய்து வாக்களியுங்கள். அது உங்கள் உரிமை!

ஆளும் கட்சியும் அடுத்த ஐந்தாண்டுக்கு ஆட்சியில் இருக்கப்போகும் கட்சியான எங்களுக்கு வாக்களிப்பதன் மூலம் வடக்கு கிழக்கு இணைந்த சமஷ்டி உரிமைகளுக்கும் பாரிய அபிவிருத்தித் திட்டங்களுக்கும் இளைஞர் யுவதிகளுக்கான தொழிற்சாலைத் திட்டங்களுக்கும் உங்கள் வாக்குகளை அளியுங்கள்!

**" உங்கள் வாக்கு உங்கள் உரிமை சரியான முறையில் வாக்களியுங்கள்! "**

**தமிழ்த் தேசியமும் தமிழ்த் தாயும் பல்லாயிரம் ஆண்டுகள் வாழ்க.**

# பரநிருபசிங்கம் வரதராஜசிங்கம் (விண்ணன்)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி

facebook.com/vinnan05

Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 40 விலை 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :246 ஆடி 17ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 02 ஒகஸ்ட் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## தமிழரின் சுபீட்சமான எதிர்காலத்துக்கு தேர்தல் முடிவுகள் வழிவகுக்கட்டும்!

*யாழ். ஆயர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஓக. 2

யாருக்குவாக்களிப்பது என்ற முடிவை ஒவ்வொருவரும் எவரது தலையீடோ தூண்டுதலோ இன்றி சுயமாகவும் சுதந்திரமாகவும் எடுக்கவேண்டும். தமது நலன்களை புறம் தள்ளி நாட்டை நேசித்து மக்களுக்குப் பணிபுரிய விரும்பும்நேர்மையானவேட்பாளர்களைத் தெரிவு செய்யுங்கள். தமிழ் மக்களின் சுபீட்ச 21

# தமிழருக்கு மாற்றுத் தலைமை தேவையில்லை இனப்பிரச்சினைக்கான தீர்வே வேண்டும்!!!

## தமிழ்க் கூட்டமைப்பை ஆதரித்து கல்வியாளர் ஒன்றியம் அறிக்கை

**யாழ்ப்பாணம், ஒகஸ்ட் 2**

தமிழ் மக்களுக்கு இன்று தேவைப்படுவது மாற்றுத்தலைமை அல்ல. மக்களுக்கான நீதியான, நியாயமான, நிரந்தர தீர்வைப் பேச்சு ஊடாகப் பெறுவதே இன்றைய கடமையாகும். அரசியலில் ஈடுபடுபவர்கள் பல்வேறு குழுக்களாகப் பிரிந்து செயற்படுவது மக்கள் உரிமையுடன் வாழ்கின்ற நிலையைப் பாதிக்கும். பேரம் பேசும் சக்தி குறைவடையும் அல்லது இல்லாமல் போகும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பலவீனப்படுத்துகின்ற ஒரு சிலர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள்ளேயே இருக்கலாம். மக்கள் அவர்களை இனம் கண்டு நிராகரிக்கலாம். இவ்வாறு யாழ்ப்பாணக் கல்வியாளர் ஒன்றியம் தெரிவித்துள்ளது. 21

## அரசின் மிரட்டலுக்கு அடிபணியோம்; சமஷ்டியை ஒருபோதும் கைவிடோம்!

*5ஆம் திகதி வெற்றியை நிலைநாட்டுவோம்; கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் முழக்கம்*



யாழ்ப்பாணம், ஓக. 2

அரசின் எவ்வித மிரட்டல்களுக்கும் நாம் அடிபணியமாட்டோம். சமஷ்டி முறைமையிலான நிரந்தர அரசியல் தீர்வே எமது நோக்கம். அதில் விட்டுக் கொடுப்புக்கு இடமில்லை. அந்த நிலைப் பாட்டிலிருந்து ஒருபோதும்பின்வாங்கவேமாட்டோம். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் கூட்டமைப்பின் திருகோணமலை 21

## கூட்டத்துக்குள் புகுந்து தாக்குதல்

கிளிநொச்சி, ஓக. 2

கிளிநொச்சி அக்கராயன் பொதுச் சந்தையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் பங்கு கொண்ட மக்கள் மீது சுயேச்சைக் குழுவொன்றி ஆதரவாளர்கள் எனத் தெரிவிக்கப்படுவர்களால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது. (ஒ.5)



























மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கிட்டுப் பூங்காவில் தமிழ்க் கூட்டமைப்பின் பரப்புரைக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 2

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாபெரும் தேர்தல் பரப்புரைக் கூட்டம் இன்று மாலை 6.30 மணிக்கு நல்லூர் முத்திரைச் சந்தியிலுள்ள கிட்டுப் பூங்காவில் நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் நடைபெறும் பரப்புரைக் கூட்டத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்கள் அனைவரும் கலந்து கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(ஒ.5)

# முன்னணியின் பரப்புரைக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 2

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பரப்புரைக் கூட்டம் இன்று மாலை 5 மணிக்கு பருத்தித்துறை கொட்டடி பிள்ளையார் கோயில் முன்பாக நடைபெறவுள்ளது. அனைவரையும் பங்கேற்குமாறு அந்தக் கட்சி அழைப்பு விடுத்துள்ளது.

(ஒ.5)

# அதிகாரப் பகிர்வுக்கு அவசியமேயில்லை!

## சிங்கள இனவாதக் கட்சி இறுமாப்பு

கொழும்பு, ஓக. 2

'இலங்கையில் தமிழ் மக்களுக்கு சிங்கள மக்களால் அநீதி இழைக்கப்படவில்லை. எனவே, அதிகாரப்பகிர்வு என்பது அவசியமில்லை. தன்னாட்சி கோரும் கூட்டமைப்பின் விஞ்ஞாபனத்தையும் முற்றாக நிராகரிக்கின்றோம்.' இவ்வாறு சிங்கள தீப ஜாதிக பெரமுன கட்சியின் பொதுச்செயலாளர் ஜயந்த லியகனே தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'அதிகாரப்பகிர்வு இடம்பெறவேண்டும், நாடு பிளவுபடக்கூடாது என்பதே நாட்டிலுள்ள பிரதான இரு கட்சிகளினதும், அரச சார்பற்ற அமைப்புகளினதும் கருத்தாக இருந்துவருகின்றது. இக்கருத்துடன் நாம் உடன்படவில்லை. அதிகாரங்களைப்பகிரும் அளவுக்கு தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி என்னவெனக் கேட்க விரும்புகின்றோம்.

1983இல் ஐக்கிய தேசியக்கட்சியின் தொழிற்சங்க பிரிவிலுள்ள குண்டர்குழுவே தமிழர்கள்மீது தாக்குதல் நடத்தினர். இதற்காக ஒட்டுமொத்த சிங்கள மக்கள்மீதும் குறைகூறுவது நியாயமா? இவ்வாறு தம்மை தாக்கிய தரப்புக்கே தமிழர்கள் வாக்களித்தும் வரும்நிலைமை காணப்படுகின்றது.

அதேவேளை, மாகாண சபை முறைமை முற்றாக நீக்கப்படவேண்டும் என்பதிலும் நாம் உறுதியாக இருக்கின்றோம். அதிகாரப்பகிர்வு மட்டுமல்ல, மாகாணசபையில் உரிய வகையில் நிர்வாகம் இடம்பெறுவதில்லை. இவை உட்பட மேலும் சில காரணங்களாலேயே நாம் மாகாணசபை முறைமைக்கு எதிர்ப்பை வெளியிட்டுள்ளோம்.

நாம் ஒருபோதும் தன்னாட்சியை ஏற்கப் போவதில்லை. ஒற்றையாட்சி முறைமையே தொடர வேண்டும். ஆட்சிக்குவரும் கட்சிகளும் அது தொடர்பில் பேசக்கூடாது. அதிகாரங்களைப் பகிர்ந்தால் தனிநாட்டை நோக்கி பயணிக்கவேண்டிய நிலை உருவாகும். இவ் விவகாரங்கள் தொடர்பில் கூட்டமைப்புடன் பகிரங்க விவாதத்துக்கு நாங்கள் தயாராகவே இருக்கின்றோம். கூட்டமைப்பும் விவாதத்துக்கு வரவேண்டும். கலந்துரையாடல், புரிந்துணர்வுமூலமே பிரச்சினைகளுக்கு தீர்வுகளை காணலாம்' என்றார்.

(அ,44)

# கூட்டமைப்பைத் தோற்கடிக்க சிங்கள வாக்கைத் தாருங்கள்

## ஆணை கேட்கிறார் அமரசேகர

கொழும்பு, ஓக. 2

**'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழர்களுக்காக இனவாதத்தைக் கதைத்து வருகின்றது. கூட்டமைப்பைத் தோற்கடிப்பதற்கு தென்பகுதி மக்கள் எமக்கு ஆணையைத் தரவேண்டும்' இவ்வாறு தெரிவித்தார் கடும்போக்குடைய சிங்கள தேசியவாத அமைப்புகளின் கூட்டணியான தேசிய ஒருங்கமைப்பு ஒன்றியத்தின் அமைப்பாளர் கலாநிதி குணதாச அமரசேகர.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் 30/1 தீர்மானத்துக்கு வழங்கியிருந்த இணை அனுசரணையில் இருந்து மாத்திரமே இலங்கை விலகியுள்ளது. ஆனாலும், குற்றச்சாட்டுகள் அவ்வாறே உள்ளன. எனவே, குற்றச்சாட்டுகளில் இருந்தும் முழுமையாக விடுபடும் வகையில் அரசாங்கத்துக்கு சிங்கள, பௌத்த மக்கள் ஆணை வழங்கவேண்டும்.

கூட்டமைப்பு உட்பட வடக்கில் உள்ள சில கட்சிகளில் இனவாதிகளே போட்டியிடுகின்றனர். அந்த இனவாதிகளைத் தோற்கடிப்பதற்கு அங்கு எமக்கு வாக்குப்பலம் இல்லாதபோதிலும், இனவாதிகளைக் கட்டுப்படுத்தக்கூடிய அரசாங்கத்தை பலப்படுத்துவதற்கான வாக்குவங்கி தெற்கில் உள்ளது. அதனை உரிய வகையில் பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

இனவாதிகளின் மனம் இன்னும் மாறவே இல்லை. மக்களையும் தவறாக வழிநடத்தி வருகின்றனர். இந்த நிலைமை மாறுவதற்கு இன்னும் காலம் எடுக்கும். எனவே, வடக்கு மக்கள் எதிர்நோக்கும் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். மாறாக வேறொன்றையும் செய்ய வேண்டியதில்லை.

அதேவேளை, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் வழங்கியிருந்த இணை அனுசரணையில் இருந்தே இலங்கை அரசாங்கம் விலகியுள்ளது. ஆனால், பேரவையில் எமக்கு எதிரான குற்றச்சாட்டுகள் உள்ளன. அந்த குற்றச்சாட்டுகளில் இருந்தும் விடுபடவேண்டும். அதற்கான இராஜதந்திர நடவடிக்கையை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும். சிங்கள, பௌத்த மக்கள் அரசாங்கத்துக்கு பேராதரவை வழங்கினால், அதனைக் 'காண்பித்து ஜெனிவா நெருக்கடியில் இருந்து தப்பலாம்.' என்றார்.

(அ-44)

# சந்திரகுமார் அணி துப்பாக்கிச் சூடு

## கண்டாவளையில் அடாவடி

கிளிநொச்சி, ஓக. 2

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்தில் முன்னாள் ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரான சந்திரகுமாரின் சுயேச்சைக்குழுவின் ஆதரவாளாரால், திடீரென மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டால் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கண்டாவளைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 7 மணியளவில் முன்னாள் ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும், தற்போது சுயேச்சைக் குழுவாகப் போட்டியிடுபவருமான சந்திரகுமாரின் பரப்புரைக் கூட்டம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது முன்னாள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஆதரவாளர்களும் அந்தப் பகுதியில் பரப்புரை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். இதன்போது, 'இது எங்களுடைய பகுதி. இதற்குள் கூட்டமைப்பு வர முடியாது. வந்தால் என்ன நடக்குமென இப்போது காட்டுகிறேன்' என கூட்டமைப்பின் ஆதரவாளர் ஒருவருக்கு, சந்திரகுமார் அணியைச் சேர்ந்த ஒருவர் தொலைபேசி மூலம் எச்சரிக்கை விடுத்துள்ளார். அதன் பின்னர் அவ்வாறு எச்சரிக்கை விடுத்த நபர் கண்டாவளைப் பகுதியில் ஒட்டப்பட்டிருந்த கூட்டமைப்பு வேட்பாளர் ஒருவரின் சுவரொட்டியை நோக்கி இடியன் துப்பாக்கியால் சுட்டுள்ளார். சூட்டுச் சத்தம் காரணமாக அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

ஜனநாயகம், மாற்றம் என மேடையில் முழங்கி வரும் சந்திரகுமார், அணியினர் இவ்வாறு துப்பாக்கிப் பிரயோகம் செய்து அடாவடியாகச் செயற்படுவது அந்தப் பகுதி மக்களிடையே பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

(அ)

# படையினரின் சோதனை தீவிரம்

யாழ்ப்பாணம், ஓக. 2

பொதுத் தேர்தலுக்கு இன்னும் 4 நாள்களே உள்ள நிலையில் யாழ்ப்பாணத்தில் பாதுகாப்புப் பிரிவினரால் நேற்று முதல் திடீர் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதி, முட்டாசு கடைச் சந்தியில் இரு பக்கங்களிலும் வீதித்தடை போடப்பட்டு வாகனத்தில் பயணிப்போர் மறிக்கப்பட்டு ஆவணங்கள் முழுமையாகச் சோதனை செய்யப்பட்டன. இராணுவத்தினரோடு பொலிஸாரும் இணைந்து இந்த நடவடிக்கயை முன்னெடுத்தனர்.

தேர்தல் நடைபெறுவதற்கு முன்னரும், தேர்தல் நிறைவடைந்த பின்னரும் வன்முறை இடம்பெறலாம் என்று கணிக்கப்பட்ட பகுதிகளில் வடக்கு மாகாணமும் உள்ளடங்குவதாக தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் பல சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(7)

# கூட்டமைப்புக்காக தேர்தலை குழப்புவாராம் பேராசிரியர் ஹூல்

கொடிகாமம், ஓக. 2

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் மற்றும் சுமந்திரன் ஆதரவால் சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினராக இணைந்து கொண்ட ரட்னஜீவன் ஹூல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புகாக தேர்தலைக் குழப்பி விடுவார் என சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முதன்மை வேட்பாளரான அங்கஜன் ராமநாதன் குற்றம்சாட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மக்கள் செல்வாக்கு சரிந்துள்ள நிலையில் எமக்கான மக்கள் செல்வாக்கு அதிகரித்துள்ள நிலையில் அதனை பொறுக்காத கூட்டமைப்பினர் அவர்களின் அடிவருடிகள் மூலம் எம்மீது சேறுபூசும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்றார்.

(ம-159)

# முரண்பாடற்ற விதத்தில் இனப்பிரச்சினைக்கு தீர்வு

## வாசுதேவ தெரிவிப்பு

கொழும்பு,ஓக.2

பொதுத்தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மூன்றில் இரண்டு பெரும் பான்மை ஆதரவை நிச்சயம் பெறும். எமது வெற்றியில் தமிழ் முஸ் லிம் சமூகத்தினர் பங்குவகிக்க வேண் டும். இனங்களுக்கிடையிலான பிரச்சி னைகளுக்குத் தீர்வு அரசியலுக்கு அப் பாற்பட்டதாக முரண்பாடற்ற விதத்தில் வழங்கப்படும்.

இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

16 ஆவது நாடாளுமன்றத் தேர்தல் எதிர் வரும் புதன்கிழமை இடம்பெறவுள்ளது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன இந்தத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும் பான்மை ஆதரவை நிச்சயம் பெறும்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக் ஷவுக்கு தமிழ் முஸ்லிம் மக்கள் பெருமளவுக்கு ஆதரவு வழங்கவில்லை என்பதை ஏற் றுக் கொள்ள வேண்டும். இதுவும் அண் மைக் காலங்களில் இனங்களுக்கிடை யில் விரிசல் ஏற்படுவதற்கு ஒரு காரணி யாக அமைந்தது.

பொதுஜன பெரமுனவின் வெற்றியில் தமிழ் முஸ்லிம் சமூகத்தினர் பங்கு கொள்ள வேண்டும்.

நாட்டில் இனங்களுக்கிடையில் பிரச் சினை குறிப்பாக தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுக்கு அடிப்படைப் பிரச்சினை காணப்படுகிறது என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

பிரச்சினைகளுக்கு அரசியல் காரணிக ளைக் கொண்டு ஒரு போதும் தீர்வு காண முடியாது.

வடக்கு மக்களின் அடிப்படை அதாவது அரசியல்சார் பிரச்சினைகளுக்கு அரச மைப்பை மையப்படுத்தி தீர்வு காண முயலும் போது, தெற்கில் முரண்பாடுகள் தோற் றம் பெறுகிறது.

அரசியல்வாதிகளும் பிரச்சினைகள் எழும் விதத்திலான தீர்வு திட்டங்களையே இதுவரை காலமும் முன்வைத்துள்ளார்கள்.

ஆகவே எத்தரப்பினருக்கும் முரண்பாட டற்ற விதத்தில் தீர்வு வழங்கப்பட வேண் டும்.

இனங்களுக்கிடையிலான பிரச்சினைக ளுக்குத் தீர்வு அரசியலுக்கு அப்பாற்பட் டதாகவும், முரண்பாடுகள் தோற்றம் பெறாத வித்த் திலும் வழங்கப்படும்.

ஜனாதிபதி கோத்தபய ராஜபக் ஷ தலை மையிலான அரசில் அனைத்து இன மக்களும் சமமாக மதிக்கப்படுவார்கள். அபிவிருத்திகள் அனைத்து தரப்பினருக் கும் தாராளமயப்படுத்தினால் முரண்பா டுகள் தோன்றும் கேள்விகள் ஒருபோதும் எழாது.

ஆகவே தமிழ் முஸ்லிம் சமூகத்தினர் பொதுஜன பெரமுனவின் வெற்றியைப் பலப்படுத்த வேண்டும் - என்றார். (க)

# மன்னார், முல்லைத்தீவில் மீன்பிடி நவீன மயப்படும்

## சொல்கிறார் ரத்னப்பிரிய



மன்னார்,ஓக.2

மன்னார் மற்றும் முல்லைத்தீவு மீனவர் கள் மீன்பிடிப்பதற்கு நவீன தொழில் நுட்ப வசதிகள் இல்லை. இதனால் வெளி யிடத்து மீனவர்கள் இங்கு வந்து அவர்க ளது வளங்களைச் சுரண்டும் நிலை ஏற் படுகிறது. அதனால் நவீன தொழில் நுட்ப மீனவ சமுதாயத்தை இரு மாவட் டங்களிலும் உருவாக்குவேன்.

இவ்வாறு பொதுஜன பெரமுனவின் வன்னி மாவட்ட வேட்பாளர் கேணல் ரத் ணப்பிரிய பந்து தெரிவித்தார்

மன்னார் ஜீலி ஹோட்டலில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார கூட்டத்தில் அவர் இத னைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது, தேர்தல் பரப்புரைக்கு வந்திருந்தாலும் இன்று பல்வேறுபட்ட மக்கள் என்னைச் சந்தித்து அன்றாடப் பிரச்சினைகள் பற்றி கலந்துரையாடினர். தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாகவும், போரால் பாதிக்கப்பட்டவர் களுக்கு என்ன செய்வீர் கள் என்றும் கேட்டனர்.




2012 காலப்ப குதியில் 12 ஆயிரம் சரண டைந்த நபர்களை விடுவித்த ஒரே அரசு எமது அரசு. அதே காலப்பகுதியில் தான் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான இழப்பீடுகளும் அதிகமாக வழங்கப்பட் டன. வன்னியில் அபிவிருத்திப் பணிக ளும் நடைபெற்றன. மேலும் அபிவிருத் திப் பணி நடைபெறும்.

தற்போது தண்டனை பெற்று வரும் அர சியல் கைதிகள் தொடர்பாக ஜனாதிபதியு டன் பேச்சு நடத்தப்பட்டு வருகிறது. அதே கோரிக்கைகளை முன் வைத்து, இந்தத் தேர்தலில் இறங்கியுள்ளோம். அவர்களுக்கான நீதியைப் பெற்றுத் தரு வோம் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை.

மன்னார், முல்லைத்தீவு மாவட்ட மீனவர் கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு நிச்சயம் தீர்வு காணப்படும். என்றார். (க-213)

# பிரேமதாஸவின் யுகத்துக்கு ஒருபோதும் இடமளிக்கோம்

## மஹிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 2

கொடுங்கோல் ஆட்சி செய்ய பிரேமதாஸ யுகம் மீண்டும் தலைத்தூக்க ஒருபோதும் இடமளிக்க முடியாது. தேசிய பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டு அனைத்து இன மக்களும் சுதந்திரமாகவும், பாதுகாப்பாகவும், நல் லிணக்கத்துடனும் வாழும் சூழல் ஜனாதி பதி கோத்தாபய ராஜபக்ச தலை மையிலான எமது ஆட்சியில் உறு திப்படுத்தப்படும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித் தார்.

முன்னாள் ஜனாதி பதி ரணசிங்க பிரே மதாஸ ஆட்சிக் காலத்தில் பாட சாலை மாணவர் கள், பல்கலைக் ழக மாணவர்கள் பலர் சித்திரவதைக ளுக்கு உட்படுத் தப்பட்டு படு கொலை செய்யப்பட் டார்கள். அரசியலுக் கும் மாணவர்களுக் கும் எவ்வித தொடர் பும் இல்லாத நிலையில் மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டமை கொடூர மான செயற்பாடாகக் கருத வேண்டும்- என்றார். (கு)






# மீனில் போட்டியிட அழைத்தார் விக்கி

## பகிரங்க மன்னிப்புக்கேட்பதாகவும் சொன்னார் என்கிறார் சத்தியலிங்கம்

**வவுனியா, ஓக. 2**

**முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் அண்மையில் என்னிடம் வந்து தங்களது கட்சியில் இணைந்து தேர்தலில் நிற்குமாறும், சத்தியலிங்கம் குற்றமற்றவர் என்று பகிரங்க மன்னிப்பு கேட்பதாகவும் சொன்னார் இவ்வாறு முன்னாள் வடக்கு மாகாண சுகாதார அமைச்சரும், நாடாளுமன்ற தேர்தலுக்கான வேட்பாளருமான ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.**

வவுனியாவில் நேற்று இடம் பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார் அவர்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வவுனியா வடக்கு பிரதேச சபையில் இருக்கின்ற 26 உறுப்பினர்களில் 10 பேர் வேற்றுமொழி பேசுகின்றவர்கள். அவர்கள் எங்கிருந்து யாரால் கொண்டுவரப்பட்டார்கள். அவர்கள் இந்த மண்ணைச் சேர்ந்தவர்களா? அவர்களுக்கும் இந்த மண்ணுக்கும் என்ன சம்மந்தம் எமது மாவட்டத்தின் இன விகிதாசாரத்தை மாற்றுவதற்காக போர்க் காலத்திலும் அதற்குப் பின்னரும் இங்கு அழைத்து வரப்பட்டு குடியேற்றப்ப ட்டவர்களே அவர்கள்.

எமது பூர்விக கிராமமான ஊஞ்சல்கட்டி பகுதி மகாவலி வலயத்தின் கீழே கொண்டுவரப்பட்டுள்ளது. அந்தக் காணிகளின் உறுதிகளை இராணுவ முகாமில் கொண்டுவந்து வழங்குமாறு அந்தப் பகுதி மக்களுக்கு தெரிவிக்கின்றனர். இவ்வளவும் நடந்து கொண்டு இருக்கும்போது நாம் சாப்பாட்டுப் பாசலுக்காக மொட்டுச் சின்னத்திற்குப் பின்னாலே திரிகின்றோம்.

எங்களுடைய மண் பறி போய்க்கொண்டிருக்கின்றது. சிங்களக் குடியேற்றம் விரிவாக்கம் செய்யப்படுகின்றது. நாம் மொட்டுக்கும், யானைக்கும், பூனைக்கும் பின்னால் திரிந்தால் அது நெடுங்கேணி வரைக்கும் வரும். இதை நாம் புரிந்துகொள்ள முடியாதவர்களாக இருக்கின்றோம்.

கடந்த உள்ளூராட்சித் தேர்தலின் பின்பு வடக்கு பிரதேச சபையிலே தவிசாளரை தேர்வுசெய்யும்போது எமது மண்ணிலே தேசியம்பேசி 20 வருடங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்களிடம் நாம் மன்றாடிக்கேட்டோம். வடக்கு பிரதேச சபையை கைப்பற்றுவதற்காக பல தடவைகள் பேச்சுக்களை நடத்தினோம். இறுதியில் நாணயம் சுண்டியே எமக்கு அந்த சபையை ஆளும் நிலைமை உருவாகியது. அவர்கள் முதலில் பூவில் வந்தார்கள், பின்னர் வீட்டிற்கு வந்தார்கள், இடையில் சூரியனுக்குச் சென்று தற்போது மீனிலே நிற்கின்றார்கள். இறுதியில் கருவாடாகிப் போவார்கள்.

வடக்கு மாகாண சபையில் சுகாதார அமைச்சராக இருந்து வடக்கிலே ஒரு சுகாதாரப் புரட்சியை ஏற்படுத்தியிருக்கின்றேன். 25 வைத்தியசாலைகளை அமைத்துள்ளேன். இலங்கையில் முதன்முதலாக இலவச நோயாளர் காவு வண்டி சேவையை ஆரம்பித்தவன் நான். இதன்மூலம் பலர் பயனடைந்து வருகின்றனர். நாங்கள் செய்துகாட்டியிருக்கின்றோம்.

வடக்கு மாகாணசபை சத்தியலிங்கம் குற்றமற்றவர் என்று ஏகமனதாக தீர்மானத்தை கொண்டுவந்தது. அதனை முன்னாள் முதலமைச்சரே நேடியாகக் கூறினார். ஆனால் அவரை சுற்றியிருப்பவர்கள் விடவில்லை. அதனால் நான்கு வருடத்துடன் எனது அமைச்சுப் பதவியில் இருந்து விலகும் நிலை ஏற்பட்டது. இதே முன்னாள் முதலமைச்சர் தேர்தலில் தங்களது கட்சியில் இணைந்து கொள்ளும்படி அண்மையில என்னிடம் கோரினார்.

எங்களிடம் போதிய காசு இருக்கின்றது. நீங்கள் ஒரு சதமும் செலவளிக்கத் தேவையில்லை. என்னோடு வந்து சேருங்கள். சத்தியலிங்கம் குற்றமற்றவன். என்னை சூழல் அப்படி சொல்லவைத்தது என்று பகிரங்க மன்னிப்புக் கேட்பதற்கு நான் தயாராக இருக்கின்றேன் என்று சொன்னார்.

அவரது வயதுக்கு மரியாதை கொடுப்பவன் நான். எனது தகப்பனைப் போன்றவர் அவர். ஆனால் கேட்பார் கதையைக்கேட்டு சொந்த மதி இல்லாமல் இருந்த ஒரு முதலமைச்சர் அவராகத்தான் இருப்பார். என்றார்.

(ம-110)

# காலாவதி ‘லைசன்ஸும்’ வாக்களிப்பதற்கு உதவும்

கொழும்பு, ஓக. 2

கொரோனா பெருந்தொற்றை அடுத்து அரச சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டிருந்த காரணத்தால் காலாவதியான சாரதி அனுமதிப்பத்திரங்களைப் பயன்படுத்தியும் வாக்களிக்க முடியும் என்று தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது. சாரதி அனுமதிப் பத்திரங்கள் காலாவதியாகியிருப்பினும் கொரோனா நெருக்கடியைக் கருத்தில் கொண்டு அவற்றைப் பெற்றுக்கொள்ள மோட்டார் வாகன திணைக்களம் சலுகைக் காலத்தை மார்ச் முதல் ஜூன் வரை நீடித்துள்ளது. இதையடுத்தே காலாவதியான சாரதி அனுமதிப் பத்திரங்களைப் பயன்படுத்தி வாக்களிக்க முடியும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வாக்காளர் ஒருவர் தனக்காக சொந்த பேனாவைக் கொண்டு வராத பட்சத்தில் அத்தகைய வாக்காளர்களுக்கு வாக்களிப்பதற்காக கிருமி நீக்கம் செய்யப்பட்ட பேனைகள் வழங்கப்படும் எனவும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ம)





**சபையில் சரவணபவன்**

இன்னும் நான்கு நாட்களில் தேர்தல், எம்மை ஆளப்போவது யார்? நம்மை வழி நடத்தப்போவது யார்? இவர்களை நம்பி வாக்களித்து விட்டோம் நாளை இவர்கள் என்ன செய்யப் போகின்றார்களோ என்ற கேள்வி மனதிற்குள் ஒலிக்க ஆரம்பித்துவிட்டது.

இந்தக் கேள்விக்கான விடை நம்மிடம் நமது கரங்களிலேயே இருக்கின்றது. அரசியல் ஒரு சாக்கடையில் என்று கூறியவர்கள் இப்போது அந்த சாக்கடையை குதித்துவிட்டு மூக்கு முட்டுகிறதுமூச்சை அடைக்கிறது என்று தடுமாறுகின்றனர். நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே என்று வாதிடும் நக்கீரர் கூட்டம் ஒரு புறம். மருமகள் உடைத்தால் வெண்குடம் அதையே மகள் உடைத்து விட்டால் மண்குடமாக மாற்றிவிடும் கூட்டமும் இருக்கின்றது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் அரசியல் கட்சிகளையும் சுயேட்சைக் குழுக்களையும் சேர்ந்தவர்கள் களம் இறங்கி உள்ளனர். உங்கள் .நெஞ்சைத் தொட்டு நீங்களே கேட்டுப் பாருங்கள் இந்த சுயேச்சைக் குழுக்களில் எத்தனை பேர் மக்களுக்கு சேவை செய்யும் நோக்குடன் போட்டியிடுகின்றனர்? 99 வீதமான சுயேட்சைகள் சிங்கள தேசத்தின் கைக்கூலிகளாக டம்மியாக நிறுத்தப்பட்டவை. யாழ்ப்பாணம் என்ன நிறம் என்று அறியாத சில சிங்களவர்கள் கூட சுயேட்சையாகப் போட்டியிடுகின்றனர். இந்த டம்மிகள் எல்லாம் வாக்குச்சீட்டை இரண்டு அடிக்கு நீளமாக்கி மக்கள் மனதைக் குழப்பியடித்து வாக்களிக்கப் போகவிடாமல் தடுக்கும் முயற்சியாக களம் இறக்கப்பட்வை. எனவே இந்த சுயேட்சைகளைப் பற்றி யோசிக்காமல் தூக்கி எறிந்து விடுங்கள். அவை பெரும் குப்பைகள்.

எஞ்சிய அரசியல் கட்சிகளைப் பாருங்கள் விரல்விட்டு எண்ணக்கூடிய சில கட்சிகள் நேற்று பெய்த மழைக்கு முளைத்த காளான்கள். அப்படி வடிகட்டி எடுத்தால் மீதமாக இருப்பது இரண்டு மூன்று தான். எல்லாவற்றையும் விட வடக்கு கிழக்கிலும் மக்கள் மனதிலும் நிலையான அழியாத இடத்தைப் பிடித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டுமே ஏனைய கட்சிகளின் தேர்தல் மேடைகளைப் பாருங்கள். எல்லோருமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஏசுவதிலும், குற்றம் சுமத்துவதிலுமே காலத்தைக் கடத்துகின்றனர். தாம் என்ன செய்யப் போகிறோம் என்று எவருமே கூறவில்லை.

எனவே இதுவரை காலமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களுக்காகத் தமிழ்த் தேசியத்திற்காக, நிரந்தர தீர்வுக்காக ஆற்றி உள்ள மேற்கொண்டுவரும் செயற்பாடுகள் எல்லாவற்றையும் நம் மக்கள் நன்கு அறிவார்கள். எனவே உங்கள் நெஞ்சைத் தொட்டு, மனச்சாட்சியைத் தொட்டு கேட்டுக் கொள்ளுங்கள் உங்களுக்காக குரல் எழுப்பியவர்கள் யார்? சிறை சென்றவர்கள் யார்? சொத்து சுகங்கள் எல்லாம் இழந்தவர்கள் யார்? உள்நாட்டிலும் சர்வதேச அரங்கிலும் நமக்காக அன்றும் இன்றும் குரல் எழுப்பியவர்கள் யார்? என்ற கேள்விகளைக் கேட்டுப்பாருங்கள் அங்கே தெட்டத் தெளிவாக உங்களுக்கு கிடைக்கும் ஒரே பதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டுமே என்று. எனவே சிறிதும் தயங்காமல் அதிகாலையில் .சென்று வீட்டுக்கு வாக்களித்து வீட்டுக்கு வந்து நிம்மதியாக இருங்கள் காலையில் உங்களுக்கு நல்ல செய்தி கிட்டும். எல்லாம் நலமாக அமையட்டும்.

1 2 3 4 5 6 7 8 9 10

இது ஒரு கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்

# தமிழர்களே சோரம் போகாதீர்கள் கூட்டமைப்புக்கே வாக்களியுங்கள்

## ஆஸ்திரேலியக் கிளை கோருகின்றது

கொழும்பு, ஓக. 2

அன்பார்ந்த தாயக உறவுகளே! குழப்பங்கள் வேண்டாம். அற்ப சலுகைகளுக்காக சோரம் போக வேண்டாம், தன்மானமுள்ள தமிழர்களாக வாழுங்கள்.

அதற்கு தமிழ்த் தேசியக் கூட்ட மைப்புக்கே வாக்களியுங்கள் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆஸ்திரேலியக் கிளையினர் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

எதிர்வரும் 5 ஆம் திகதி நடைபெறப்போகும் பொதுத்தேர்தலில் ஒன்றுபட்டு வாக்களிப்பது ஒவ்வொரு தாயக மக்களின் கடமை.

சிங்களப் பேரினவாதம் தமிழ் மக்களின் வாக்குப் பலத்தைச் சிதைப்பதற்காகவும் தமிழினத்தின் அடையாளத்தை இல்லாமல் செய்வதற்காகவும் பல சுயேச்சைக் குழுக்களை தேர்தல் களத்தில் இறக்கியுள்ளது. மாற்றம் வேண்டும் என்று சொல்லி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து பிரிந்து சென்றவர்கள் தனிக் கட்சியாகவும் சுயேச்சைக் குழுக்களாகவும் களம் இறங்கியுள்ளார்கள். இத்தகைய செயற்பாடுகளால் உங்கள் வாக்குகள் ஒவ்வொன்றும் வீணடிக்கப்படுகின்றன.

2009 ஆம் ஆண்டு ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னர் தமிழ் இனத்தின் அடையாளமாகவும், தமிழ் மக்களின் ஏக பிரதிநிதியாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருந்து வருகின்றது.

தமிழ் மக்களின் அரசியல் உரிமையை வென்றெடுப்பதற்காக உருவாக்கப்பட்டதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. மக்களின் அங்கீகாரம் பெற்ற ஒரு கட்சியாக கடந்த 18 வருடங்களாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்பட்டு வருகின்றது.

ஆட்சிபீடமேறும் தலைவர்களுடனும் உலகத் தலைவர்களுடனும் தமிழ் இனப் பிரச்சினை தொடர்பாகவும் பல்வேறு சுற்றுப் பேச்சுகளை முன்னெடுத்து வந்த கட்சியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருந்து வருகின்றது.

வரும் காலங்களிலும் தமிழ் மக்களின் நலன் சார்ந்த தீர்வுத் திட்டங்களை அரசுடன் சேர்ந்து முன்னெடுக்க வேண்டிய தேவை இருப்பதனால் எல்லோரும் ஒன்றுபட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களியுங்கள்.

கடந்த காலங்களில் பல்வேறு தலைவர்களுடனும் பேச்சு நடத்தியதன் ஊடாக உலகப் பரப்பில் அறிமுகமான ஒரு கட்சியாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளது. எனவே அன்பார்ந்த தாயக உறவுகளே குழப்பங்கள் வேண்டாம். அற்ப சலுகைகளுக்காக சோரம் போக வேண்டாம், தன்மானமுள்ள தமிழர்களாக வாழுங்கள், உணர்வை இழக்காதீர்கள், கடந்தகால தியாகங்களை மறக்காதீர்கள், தமிழரின் அடையாளத்தை உலகறியச் செய்யுங்கள், அடிப்படைத் தேவை உள்ள ஒன்று உறையுள் (வீடு), தமிழரின் அடிப்படைப் பிரச்சினைக்குத் தீர்வுகாண தேவை வீடு, வீட்டுக்கு வாக்களியுங்கள் வீட்டிலி ருந்து தமிழுணர்வைக் காட்டுங்கள்- என்றுள்ளது. (த)

# சாவகச்சேரியில் இன்று கூட்டமைப்பின் பரப்புரை

கொடிகாமம், ஓக. 2

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பரப்புரைக் கூட்டம் சாவகச்சேரி பஸ் நிலையத்துக்கு அருகாமையில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு சாவகச்சேரி தொகுதிக் கிளைத் தலைவர் தலைமையில் நடைபெறவுள்ளது. பரப்புரைக் கூட்டத்தில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற வேட்பாளருமான மாவை சோ.சேனாதிராசா, சக வேட்பாளர்களான ஈ.சரவணபவன், எம்.ஏ. சுமந்திரன், சி.சிறிதரன், புளொட் தலைவர் த.சித்தார்த்தன், திருமதி சசிகலா ரவிராஜ், பா.கஜதீபன், இ.ஆனல்ட், வே.தபேந்திரன் மற்றும் குருசாமி சுரேந்திரநாதன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (த-159)

பாராளுமன்றத் தேர்தல் 2020

- யாழ் இந்துக் கல்லூரி அன்னையின் பெருமைமிகு புதல்வர்களில் ஒருவன்.
- சமூக சேவைகள் உத்தியோகத்தராக திருகோணமலை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் அர்ப்பணிப்பு மிக்க சேவைகள் ஆற்றியவன்.
- அரச பதவிப் போட்டிப் பரீட்சைகளுக்கு 11 பொதுஅறிவு நூல்களை வெளியிட்டவன்.
- கற்பித்தல் மூலமாகப் பலநூறு பேர் உத்தியோகம் பெற வைத்தவன்.
- யாழ்ப்பாண நினைவுகள் பாகம் 1,2,3 நூல்களை வெளியிட்டு வரலாற்றை ஆவணப்படுத்தியவன்.



வேதநாயகம் தபேந்திரன் 9

(B.Com (Jaf), PGD.PDS (Jaf), M.A (Jaf)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

இலங்கைத் தமிழ் அரசு கட்சி X 9

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட வாக்காளர்களே!
எங்கள் நண்பனை வெற்றிபெறச் செய்யுங்கள்.

யாழ். இந்துக் கல்லூரி மாணவ நண்பர்கள்.

பாராளுமன்றத் தேர்தல் - 2020
யாழ் தேர்தல் மாவட்டம்

X

நேர்மையும் கண்ணியமும் மிகுந்த,
அனுபவமும் வெளிப்படைத்தன்மையும் கொண்ட,
எளிமையான, இலகுவில் அணுகக்கூடியவர்களை
எங்கள் பிரதிநிதிகளாக தெரிவுசெய்வோம்!
(தமிழ் மக்கள் பண்பாட்டுப் பேரவை)



6

தருமலிங்கம்
சித்தார்த்தன்
(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)



7

பாலச்சந்திரன்
கஜதீபன்
(முன்னாள் மாகாணசபை உறுப்பினர்)

1 2 3 4 5 6 7 8 9 10

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (TNA)

# பெண்ணிடம் தவறாக நடந்து கொல்ல முயன்றவர் கைது

மட்டக்களப்பு, ஓக. 2

குடும்பப் பெண்ணை பலாத்காரத்துக்குட்படுத்தி, கொலை செய்ய முயற்சித்த நபரை பொது மக்கள் மடக்கிப் பிடித்து நையப்புடைத்தனர். இந்தச் சம்பவம் மட்டக்களப்பு வாகரைப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது; வாழைச்சேனை பொது விளையாட்டு மைதானத்தில் அமைந்துள்ள பெண்கள் மலசல கூடத்தினுள் சென்ற பெண்ணை அவதானித்த நபர், அவரைப்பின் தொடர்ந்து சென்று பாலியல் பலாத்காரம் செய்ய முயற்சித்துள்ளார்.

வாகரை பால்சேனையைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தாயான 23 வயதான குடும்பப் பெண்ணே வாழைச்சேனைக்கு பொருள்கள் வாங்க வந்த சமயத்தில் இந்த அனர்த்தத்தைச் சந்தித்தார்.

பெண் மலசலகூடத்திற்குள் நுழைந்ததும், சுமார் 22 வயது மதிக்கத்தக்க பிறைதுறைச்சேனையைச் சேர்ந்த இளைஞன் ஒருவன் பின்தொடர்ந்து சென்று, பெண்ணைத் துஷ்பிரயோகம் செய்ய முயன்றுள்ளார்.

இதன்போது இருவருக்குமிடையில் மோதல் ஏற்பட்டது.

காமுகனை அந்த இளம்பெண்ணும் தாக்கியுள்ளார். உரத்த குரலில் உதவிக்கு ஆள்களையும் அழைத்துள்ளார். எனினும், அந்தப் பகுதியில் எவரும் இருக்கவில்லை.

பெண்ணைத்தாக்கி, அவரது துப்பட்டாவால் கழுத்தை நெரித்துள்ளார். சத்தம் கேட்டு, அயல்வீட்டிலிருந்த பெண்ணொருவர் தனது கணவருக்கு தகவல் தெரிவித்தார்.

அவரது கணவர் இன்னொருவருடன் வந்து, கதவைத்தட்டிய போது, போதை இளைஞன் எட்டிப்பார்த்து, வயிறு வலிக்கிறது, அவசரம் என அப்பாவியாகக்கூறி கதவை மீண்டும் தாளிட்டான்.

எனினும், சந்தேகமடைந்த இருவரும் கதவை எட்டி உதைந்தனர்.

இளம்பெண் வாயில் நுரைதள்ளியபடி மயக்கமடைந்திருந்தார்.

உடனடியாக அவர் மீட்கப்பட்டு, மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டார்.

போதை ஆசாமி நையப்புடைக்கப்பட்டார் பாதிக்கப்பட்ட பெண் வாழைச்சேனை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

சம்பவ இடத்துக்கு மட்டக்களப்பு தடயவியல் பொலிஸார் வருகை தந்து விசாரணைகளை மேற்கொண்டனர். (ஐ)

# இயற்கையைக் காப்பதற்கு கடும் நடவடிக்கை

## பாதுகாப்புச் செயலர் கூறுகிறார்

கொழும்பு, ஓக. 2

**இயற்கை இடர்களைக் கட்டுப்படுத்துவது ஒரு கடினமான காரியம் என்ற போதிலும் சட்டத்தைக் கடுமையாக அமுல்படுத்துவதன் மூலம் மனிதனால் உருவாக்கப்படும் அச்சுறுத்தல்களை கட்டுப்படுத்த அரசாங்கம் தன்னாலான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது என்று பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் (ஓய்வு) கமால் குணரத்ன தெரிவித்தார்**

ஒருங்கிணைத்தல் அல்லது பிரதான பொதுச்சேவை விநியோக மூலோபாயத்தினூடாக நிலையான அபிவிருத்தி இலக்குகளை மேம்படுத்தல் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சில் பணிபுரியும் அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்தும் செயலமர்வு பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவித்ததாவது;

நிலையான அபிவிருத்தி இலக்குகள் என்பது, ஒவ்வொரு பெண் மற்றும் பெண் குழந்தைகள் உட்பட நாட்டின் அனைத்து பிரஜைகளினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையிலும் வன்முறையற்ற சூழலில் ஒவ்வொரு குழந்தையும் வளர்வதனை உறுதி செய்யும் வகையிலும் சட்டத்தின் ஆட்சி இடம்பெறும் நாட்டைக் குறிக்கும். இவைகளே, தேசிய பாதுகாப்புக்கு முக்கியத்துவம் அளிக்கும் அரசாங்கத்தின் கொள்கைக் கட்டமைப்பின் கீழ், பாதுகாப்பு அமைச்சின் செயற்பட்டியலில் உள்ளடக்கப்பட வேண்டிய மிக முக்கிய அம்சங்களாகும்.

காலநிலை மாற்றம், சுற்றுச்சூழல் மாசுறுதல் மற்றும் வளங்கள் அழிவடைதல், தொற்று நோய்கள், இயற்கைப் பேரழிவுகள், உணவுப் பற்றாக்குறை போன்ற இயற்கை அச்சுறுத்தல்கள், சட்டவிரோத குடிப்பெயர்வு, துப்பாக்கிப் பாவனை, ஆள் கடத்தல், போதைப்பொருள் கடத்தல் மற்றும் நடுத்தர மற்றும் உயர் தீவிரத்தன்மையான முரண்பாடுகள் போன்ற மனிதனால் உருவாக்கப்படும் அச்சுறுத்தல்கள் என்பன அரசாங்கத்தினால் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயங்களாகும். நாங்கள் அரச அதிகாரிகள் என்றவகையில்எமக்குக்கிடைக்கக்கூடிய அனைத்து வழிகளிலும் எமது முழுமையான ஒத்துழைப்பை தேசிய கொள்கைத் திட்டத்திற்கு வழங்கி கடமைப்பட்டுள்ளோம். எமது அதிகார வரம்புக்குள் காணப்படும் வழிகளை அடையாளம் காண, தற்காலத்திலும் எதிர்காலத்திலும் இவ்வையகம் அதில் வாழும் மக்களின் அமைதியான மற்றும் செழிப்பான வாழ்க்கைக்கான முன்மொழிவுத் திட்டத்தை அளிக்கக்கூடிய நிலையான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பாக நாம் ஒரு நல்ல புரிதலைக் கொண்டிருக்க வேண்டும் என்றார். (ஐ)



# மொழி பெயர்ப்பாளராக சத்தியப்பிரமாணம்



யாழ்ப்பாணம், ஓக. 2

யாழ்ப்பாண மாவட்ட சிரேஷ்ட தொழில் அலுவலகர் கந்தசாமி நாகேந்திரன் சத்தியப்பிரமாண மொழிபெயர்ப்பாளராக (சிங்களம்,தமிழ்) யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற நீதிபதி வி. இராமகமலன் முன்னிலையில் கடந்த மாதம் 9 ஆம் திகதி சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் நீராவியடியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி நாகேந்திரன், ஆரம்பக் கல்வியை மல்லாகம் மத்திய மகா வித்தியாலயத்திலும், உயர்தரத்தை தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும் பயின்றுள்ளார். (ஐ)

# நான்கு கிராமங்களில் தண்ணீர் தாங்கிகள் அமைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 2

நகர அபிவிருத்தி தண்ணீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சின் கீழ் உள்ள தேசிய சமூக தண்ணீர் வழங்கல் திணைக்களத்தினூடாக மேற்கொள்ளப்பட்ட தண்ணீர் விநியோகத்திட்டத்துக்கு அமைக்கப்பட்ட நீர்த்தாங்களிகள், முழுமைப்படுத்தப்பட்டு, யாழ்ப்பாண மாவட்டத்தில் நான்கு கிராமங்களைச் சேர்ந்த மக்களிடம் கையளிக்கப்பட்டன

நகர அபிவிருத்தி தண்ணீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சின் கீழ் உள்ள தேசிய சமூக தண்ணீர் வழங்கல் திணைக்களத்தினூடாக 1000 கிராமங்களுக்கான சுத்தமான கிராமிய குடி தண்ணீர் விநியோக பிரஜா ஜல அபிமானி தேசியத் திட்டம் 2019 ஆம் ஆண்டு அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

இத் திட்டத்தின் கீழ் யாழ் மாவட்டத்தில் ஐந்து திட்டங்களுக்காக நாவலடி அரியாலை கிழக்கு, இருபாலை தெற்கு, சுழிபுரம் கிழக்கு காட்டுப்புலம், வரணி இயற்றாலை, வடலி அடைப்பு பண்டத்தரிப்பு ஆகிய கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டன.

மேற்குறித்த திட்டத்திற்கான கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. கிராமிய நீர் வழங்களுக்காக கட்டுமானப் பணிகளான 30ஆயிரம் லீற்றர் கொள்ளவுடைய நீர்த்தாங்கி நீர்ப்பம்பி அறை மற்றும் குடிநீர் வழங்கலுக்கான குழாய்கள் பொருத்தப்பட்டு பூரணப்படுத்தப்பட்ட நான்கு கிராமங்களான நாவலடி அரியாலை கிழக்கு, இருபாலை தெற்கு, சுழிபுரம் கிழக்கு காட்டுப்புலம், வரணி இயற்றாலை மக்களின் பாவனைக்காக நேற்று முன்தினம் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட நீர்ப் பாவனையாளர் சங்கத்திடம் கையளிக்கப்பட்டது.



இந்த நிகழ்வு உரிய பிரதேச சங்களின் பிரதேச செயலகத்தின் உதவித் திட்டமிடல் பணிப்பாளர்கள் ஆகியோருடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் வட பிராந்திய முகாமையாளர் நு. ஜெகதீசன், தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தின் வட மாகாண பொறியியலாளர் ஐ. நியாந்தன் மற்றும் தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்களத்தின் யாழ் மாவட்ட பொறுப்பதிகாரி வு. பிரசாந்த் என்பவர்களின் தலைமையில் நடைபெற்றது. (ஐ)

# பரப்புரைக் கூட்டத்தில் துப்பாக்கியுடன் ஒருவர் கைது

அம்பாறை, சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புறநகர்ப்பகுதியில் தேர்தல் பரப்புரைக் கூட்டத்துக்கு, துப்பாக்கியை எடுத்து வந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

37 வயதான இறக்காமம் பகுதியைச் சேர்ந்த நபரே கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தேசிய காங்கிரஸ் அணியினரின் தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டிருந்த வேளை, பாய் ஒன்றின் கீழ் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் ரிப்பிட்டர் ரக துப்பாக்கி மற்றும் ஆறு தோட்டாக்கள் மீட்கப்பட்டன. அங்கு கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் துப்பாக்கி மற்றும் தோட்டாக்களை மீட்டனர்.

தேசிய காங்கிரஸ் அணியினரின் வாகனத்தில் துப்பாக்கி மறைத்து வைக்கப்பட்டிருந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரை 3 நாள்கள் தடுத்து வைத்து விசாரணை மேற்கொள்ள சம்மாந்துறை பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (க)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வீடுதான் நீட்சியான பாதுகாப்பு!

பொதுத்தேர்தலுக்கு இன்னும் மூன்று நாள்களே எஞ்சியுள்ளன. மாதங்கள், வாரங்களைக் கடந்து தற்போது நாள்களை எண்ணிக்கொண்டிருக்கின்றோம். வழக்கத்துக்கு மாறாக இம்முறை பொதுத் தேர்தலில் கடும் போட்டி நிலவுகின்றது என்பது வெளிப்படை அவதானிப்பு. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகியவற்றுக்கு இடையில் இம்முறை மும்முனைப் போட்டி நிலவுகின்றது. இந்த மூன்றும் தேசியம், மற்றும் தமிழ் மக்களின் இறைமை சார்ந்த கருத்துக்களை வெளிப்படுத்தி வருகின்றமையாலும், அத்தகைய கொள்கைகளைக் கொண்டுள்ளமையாலும் இவற்றுக்குள் எதைத் தெரிவுசெய்வது என்பதன் மட்டில் தமிழ் மக்களுக்கு இயல்பான குழப்பமொன்று ஏற்பட்டுள்ளது கண்கூடு.

இந்த மூன்று கட்சிகளுக்குள்ளும் தமிழ் மக்கள் எந்தக் கட்சியை தாம் ஆதரிக்க வேண்டும் என்பதில் தீர்க்கமான முடிவெடுக்க வேண்டும். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரும் முன்னாள் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனும் கடந்த சில காலங்களுக்கு முன்னர் ஓரணியில் பயணிப்பதற்காக ஒன்றிணைந்த தரப்புக்கள்தான். பின்னர் இந்த இரு தரப்புகளுக்குள்ளும் எழுந்த தலைமைத்துவப் பதவி, சின்னம், 'ஈகோ' உள்ளிட்ட பல்வேறு சிக்கல்களால் அவை இருவேறு தரப்புக்களாகப் பிரிந்தன. அதுபோன்று கூட்டமைப்பில் இருந்து பிரிந்துசென்ற கட்சிகள் பெரும் கொள்கை மாறுபாடுகளால் பிரிந்து சென்ற கட்சிகளும் அல்ல. ஆசனப்பங்கீடு உள்ளிட்ட அற்ப விடயங்களாலேயே இந்தக் கட்சிகள் பிளவடைந்தன – பிரிவடைந்தன. இத்தகைய கட்சிகளை நம்பி வாக்குகளை வழங்குகின்ற முயற்சியானது மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கிய நிலைக்கு ஒப்பானதாகுமே தவிர வேறொன்றும் இல்லை.

ஆசனப் பங்கீடுகளுக்காகவும், இதர சுயநலக் காரணங்களுக்காகவும் பிளவடைந்த இந்தக் கட்சிகள் நாளை தமிழ் மக்களை தென்னிலங்கைத் தரப்பிடம் அடகு வைக்கமாட்டார்கள் என்பதை எவ்வாறு நம்புவது ?. ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தென்னிலங்கைத் தேசியக் கட்சிகளின் கபட நாடகத்துக்கும், பேரம் பேசலுக்கும் எடுபது என்பதை பல தடவைகள் நிரூபித்துவிட்டது. நல்லாட்சி அரசின் காலத்தில் கூட்டமைப்பு நினைத்திருந்தால் அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொண்டு தேசிய அரசியலுக்குள் சென்றிருக்க முடியும். அத்துடன் இணக்க அரசியலையும் நடத்தியிருக்க முடியும். ஆனால் கூட்டமைப்பு தன் பாதையில் இருந்து மாறாமல் பற்றுறுதியுடன் தொடர்ந்து பயணித்து வந்துள்ளமை வெளிப்படையானது.

கொள்கையில் இருந்து விடுபட்டுச் செயற்பட்ட பியசேனா, வியாழேந்திரன் உள்ளிட்டவர்களை கட்சியில் இருந்து நீக்கி மேற்கொண்ட ஒழுக்காற்று நடவடிக்கைகளின் மூலம் தன் பயணம் தடம் மாறாதது என்பதைக் கூட்டமைப்பு உரத்துச் சொல்லியுள்ளது. எனவே தமிழ் மக்கள் பொதுத் தேர்தலில் கூட்டமைப்புக்கு தமது ஏகோபித்த ஆதரவை வழங்க வேண்டியது காலத்தின் கட்டாயம். அதற்குப் பதில் இது, இதற்குப் பதில் அது என்ற பரீட்சார்த்த முயற்சிகளை மேற்கொள்வதற்கு இது நேரமல்ல என்பதை அனைவரும் புரிந்துகொள்வோம். வாக்களிப்பின் முன்னும், வாக்களிப்பின் போதும், வாக்களிப்பின் பின்னரும் வீடு என்ற சிந்தனையே எம்மில் இருக்கட்டும். அதுவே தமிழர்களுக்கு நீட்சியான பாதுகாப்பு.

# தோல்வியடைந்த நாடு இலங்கை!

## இரா.சம்பந்தன் தெரிவிப்பு

வவுனியா, ஓக.2

**இந்த நாட்டின் அரசியல் சாசனத்தை ஜனநாயகத் தீர்ப்பின் ஊடாக தமிழ் மக்களும், சிங்கள மக்களும் நிராகரித்திருக்கின்றார்கள். இந்த நாட்டில் சட்டபூர்வமான ஒரு அரசியல் சாசனம் இல்லை.அந்தவகையில் இலங்கை ஒரு தோல்வியடைந்த நாடு.**



இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார். நேற்று வவுனியாவுக்குச் சென்றிருந்த அவர், அங்குள்ள தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் நடந்த கலந்துரையாடலில் கருத்துத் தெரிவித்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

நாளுமன்றத் தேர்தல் ஒன்று இடம்பெறப் போகின்றது. நாட்டில்புதிய அரசியல் சாசனம் ஒன்று உருவாக்கபட்டு அதனூடாக ஆட்சி அதிகாரங்கள் தொடர்பான விடயங்கள் பரிசீலிக்கபட்டு அந்தந்தப் பிராந்தியங்களில் வாழ்கின்ற மக்கள் விசேடமாக வடக்கு, கிழக்கில் வாழ்கின்ற மக்கள் தங்களுடைய நாளாந்த விடயங்களை தாமே நிறைவேற்றுவதற்கான சூழல் உருவாக்கப்படவேண்டும்.

அதிகாரங்கள் மத்தியில் குவிந்திருக்காமல் சமஸ்டிகோட்பாட்டின் அடிப்படையில் அவை பரவலாக்கப்பட்டு உள்ள சுயநிர்ணய அடிப்படையில் அந்தத் தீர்வுகள் வழங்கப்படவேண்டும். 13ஆம் திருத்தச் சட்டத்தை எமது பிரச்சினைக்கான முழுமையான தீர்வாக நாம் ஏற்றுக் கொள்ளவில்லை. அதில் பல குறைகள் இருக்கின்றன. அதி உச்ச அதிகாரப் பகிர்வின் அடிப்படையில் இந்தப் பிரச்சினை தீர்க்கபட வேண்டும். அந்தந்தப் பிராந்தியங்களில் வாழ்கின்ற மக்கள் தமது தலைவிதியை தீர்மானிக்ககூடிய சூழல் சட்டரீதியாக ஏற்படுத்தப்படவேண்டும்.

நாம்கடந்த ஆட்சியில்பல முன்னேற்றகரமான விடயங்களை முன்னெடுத்தோம். கட்சிகள் மத்தியில் ஒருமித்த கருத்துக்கள் காணப்பட்டது. ஆனால் துரதிஸ்டவசமாக அந்த அரசாங்கம் தொடர்ந்துஆட்சி புரியக்கூடிய சூழல் இருக்கவில்லை. ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. அதனால் அந்தக் கருமத்தை தொடரமுடியவில்லை. ஆனால் விரைவில் தொடருவோம், தொடரவேண்டும்.பு திய பாராளுமன்றம் கூடியபின்னர் அரசியல் சாசனம் தொடர்பாகவும், அதிகாரப் பரவல் தொடர்பாகவும் பேச்சு நடைபெறவேண்டும்.

ஒரு மக்கள் குழாமுக்கோ அல்லது தனித்தேசிய இனத்திற்கோ சுயநிர்ணய உரிமை நிச்சயம்உண்டு. அது மறுக்கப்பட்டால் அவர்களுக்கு வெளியக சுயநிர்ணய உரிமை வழங்கப்படவேண்டும். அதுதான் நிலமை. அது எங்களது பிறப்புரிமை. நாம் இந்த உலகில் பிறந்த வுடனேயே அந்த உரிமை எமக்கு உருவாகின்றது. அது நிறைவேற்றப்படவேண்டும். அதற்காக 70 வருடங்களாக நாம் பயணிக்கின்றோம். இந்தமுறை தேர்தலில் 20 ஆசனங்களை நாம் பெறுவோம் என்று எதிர்பார்கின்றோம். வன்னியில் உள்ள ஆறு ஆசனங்களில் 5 இணை நாம்பெறவேண்டும். அது வன்னி மக்களின் கடமை. யாழ்ப்பாணத்தில் 6 பேரை பெறவேண்டும்.மட்டக்களப்பில் 4 பேரையும் திருமலையில் 2 பேரையும் பெறுவதற்கான முயற்சிகளை எடுக்கின்றோம் - என்றார்.(எ-110)

## தலைவருடைய கட்டமைப்பான கூட்டமைப்பு வெல்ல வேண்டும்

### கடற்புலிகளின் முன்னாள் தளபதி தெரிவிப்பு

தலைவரின் கட்டமைப்பான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற வேண்டும் கடற்புலிகளின் முன்னாள் தளபதி அச்சுதன் தெரிவித்துள்ளார்

மன்னார் நகர மண்டபத்தில் நேற்றுக் காலை பத்து மணியளவில் நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து பிரிந்து போய் உருவாக்கப்பட்ட கட்சிகள் அனைத்தையும் உடைத்து நாங்கள் ஒன்றுபட வேண்டும். மக்களை ஒன்றுபடுத்தும் சக்தி தமிழ் தேசியக் கூட்டமைப்பிடம் தான் உள்ளது. அதை விட்டு நாங்கள் வேறு வழியில் எவருக்கும் பின்னால் போவோமாக இருந்தால் எமக்கான வாழ்வு இல்லை நான் இதை கடந்த சில வருடங்களாக வலியுறுத்தி வந்துள்ளேன்

அதாவது அண்ணணின் கட்டமைப்பை விட்டுவிலகுவோமாக இருந்தால் எமது இருப்பு என்பது கேள்விக்குறியே ஆகவே மக்களாகிய நீங்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பை வெற்றி பெறச் செய்ய வேண்டும்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்சிக்குள் பிரச்சினை இருக்கிறது, அதை நாங்கள் தற்போது பேச முடியாது எமது மனதுக்குள் இருக்கும் கவலைகள் கோபங்களை இதில் கொட்டித் தீர்க்க இயலாது. தற்போது எமது அவசரத் தேவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற வேண்டும்

அதன் பின் நாங்கள் சரியான ஒரு பாதையைத் தெரிவுசெய்து கொண்டு தமிழ் மக்களுக்கான சுய கௌரவ வாழ்வை, கட்டமைப்பை உருவாக்க வேண்டும். அதற்காக இந்த தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வெற்றிபெறச் செய்வது தமிழ் மக்களின் கடமை. என்றார்.(எ)

## இ.தொ.காவின் முன்னாள் பொதுச்செயலாளர் காலமானார்

கொழும்பு,ஓக.2

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முன்னாள் பொதுச் செயலாளர் எம்.எஸ். செல்லசாமி தமது 95 ஆவது அகவையில் நேற்று காலமானார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸில் முன்னாள் அமைச்சர் சௌமியமூர்த்தி தொண்டமான் தலைவராக இருந்த காலத்தில், அந்த காங்கிரசின் பலமிக்க செயலாளராக செல்லசாமி விளங்கினார்.

செல்லசாமி, தலவாக்கலை, வட்டகொடை மடக்கும்புரயைப் பிறப்பிடமாகக்கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (க)




# குழந்தைப் பேறுக்கு சேர்க்கப்பட்ட பெண் சாவு

## மருத்துவமனையில் குழப்பம்

கல்முனை, ஓக. 2

குழந்தை பேறுக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பெண் உயிரிழந்தமை தொடர்பாக கல்முனை ஆதார மருத்துவமனை முன்பாக நேற்று அமைதியின்மை ஏற்பட்டது.

மருத்துவமனைக்கு முன்னால் ஒன்றுகூடிய உயிரிழந்த பெண்ணின் உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் இணைந்து நீதியை பெற்றுத்தரக் கோரியும், மருத்துவரின் அசமந்த நிலைமையைக் கூறியும் அமைதியின்மையை ஏற்படுத்தினர்.

நேற்றுமுன்தினம் வெல்லாவெளி பாக்கியல்ல சின்னவத்தை பகுதியை சேர்ந்த 34 வயதான மாசிலாமணி சிவராணி குழந்தை பேறுக்காக கல்முனை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் அவருக்கு ஆண் குழந்தை பிறந்துள்ளது.

தொடர்ந்து குழந்தையை பிரசவித்த தாய்க்கு திடீரென ஏற்பட்ட உடல்நலக்குறைவை அடுத்து மீண்டும் அவருக்கு அறுவைச்சிகிச்சை மேற்கொள்ளப்பட்டதாகவும், இந்தச் சிகிச்சையால் தான் தாய் இறந்ததாகவும் உறவினர்கள் தெரிவித்து மருத்துவமனையின் முன்னால் அமைதியின்மையை ஏற்படுத்தினர்.

அமைதியின்மையை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் 5 பேர் கல்முனை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து செல்லப்பட்டனர் இறந்த தாய்க்கு ஏக்கனவே 3 பிள்ளைகள் உள்ளனர். (ஐ)

# ஹெரோய்ன் வைத்திருந்த இளைஞன் கைது

யாழ்ப்பாணம், ஓக. 2

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இருந்து ஹெரோய்ன் போதைப் பொருளுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

2 கிராம் 800 மில்லி கிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் அவரது உடைமையிலிருந்து மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காங்கேசன்துறை பொலிஸ் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் தலைமையில் இயங்கும் விசேட குற்றத்தடுப்புப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமையவே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார்.

போதைப்பொருளை விற்பனைசெய்து பணம் சம்பாதித்ததாகக் கூறப்படும் இடத்தில் 20 ஆயிரத்து 210 ரூபா பணமும் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் மேலதிக விசாரணைக்காக பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ஐ-25,26)



# நாம் ஒன்றிணைந்து செயற்பட்டால் இந்த அரசைத் தோற்கடிக்க முடியும்

## கூறுகின்றார் ரணில் விக்கிரமசிங்க

**கொழும்பு, ஓக. 2**

**ஐக்கிய தேசியக் கட்சியின் வரலாற்றில் பல்வேறு பிரச்சினைகள், முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. எனினும், எவரும் பிரிந்து சென்று தனிக்கட்சியை உருவாக்கவில்லை. அது ஐக்கிய தேசியக் கட்சியினரின் நடைமுறையல்ல. நாம் ஒன்றிணைந்து செயலாற்றினால் இந்த அரசைத் தோற்கடிப்பதற்கான வாய்ப்பு ஏற்பட்டிருக்கும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**



யக்கலவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பரப்புரைக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையின் மிகவும் பழமை வாய்ந்த கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி கடந்த காலப்பகுதியில் நடைபெற்ற 15 பொதுத்தேர்தல்களிலும் போட்டியிட்டிருக்கின்றது. நாட்டில் வேறெந்தவொரு கட்சிக்கும் இத்தகைய வரலாறு இல்லை. ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்தமையால் இந்தத் தேர்தலில் வெற்றி பெற்று எவ்வாறேனும் நாடாளுமன்றுக்குள் நுழைய விரும்பு கின்றோம் என்று சிலர் நினைக் கின்றார்கள். ஆனால் இந்தத் தேர்தலுக்கு எவ்வாறேனும் நேரடியாக முகங்கொடுக்க வேண்டும் என்பதே எனது நிலைப்பாடாக இருந்தது.

கொரோனா வைரஸ் பரவலால் நெருக்கடி நிலையொன்று உருவாகும் என்று எவரும் எதிர்பார்த்திருக்கவில்லை. கட்சியைவிட்டுச் சென்ற சிலர், கொரோனா வைரஸ் பரவல் தொடர்பில் முன்னரே அறிந்திருந்தால் கட்சியிலிருந்து பிரிந்து சென்றிருக்க மாட்டோம் என்று இப்போது என்னிடம் கூறுகின்றார்கள். ஏனெனில் இந்த பாரதூரமான நெருக்கடி நிலைக்கு முகங்கொடுக்கக் கூடிய இயலுமை ஐக்கிய தேசியக் கட்சிக்கு மாத்திரமே இருக்கின்றது.

பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்கு முன்னர் கட்சிக்குள் காணப்பட்ட பிரச்சினைகளுக்கும், கட்சிக்கு வெளியில் காணப்பட்ட பிரச்சினைகளுக்கும் முகங்கொடுக்க வேண்டிய நிலை எனக்கு ஏற்பட்டது. எதுஎவ்வாறெனினும் தற்போது நாங்கள் 16 ஆவது தடவையாகவும் பொதுத் தேர்தலில் போட்டியிடுகின்றோம். இம்முறையும் அனைவரையும் ஒன்றிணைத்துக்கொண்டு பயணிப்பதற்கு நான் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டேன். பிரதமர் வேட்பாளராகப் போட்டியிட விரும்புபவர்களுக்கு அந்த வாய்ப்பை வழங்குவதற்குத்தயாராக இருந்தேன். ஆனால் யானை சின்னத்திலேயே களமிறங்க வேண்டுமென்றும், அதனை மாற்றமுடியாது என்றும் குறிப்பிட்டேன்.

ஆனாலும் குறித்தவொரு பகுதியினர் கட்சியிலிருந்து வெளியேறிச் சென்றுவிட்டு, தற்போது அவர்களே உண்மையான ஐக்கிய தேசியக் கட்சிக்காரர்கள் என்று கூறுகின்றனர். எமது ஐக்கிய தேசியக் கட்சி இலங்கையின் பல்வகைமைத்தன்மையை அதாவது சிங்கள பௌத்தர்கள் உள்ளிட்ட அனைத்து இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கட்சியாகும்- என்றார். (த)

## ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவின்றி ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியமைக்குமாம்

ஐக்கிய மக்கள் சக்தியினால் தனியாக ஆட்சியமைக்கக் கூடிய வாய்ப்பு இருப்பதாகத் தெரிவித்த அந்தக் கட்சியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் எஸ்.எம்.மரிக்கார், ஐக்கிய தேசியக் கட்சி எவ்வளவுதான் முயற்சித்தாலும் அவர்களால் 5 ஆசனங்களை மாத்திரமே பெற்றுக்கொள்ள முடியும் என்றும் குறிப்பிட்டார். ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நிரந்தரமான வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்காக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவுக்கு வாக்களித்த மக்களின் வாக்குகள், மிளகாய்த்தூள் குழுவினருக்கும், மதுபான விற்பனையாளர்களுக்கும் கிடைக்கப் போவதில்லை.

அந்நிய செலாவணியைப் பெற்றுக் கொடுத்தும், கொரோனா வைரஸ் பரவல் காரணமாக நாட்டுக்குள் வரமுடியாமல் இருப்பவர்களின் வாக்குகளும் அரசுக்குக் கிடைக்காது. மற்றும் அங்கவீனம் அடைந்த சிப்பாய்களை அழைத்து வந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுத்திவிட்டு , அவர்களின் ஆட்சியில் 55 வயதுக்குப் பின்னர் சம்பளத்தைப் பெற்றுக் கொடுக்காமல் இருக்கும் அரசுக்கு அவர்கள் வாக்களிக்கப்போவதில்லை. இதேவேளை பொருள்களின் விலையும் ,ஔடதங்களின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

வெற்றிக்கு ஆதரவளித்த 69 இலட்சம் பேரில் 30 வீதமானோரின் வாக்குகள் அரசுக்குக் கிடைக்கப் போவதில்லை.

இந்த வாக்குகளில் 3 வீதமான வாக்குக்ள் விக்கி குழுவுக்கும், 7 வீதமான வாக்குகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் கிடைத்தாலும், எஞ்சிய தொகை எமக்கே கிடைக்கப்பெறும். அப்போது நாங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்த்துக் கொள்ளாமலேயே ஆட்சியமைப்போம். மக்கள் எப்போதும் பழைய சிந்தனைகளையே கொண்டிருப்பவர்கள் அல்லர், அவர்கள் மாற்றமடைந்துள்ளனர் - என்றார். (த)



# வரலாற்றில் அதிக செலவுடன் நடக்கவுள்ள தேர்தல் இதுவே

## தேர்தல் ஆணைக்குழு சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஓக. 2**

**பொதுத் தேர்தல் தான் இலங்கை வரலாற்றில் இதுவரை இடம்பெற்றுள்ள தேர்தல்களில் மிகவும் செலவுகூடியதாக இருக்கும் என்று தேர்தல் ஆணையத்தின் அதிகாரி ஒருவர் சுட்டிக்காட்டியுள்ளார்.**

இந்தத் தேர்தலுக்கான செலவாக ஆயிரம் கோடி ரூபாவைத் தாண்ட விடாமல் தடுப்பதற்கு சகல முயற்சிகளையும் தாங்கள் எடுத்து வருவதாக தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

கொவிட்19 தாக்கம் காரணமாக பல்வேறு சுகாதார கட்டுப்பாடுகளைப் பேணி நடைமுறைப்படுத்த வேண்டி உள்ளது. இதுவே தேர்தல் செலவு அதிகரிப்புக்கு முக்கிய காரணமாம். மேலதிக ஊழியர்களின் சேவை, ஊழியர்களுக்கான முகக் கவசம், கிருமி நீக்கி என்பன உட்பட பல்வேறு சுகாதார வழிகாட்டல்கள் மிகக் கண்டிப்பாக பேணப்பட உள்ளன என்று தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார். தற்போது தனிமைப்படுத்தலின் கீழ் உள்ளவர்களுக்கு பொதுச் சுகாதார அதிகாரிகளின் பரிந்துரைப்படி வாக்களிக்க சந்தர்ப்பம் வழங்கப்படும். அதற்கமைய அவர்களுக்கு வாக்குச்சாவடிகளில் புறம்பான நேரம் ஒதுக்கப்படும். மேலும் வாக்களிப்பு நேரத்தை மாலை ஐந்து மணிவரை நீடிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது. (த)

# இலங்கை- சீனா இடையேயான உறவு வலுவடைந்து வருகின்றது

## கூறுகின்றார் பாதுகாப்புச் செயலர்

கொழும்பு, ஓக. 2

அரசியல், பொருளாதாரம், கலாசாரம், கல்வி மற்றும் பாதுகாப்பு ஆகிய துறைகளில் பரஸ்பர நம்பிக்கையின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்ட சீனாவுக்கும் இலங்கைக்குமிடையிலான வரலாற்று ரீதியான உறவு மேலும் வலுவடைந்து வருவதாக பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் (ஓய்வு) கமால் குணரட்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பு, சங்கிரிலா ஹொட்டலில் நேற்று நடைபெற்ற சீன தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழக முன்னைநாள் அதிகாரிகள் சங்கத்தின் ஆரம்ப நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த சர்வதேச நிகழ்வில் இலங்கையுடன் சீனா கொண்டுள்ள உறவை நிச்சயப்படுத்தியுள்ளது. கடினமான வேளையில் கை கொடுப்பவனே உண்மையான நண்பன். பௌத்த மதம், வர்த்தகம், உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் உலகளாவிய இணைப்பு உட்பட பல வழிவகைகளில் சீனா இலங்கையின் வரலாற்று ரீதியான நட்பு அணியாக தடம் பதித்துள்ளதாக தெரிவித்தார்.

அண்மைக்காலங்களில் உள்நாட்டிலும் உலகளாவிய மட்டத்திலும் நாடு எதிர்நோக்கிய கடினமான வேளையில் சீனாவால் வழங்கப்பட்ட ஒத்துழைப்பை இலங்கையர்கள் ஒருபோதும் மறக்க மாட்டார்கள்.

நாட்டில் தற்போது செயலிழக்கச் செய்யப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின் போது எதிரிகளுக்கு எதிராக தலை சிறந்த திட்டங்கள் மற்றும் உத்திகளைக் கையாள போரியல் நிபுணத்துவம் வழங்கி பயிற்சி அளித்தமைக்காக சீன அரசுக்கும் சீன தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழகத்துக்கும் தனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். என்றார். (த)

# தனிமைப்படுத்தப்பட்ட பெண்ணுக்கு பிரசவம்!

## தாயும் சேயும் நலம்



சவூதி அரேபியாவில் இருந்து, அழைத்து வரப்பட்டு, விடத்தல் பளையில் தனிமைப்படுத்தலுக்குள்ளான கர்ப்பவதி ஒருவர் குழந்தை ஒன்றை நேற்றுமுன்தினம் பிரசவித்துள்ளார்.

அந்தக் குழந்தை சுகதேகி யாக இருப்பதாக, யாழ்.போதனா மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. சவூதி அரேபியாவில் பணிப்பெண்ணாக பணியாற்றிய திருகோணமலை கிண்ணியா பிரதேசத்தைச் சேர்ந்த பெண்ணொருவர் இலங்கைக்கு அழைத்துவரப்பட்டு, யாழ்ப்பாணம் விடத்தல்பளை கொரோனா தனிமைப்படுத்தல் நிலையத்தில், தனிமைபடுத்தப்பட்டிருந்தார்.

இந்நிலையில் கடந்த வியாழக்கிழமை, அவருக்குப் பிரசவவலி ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து அவர் இராணுவத்தினரால், யாழ்.போதனா மருத்துவமனைக்கு அழைத்துவரப்பட்டு, அங்குள்ள கொரோனா தனிமைப்படுத்தல் சிகிச்சை நிலையத்தில் குழந்தையை நேற்றுப் பிரசவித்துள்ளார். மகப்பேற்றின் பின்னர், குழந்தையும் தாயும் நலமாக இருப்பதாகவும், மருத்துவர்கள் தெரிவித்தனர். சிகிச்சை விடுதியில் தனிமைப்படுத்தல் சிகிச்சைக்காக எவரும் அற்ற நிலையில், தனியாக, கண்ணாடி பொருத்தப்பட்ட தனியான விடுதியில் இந்தத் தாய்க்கும் சேய்க்கும் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. (அ-106)

## 25 கோடி பெறுமதியான

# ஹெரோய்னுடன் இளைஞர் கைது

கொழும்பு, ஓக.1

கொழும்பு வெல்லம்பிட்டிய பகுதியில் இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலில், இரண்டு மாடி வீடொன்றில் வைத்து இளைஞர் ஒருவர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அவ் வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 25 கோடி ரூபாவுக்கு அதிக பெறுமதியான 25 கிலோ கிராமுக்கு மேற்பட்ட ஹெரோய்ன் போதைப்பொருள் மற்றும் 3.8 ரக ரிவோல்வர் துப்பாக்கி என்பன அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

ஹெரோய்ன் கைப்பற்றப்பட்ட வீடு இந்தியாவுக்கு தப்பிச்சென்றுள்ள பாதாள உலகக்குழு உறுப்பினரான புகுடு கண்ணா என்பவரது தம்பியின் வீடு எனத் தகவல் கிடைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் கைதுசெய்யப்பட்டவர் கொம்பனித் தெருவைச் சேர்ந்த 25 வயதான நபர் எனவும், மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி3)

# யாழ். விவசாய திணைக்களத்தினால் மிளகாய் விதைகள் வழங்கல்

யாழ்ப்பாணம், ஓக.2

யாழ் குடாநாட்டில் மிளகாய் செய்கையில் ஈடுபடுபவர்களுக்கு இலவசமாக மிளகாய் விதைகள் வழங்கப்பட்டுள்ளன.

எம்.ஐ2, கே.ஏ.2 ஆகிய இனத்தைச் சேர்ந்த நூறு கிலோ வரையிலான மிளகாய் விதைகள் செய்கையாளர்களுக்கு விவசாய திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்டு உள்ளன. இதேவேளை, யாழ் மாவட்டத்தில் எதிர்வரும் மாதங்களில் பச்சை மிளகாயின் விலை குறைவடையலாம் என்று விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (ரி3-17)

# பெரிய வெங்காய வரி அதிகரிப்பு

கொழும்பு, ஓக.2

பெரிய வெங்காயத்துக்கான இறக்குமதி வரி நிதி அமைச்சினால் நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, ஒரு கிலோகிராம் பெரிய வெங்காயத்துக்கு அறவிடப்படும் விசேட பண்டங்களுக்கான வரி 15 ரூபாவிலிருந்து 50 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த வரி அதிகரிப்பு நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் அமுலுக்கு வந்துள்ளது என நிதி அமைச்சு அறிவித்துள்ளது. (அ)

# விமல் வீரவன்சவுக்கு வாக்களியுங்கள் என்று கூறும் தமிழர்கள் துரோகிகளே!

## கூறுகிறார் பழனி திகாம்பரம்

கொழும்பு, ஓக. 2

கொழும்பு வாழ் தமிழர்கள் மனோ கணேசனுக்கு வாக்களிக்க வேண்டாம். விமல் வீரவன்சவுக்கு வாக்களியுங்கள் என்று தேர்தல் பரப்புரை செய்யும் தமிழர்கள், தமிழ் இனத்தின் துரோகிகளாகக் கருதப்படுவார்கள் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

கொழும்பு வாழ் மலையக இளைஞர்களுடனான சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மலையக மக்கள் தொடர்பில் அப்பா கனவு கண்டார் என்று குறிப்பிடுகிறார்கள். குறுகிய காலத்தில் கனவுகளை முடிந்த வரை நாங்கள் நிறைவேற்றினோம்.



மலையகத்தில் நாங்கள் செய்த சேவைகளைத் தொடர்ந்து முன்னெடுக்க மக்கள் மீண்டும் அதிகாரத்தை வழங்க வேண்டும். பொதுத்தேர்தல் மலையகத்துக்கு எவ்வளவு முக்கியமோ அதுபோலவே, கொழும்பு வாழ் தமிழ் மக்களுக்கும் முக்கியமான தேர்தல். இந்நிலையில் கொழும்பு வாழ் தமிழர்கள் மனோ கணேசனுக்கு வாக்களிக்கக் கூடாதெனவும் அமைச்சர் விமல் வீரவன்சவுக்கு வாக்களிக்க வேண்டுமெனவும் கூறும் கொழும்பு வாழ் தமிழர்கள் தமிழினத்தின் துரோகி களாகவே கருதப்படுவார்கள். தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் சிறந்த தலைவர். பொதுத்தேர்தலில் அவர் வெற்றிபெறுவது அல்லது தோல்வியடைவது பிரச்சினை இல்லை. நுவரெலியா மாவட்டத்தில் தமிழ்ப் பிரதிநிதித்துவம் அதிகரிக்க வேண்டும். இ.தொ.காவின் வேட்பாளர் கள்கூட வெற்றிபெற வேண்டும் என்றே நான் நினைக்கிறேன். ஆனால் அவர்கள் நான் தோல்வியடைய வேண்டும் என்றே நினைக்கிறார்கள். நான் அமைச்சராகப் பதவி வகித்த காலத்தில் எனது உறவினர்கள் எவருக்கும் எனது அமைச்சில் தொழில் வழங்கவில்லை. மலையகத்தில் நான் இதுவரையில் செய்த சேவையை தொடரவே அதிகாரத்தைக் கேட்கிறேன்- என்றார். (த)

# சுகாதார முறைகளற்ற தேர்தல் பிரசாரங்கள்!

## பவ்ரல் அதிருப்தி

சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றா மல் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுப டும் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன என்று தேர்தல் கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். தமக்கு கிடைத்த முறைப்பாடுகளில் இத்தகைய முறைப்பா டுகளே அதிகமாக உள்ளன என்று பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித் துள்ளார்.

இதுவரை தேர்தலுடன் தொடர்புடைய 1950க்கும் அதிக முறைப்பாடுகள் கிடைத் துள்ளன என்று அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, தேர்தலுடன் தொடர்புடைய 68க்கும் அதிக முறைப்பாடுகள் கிடைத் துள்ளன என்று தேர்தல் முறைகேடு கண் காணிப்பு மத்திய நிலையத்தின் தேசிய இணைப்பாளர் மஞ்சுள கஜநாயக்க தெரி வித்துள்ளார்.

இந்த நிலையில், தேர்தல் பிரசாரங்க ளுடன் தொடர்புடைய 1460 முறைப்பாடு கள் கிடைத்துள்ளன என தேசிய தேர்தல்கள் கண்காணிப்பு மத்திய நிலையம் தெரிவித் துள்ளது. (ரி1)












# தமிழ்த் தேசியமும் மக்கள் பணியுமே என் மூச்சு!

## மனம் திறக்கிறார் சரவணபவன்



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், உதயன் குழுமத் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.–கிளிநொச்சி மாவட்ட வேட்பாளருமான ஈஸ்வரபாதம் சரவணபவன் உதயனுக்கு வழங்கிய செவ்வி இது.

நேர்கண்டவர் : இரா.புத்திரசிகாமணி

**கேள்வி: மக்கள் பேராதரவுடன் இரண்டுமுறை நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்ட நீங்கள் இம்முறை மூன்றாவது தடவையாகவும் களம் இறங்கி உள்ளீர்கள். இம்முறை தேர்தல் களம் எப்படியுள்ளது?**

**பதில்** : ஊடகத்துறையின் மூலம் தமிழ் மக்களுக்காகவும் தமிழ் தேசியத்துக்காகவும் தளராது செயற்பட்டமைக்காக, மக்கள் முதல்முறையாக என்னைத் தெரிவு செய்தனர். இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி எம்மக்களுக்கு நான் செய்த நலன்புரி மற்றும் அபிவிருத்திப் பணிகளுக்காக இரண்டாம் முறையாகவும் தெரிவு செய்தனர். இதன் மூலமாக எனது பிரதேசத்தில் பெரும் அபிவிருத்திப் பணிகளை செய்துள்ளேன். பாடசாலைகள்,கோயில்கள், பாதைகள்,சனசமூக நிலையங்கள், விளையாட்டுக் கழகங்கள், முன்பள்ளிகள்,மகளிர் அமைப்புகள் போன்றவற்றுக்கு என்னாலான எல்லா உதவிகளையும் செய்துள்ளேன். இதனால் செல்லும் இடங்களில் எல்லாம் என்னை அன்புடன் வரவேற்கின்றனர். ஆதரவை வெளிப்படுத்துகின்றனர். எனது மக்கள் என்னை வெற்றி பெறச் செய்வார்கள். வெற்றிபெறுவேன் என்ற பெருநம்பிக்கை எனக்குண்டு.

**கேள்வி:கடந்த 36 வருடங்களாக ஓர் ஊடகப் போராளியாகவும் அரசியல் வாதியாகவும் இரு முகங்களுடன் செயற்பட்டு வருகின்றீர்கள். மக்கள் மத்தயிலும் செல்வாக்குண்டு சர்வதேச அரங்கிலும் அங்கீகாரம் பெற்றுள்ளீர்கள். பல சாதனைகளைச் செய்துள்ளீர்கள். அப்படி இருந்தும் உங்களுக்கு எதிராக சிலர் அவதூறுகளையும், வதந்திகளையும் பரப்புகின்றனர். இது பற்றி..?**

**பதில்**:காய்க்கும் மரத்துக்குத்தானே கல்லடி விழும். ஆனாலும் மரம் அதைப்பற்றி அலட்டிக் கொள்வதில்லை. அதேவேளை நன்றி உள்ள ஜீவன்கள் ஊளையிடுகின்றமையைப்பற்றி நான் அக்கறை கொள்வதில்லை. அதுதான் சரவணபவன். நான் என்ன செய்தேன் என்பது மக்களுக்கு மிக நன்றாகவே தெரியும். அதனால் தான் இரண்டு தடவைகள் வாக்கிட்டு என்னைத் தங்கள் பிரதிநிதியாக்கி நாடாளுமன்றத்துக்கு அனுப்பினார்கள். அவர்களின் நம்பிக்கையைப் பொய்ப்பிக்காமல் பொறுப்பான ஒரு மக்கள் பிரதிநிதி ஆற்றவேண்டிய கடமைகளையெல்லாம் நான் இம்மியும் பிசகாது செய்திருக்கிறேன் என்ற மனத்திருப்தி எனக்குண்டு.சொல்லைவிட செயலே சிறந்த ஆயுதம். சிலர் என்னைப் பற்றி அவதூறு செய்தே காலத்தைக் கழிக்கிறார்கள். நானோ அதே காலத்தில் மக்கள் பணியில் என் காலத்தைப் பயனுள்ளதாக்குகிறேன். இதுதான் அவர்களுக்கும் எனக்குமுள்ள வித்தியாசம்.

காய்க்கும் மரத்துக்குத்தானே கல்லடி விழும். ஆனாலும் மரம் அதைப்பற்றி அலட்டிக் கொள்வதில்லை. அதேவேளை நன்றி உள்ள ஜீவன்கள் ஊளையிடுகின்றமையைப்பற்றி நான் அக்கறை கொள்வ தில்லை.அதுதான் சரவண பவன். நான் என்ன செய்தேன் என்பது மக்களுக்கு மிக நன்றாகவே தெரியும். அதனால் தான் இரண்டு தடவைகள் வாக்கிட்டு என்னைத் தங்கள் பிரதிநிதியாக்கி நாடா ளுமன்றத்துக்கு அனுப்பினார்கள். அவர் களின் நம்பிக்கையைப் பொய்ப் பிக்கா மல் பொறுப்பான ஒரு மக்கள் பிரதிநிதி ஆற்றவேண்டிய கடமைகளையெல்லாம் நான் இம்மியும் பிசகாது செய்திருக்கி றேன் என்ற மனத்திருப்தி எனக்குண்டு.

**கேள்வி :உங்களுடைய ஊடகமான உதயன் தொடர்ச்சியாக 40 தடவைகளுக்கு மேல் அதிகாரத் தரப்புகளின் தாக்குதல்களுக்கு இலக்காகி இருக்கிறது. உதயனின் ஊழியர்களும் இந்தத் தாக்குதல்களில் கொல்லப்பட்டுள்ளனர். இந்தத் தாக்குதல்களில் உதயன் நிறுவனத்துக்கும், உங்களுக்கும் பல கோடிகளுக்கு மேல் இழப்பும் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக என்ன நடவடிக்கை எடுத்துள்ளீர்கள்?**

**பதில் :** நடவடிக்கை எடுக்க வேண்டிய அரசாங்கமும், பொலிஸாரும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் இறங்காமல் வேடிக்கை பார்க்கின்றனர். ஏனோ தானோ என்று இருக்கின்றனர். பல வழக்குகள் தாக்கலாகி உள்ளன. இத்தனை வருடங்களாகியும் போதிய சாட்சியங்கள் இல்லை என்று பிற்போட்டுக் கொண்டே வருகின்றனர்.

**கேள்வி: இதுவரை சாட்சியங்கள் இல்லை என்று தட்டிக்கழிப்பதாக கூறுகின்றீர்கள். அண்மையில் ஈ.பி.டி.பி.முன்னாள் உறுப்பினர் ஒருவர் ஊடக மையத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் ": உதயனைத் தாக்கியதும், கொலைகளைச் செய்ததும் ஈ.பி.டி.பி.தான். நான் நேரடியாக சாட்சியம் அளிக்கவும் தயாராக இருக்கின்றேன் "என பகிரங்கமாகக் கூறியுள்ளார். இந்தச் சான்றுகளை வைத்து நீங்கள் குற்றவாளிகளை இலகுவாக இனம் காணமுடியாதா?**

**பதில்:** நிச்சயமாக முடியும். ஆனால் கோத்தாபய அரசில் நீதியை எதிர்பார்ப்பதைவிட வேறு அபத்தமான செயல் ஏதும் கிடையாது. ஆனால் அதற்காக நீதி கேட்கப் போராடாமலும் இருக்க முடியாதே. இவ்வாறு ஒருவர் சாட்சியமளிக்கத் தயாராக இருக்கிறார் என்றால், நாம் சட்டநடவடிக்கை எடுக்க முன்னரே பொலிஸார் களத்தில் இறங்கி உண்மையான குற்றவாளைகளைக் கைது செய்திருக்க வேண்டும், ஆனால் அப்படிச் செய்யவில்லை. எனவே உதயன் மீதான படுகொலைத் தாக்குதல் தொடர்பில் ஒருவர் ஆதாரங்களோடு சாட்சியமளிக்கத் தயாராக இருப்பதை சர்வதேச பொது அமைப்புகளுக்கும், தூதரகங்களுக்கும் தெரியப்படுத்தி நீதியை வழங்குமாறு அரசுக்கு அழுத்தம் கொடுக்கவுள்ளோம். அத்தோடு சட்ட வல்லுநர்களுடன் கலந்து பேசியுள்ளோம். துரித கதியில் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**கேள்வி: அரசியல் தீர்வு தொடர்பாக முன்வைக்கப்பட்ட இடைக்கால வரைவு வெறும் கண் துடைப்பு என்றும், ரணில் மீதான நம்பிக்கை இல்லாப் பிரேரணையில் ரணிலைக் காப்பாற்றுவதற்காகவும் வரவு செலவுத் திட்டத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காகவும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவு தேவை என்பதால் நல்லாட்சி அரசால் மேற்கொள்ளப்பட்ட ஒரு இழுத்தடிப்பு என்று பரவலாகப் பேசப்படுகின்றதே?**

**பதில்** : மஞ்சள் கண்ணாடியைப் போட்டுக்கொண்டு பார்ப்பவர்களுக்கு எல்லாமே மஞ்சளாகத்தான் தெரியும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது குறை கூறவேண்டும். ஏதாவது காரணம் வேண்டும் என்று தேடிப்பிடித்து சோடிக்கப்படும் ஒரு கதை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தந்தை செல்வாவின் ஆசீர்வாதத்தினால் ஆசீர்வதிக்கப்பட்டது. தேசியத் தலைவர் பிரபாகரனால் உருவாக்கப்பட்டது. பல தியாகங்களைச் செய்த கட்சி எங்களது கட்சி. உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் தமிழ் மக்களின் அரசியல்ரீதியான ஏகப் பிரதிநிதியாக அங்கீகரிக்கப்பட்டது. எங்கள் கட்சிதான் தேசியக்கட்சிகள் எப்போதும் ஓர் இணக்கப்பாட்டுக்கோ ஒன்றாக ஆதரிக்கவோ முன்வராதவை.

ஆனால் இடைக்கால வரைவு தொடர்பாக ஐக்கியதேசியக் கட்சி யையும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி யையும் ஓர் இணக்கப்பாட் டுக்கு கொண்டு வந்து சாதனை படைந்துள்ளோம். இது ஒரு மாதிரி அறிக்கை மட்டுமே. திருத்தங்களுக்கு ஏற்புடையது. துரதிர்ஷ்டவசமாக நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுவிட்டது. இல்லையேல் உறுதியான தீர்வைக்காணும் வாய்ப்பு கிட்டி இருக் கும்.

**கேள்வி: இந்தத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்ட மைப் பின் வெற்றி வாய்ப்பு எப்படி இருக்கின்றது?**

**பதில்** : தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் கூறியமையைப் போன்று வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்க ளில் நாங்கள் 20 ஆசனங்களை வெல்வோம் என்ற நம் பிக்கை இருக்கின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றி என்பது தமிழ் மக்களின் வெற்றி. அந்த வெற்றியை மக்களை தாரை வார்க்கமாட்டார்கள்.

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் ஆட் சியிலிருக்கும் கோத்தாபய ராஜபக்ச தனது ஏவலாளிகளாகப் பலரை களமிறக்கியிருக்கின்றார். டக்ளஸ் தேவானந்தாவின் ஈ.பி.டி.பி., அங்கஜனின் சுதந்திரக் கட்சி, சந்திரகுமாரின் சுயேச் சைக் குழு என்று இவர்கள் கோத்தாவின் ஒவ்வொரு முகமாகக் களமிறங்கியிருக்கின்றார்கள். இவர்களுக்கு தமிழ் மக்கள் வாக்கிடுவதும் கோத்தாபயவுக்கு வாக்கிடுவதும் ஒன்றுதான். ஜனாதிபதித் தேர்தலின்போது கோத்தாபய ராஜபக்சவுக்கு தமிழ் மக்கள் வாக்களிக்கவில்லை. எனவே, நாடாளுமன்றத் தேர்த லிலும் கோத்தாவின் ஏவலாளிகளாகக் களமிறங்கியுள்ளவர்க ளுக்கு வாக்களிக்க மாட்டார்கள்.

அதேவேளை, கோத்தாபயவை எதிர்ப்பதற்கு திராணியற்ற விக் னேஸ்வரன், கஜேந்திரகுமார் போன்றவர்களுக்கும் மக்கள் வாக்களிக்கக்கூடாது. ஜனாதிபதித் தேர்தலின் போது கோத்தா பயவை எதிர்க்காமல் ஓடி ஒளிந்த இவர்களுக்கு எப்படி வாக்க ளிக்க முடியும்.

இந்தத் தேர்தலில் தமிழ் மக்கள் வாக்களிக்கக் கூடிய ஒரே யொரு தெரிவாக இருப்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாத் திரம்தான். அதனால்தான் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங் களில் எங்களால் 20 ஆசனங்களைக் கைப்பற்ற முடியும் என்று நம்பிக்கையுடன் கூறக் கூடியதாக இருக்கின்றது.

**கேள்வி : நீங்கள் உங்களுடைய அரசியல் இலாபநோக் குக்காகவே உதயன் ஊடகத்தைப் பயன்படுத்துவதாக கூறப்படுகின்றதே?**

**பதில்** : இது தவறு, உதயனை எனது தனிப்பட்ட அரசி யல் நடவடிக்கைகளுக்கு எப்போதும் நான் பயன் படுத்தியது இல்லை. ஆசிரியர் பீடம் சுதந்திர மாகவே இயங்குகின்றது.

நான் கடந்த ஒரு தசாப்தமாக மட்டுமே அரசியலில் ஈடுபட்டுள்ளோன். ஆனால் உதயன் 36 வருடங்களாக தமிழி னத்தின் மனச்சாட்சியாக இயங்கி வருகின்றது.



சிங்கள ஆட்சியாளர்களின் அராஜ கத்தையும் இராணுவத்தினால் நிகழ்த்தப்பட்ட பேரழிவுகளையும் துணிச்சலோடு வெளிப்படுத்தும் ஊடகமாக உதயன் உள்ளது. இதை நான் சொல்லவில்லை, சர்வதேச ரீதி யாகப் பல அமைப்புகள் எமக்கு வழங் கிய விருதுகள் சொல்கின்றன. இன்றள வும் சர்வதேச ரீதியாக துணிச்சலுக்கான ஊடக விருதை இலங்கையில் பெற்ற ஒரே யொரு ஊடகம் உதயன் மட்டுமே.

ஒருவகையில் நான் அரசியலில் இறங்கியது கூட, ஊடக சுதந்திரத்தைக் காப்பாற்றவே. ஏனெனில் 2009 க்கு முன்னர் எமக்கான ஓர் ஆத்மபலமாக விடுதலைப்புலிகள் இருந்தனர். தமிழர்களுக்கு எங்கு அநீதி நடந்தாலும் அதைத் தட்டிக் கேட்கவும், பதிலடி கொடுக்கவும் புலிகள் தயங்கிய தில்லை.

அப்படிப்பட்ட காலத்தில் கூட உதயன் மீது மிலேச்சத்தனமான தாக்குதல்கள் நடத்தப்பட்டிருந்தன. ஆனால் 2009 க்கு பின் னர் புலிகள் தமது ஆயுதங்களை மௌனித்துக் கொண்ட தால், தமிழினம் தன் ஆத்மபலத்தை இழந்தது. எனவே எந் தப் பயமுமின்றி சிங்கள அரசும், அதன் ஏவல்நாய்களும் எங்கள் மீது மூர்க்கமாகப் பாயும் நிலை இருந்தது. இதனால் எமது ஊடகத்தைக் காப்பாற்ற , மக்களின் ஆதரவு எமக் குண்டு என்பதை சிங்கள தேசத்துக்கு உணர்த்தவே நான் அரசியலில் இறங்கினேன்.

ஆகவே ஒருபோதும் உதயனை நான் என் அரசியலுக்காகப் பயன்படுத்தியதில்லை. ஆனால் உதயனின் உண்மைக் குரலை இன்னும் பலமாக்க , வீரியத்தோடு ஒலிக்கச் செய்ய, துணிச்சலோடு முன்னேற நான் அரசியலில் இருப்பது அனு கூலமாக இருக்கிறது. தமிழ் மக்களுக்காகவே உதயன். எத் தனை அடிகள் எம்மீது வீழ்ந்தாலும் பீனிக்ஸ் பறவை போல் மீண்டும் உயிர்பெறுவோம்.

**கோத்தாபயவை எதிர்ப் பதற்கு திராணியற்ற விக் னேஸ்வரன், கஜேந்திரகுமார் போன்றவர்களுக்கும் மக் கள் வாக்களிக்கக் கூடாது. ஜனாதிபதித் தேர்தலின் போது கோத்தாபயவை எதிர்க்காமல் ஓடி ஒளிந்த இவர்களுக்கு எப்படி வாக்க ளிக்க முடியும்.**

## தேர்தல் தினத்தன்று வாக்காளர்கள் கடைப்பிடிக்க வேண்டிய கொரோனா தடுப்பு சுகாதாரப் பாதுகாப்பு நடவடிக்கைகள்

**பாதுகாப்பு நடைமுறைகள்**

**ஒவ்வொரு வாக்காளர்களும் வாக்களிக்கச் செல்லும் போது கீழுள்ள சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றுவதன் மூலம் கொரோனாவிலிருந்தான முழுமையான பாதுகாப்பினை உறுதிப்படுத்திக் கொள்ளமுடியும்.**

1. வாக்களிப்பு நிலையத்திற்கு செல் லும் போது மூக்கிலிருந்து நாடி வரையான பகுதியை மறைக்கும் படியான முறையில் முகக்கவசம் அணிந்து செல்லுதல் வேண்டும். முகக்கவசம் அணியாத எந்த வாக் காளர்களும் வாக்களிப்பு நிலை யத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.



2. வாக்களிப்பு நிலையத்திற்கு வந்தவுடன் வாக்களிப்பு நிலையத்தின் நுழைவாயிலில் கை கழுவுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட இடத்தில் சவர்க்காரமிட்டு குறைந்தது 20 செக்கன்களுக்கு முறையாகக் கைகளைக் கழுவுதல் வேண்டும்.





3. வாக்களிப்பு நிலையத்திற்குள் உட் பிரவேசித்ததிலிருந்து குறைந்தது 1 மீற்றர் சமூக இடைவெளியை எப்பொ முதும் பேணிக் கொள்ளுதல் வேண் டும்.

4. வாக்களிப்பு நிலையத்திற்கு வருகை தரும்போது
- ஆள் அடையாள ஆவணம்.
- வாக்காளர் அட்டை
- புள்ளடி இடுவதற்காக நீலம் அல்லது கறுப்பு நிறத்திலான பேனா

என்பனவற்றை மட்டுமே கொண்டுவருதல் வேண்டும்.

கொரோனா அறிகுறிகளான காய்ச்சல்ருபவ் இருமல் தொண்டைவலிருபவ் மற்றும் சுவாச இடர்பாடுகள் என் பன தென்படுபவர்கள் வாக்களிப்பு நிலையத்திற்கு மாலை 4.00 தொடக்கம் 5.00 மணி வரையான காலப் பகுதிக்குள் முகக்கவசத்துடன் வருகை தந்து வாக்களிப் பது சிறப்பானதாகும்.

**வாக்குரிமையை பாதுகாப்போம்**
**பாதுகாப்பாக வாக்களிப்போம்**
**தேர்தல்கள் அலுவலகம்**
**யாழ்ப்பாணம்.**

# பெண் வேட்பாளர்களுக்கு மக்களிடம் அதிக ஆதரவு

## கருத்துக் கணிப்பில் தகவல்

யாழ்ப்பாணம்,ஓக.2

**யாழ்.மாவட்டத்தின் புத்திஜீவிகள் மற்றும் சாதாரண பொதுமக்களிடம் நிகழ்த்தப்பட்ட சுயாதீனக் கருத்துக்கணிப்பில் பெருமளவானவர்கள் கட்சிகளைத் தெரிவுசெய்யும்போது அதிலுள்ள பெண் வேட்பாளர்களை பிரதானப்படுத்தி வாக்களித்தனர் எனக் கருத்துக் கணிப்பில் தெரியவந்துள்ளது.**

இது தொடர்பில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது,

இலங்கை நாடாளுமன்றத் தேர்தல் களத்தில் அண்ணளவாக 7 ஆயிரத்து 400 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இதில் 319 பெண் வேட்பாளர்கள் உள்ளடங்குகின்றனர்.

வடக்கு மாகாணத்தில் இம்முறை 7 ஆசனங்களுக்காக 325 பேர் போட்டியிடுகின்றனர் . இவர்களில் சுமாராக 35 பெண்கள் போட்டியிடுகின்றனர்.

இந்தத் தேர்தல்களம் யாழ்.மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு கட்சியும் தமது கட்சியின் பெண் வேட்பாளரை முதன்மைப்படுத்தி நிற்பதாக உள்ளது. அது பலம், பலவீனம் என வேறுபட்ட அடிப்படையில் மக்களை அணுகுவதாக அமைந்துள்ளது.

இம்முறை பெண்வேட்பாளர்கள் பலர் புதிதாகக் களமிறங்கியுள்ளனர். ஆண் வேட்பாளர்களுக்கு சற்றும் தளராமல் போட்டியிடுகின்றனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பவதாரணி ராஜசிங்கம், ஐக்கிய மக்கள் சக்தியின் உமா சந்திரபிரகாஷ், தமிழரசுக் கட்சியின் சசிகலா ரவிராஜ், தமிழ்தேசிய மக்கள் முன்னணியில் வாசுகி சுதாகர் , ஞானகுணேஸ்வரி, தமிழ் மக்கள் தேசிய கூட்டணி சார்பில் மீரா அருள்நேசன் இவ்வாறாக பல பெண் வேட்பாளர்கள் களமிறங்கியுள்ளனர். அத்து டன சுயேச்சைக் குழுக்களிலும் பெண் வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

நாடாளுமன்றுக்கு பெண் வேட்பாளர்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க வேண்டும் எனும் தொனிப்பொருளில் ஆங்காங்கே பல கூட்டங்கள் மற்றும் தெரு நாடகங்கள் இடம்பெற்று வருகின்றன.

அதன் அடிப்படையிலும் காரசாரமான அரசியல் பேச்சுக்களைத் தாண்டி மக்களோடு மக்களாகப் பயணிக்கும் மக்கள் குறைகளை முதன்மைப்படுத்தி அறிய முற்படுவதனாலும், பெண் வேட்பாளர்களின் புதிய நேர் அணுகுமுறையினாலும் தேர்தல் களத்தில் பெண் வேட்பாளர்கள் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புக்கள் பெருமளவில் இருக்கின்றன எனக் கருத்துக்கணிப்புக்கள் குறிப்பிடுகின்றன.

ஏற்கனவே உள்ள அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள் தொடர்பில் மக்களிடம் எழுந்துள்ள விரக்தி மனப்பாங்கு இம்முறை நாடாளுமன்றுக்கான புதிய தேர்வுகளை நோக்கி மக்களை நகர்த்தியுள்ளமையை அறிய முடிகின்றது.




நாடாளுமன்றுக்கு அனுப்பப்படும் பெண்களின் விகிதாசாரம் மேம்படுவதுடன், தேர்வுகளும் மாறுபட்டு அமையும் என்று கருத்துக்கணிப்பின் மூலம் அறிய முடிகிறது. (க)

# ஐ.தே.க. ஆதரவுடன் புதிய அரசு அமையும்

## வன்னி வேட்பாளர் நம்பிக்கை

மன்னார்,ஓக.2



தேர்தலின் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவுடன் புதிய அரசு அமையும். இதற்கான முன்னகர்வுகள் தென்னிலங்கையில் மும்முரமாக மேற்கொள்ளப்படுகின்றன. அந்த வகையில் வன்னி மக்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஒரு பிரதிநிதித்து வத்தையேனும் பெற்றுத் தரவேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் ஏ. சமியூ முகம்மது பஸ்மி தெரிவித்தார்.

மன்னார் கீரியில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஆளும் தரப்புக்கு வாக்களித்த தென்னிலங்கை மக்கள் தற்போது மிகுந்த கவலை அடைந்துள்ளனர்.

தாம் தவறுசெய்து விட்டோம். அதை உணரத்தொடங்கி விட்டனர். ஜனாதிபதித் தேர்தலில் அவர்களுக்கு இருந்த மனநிலை தற்போது முற்றாக மாறிவிட்டது.

தென்னிலங்கையில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவுடனேயே புதிய அரசு அமைக்கப்படவுள்ளது. ஐக்கிய தேசியக்கட்சி தற்போது புதிய உத்வேகம் பெற்றுள்ளது.

எமது கட்சி தலைமையில் முன்னெடுக்கப்பட்ட கடந்த நல்லாட்சி எனும் பஸ்ஸில் ஏறி அடாவடித்தனம் செய்தவர்கள் தற்போது எம்மில் இருந்து வெளியேறிவிட்டனர்.

ஐக்கிய தேசியக் கட்சி தற்பொழுது தூய்மை யடைந்துள்ளது. எமது நல்லாட்சியில் அங்கம் வகித்து அரசுக்கும், தேச மக்களுக்கும் பெரும் குந்தகம் விளைவித்தவர்கள் எல்லாம் விரட்டி அடிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களின் வெளியேற்றத்தால் வன்னியில் ஐக்கிய தேசியக் கட்சியை நோக்கி ஆதரவாளர்கள் திரண்டு வருகின்றனர்.

வன்னியில் எமது கட்சிக்கு எம்.பி. ஒருவர் தெரிவாகும் பட்சத்தில் அவருக்கு வன்னி மாவட்டம் தொடர்பில் பல முக்கிய தீர்மானம் மேற்கொள்ளும் அதிகாரத்தை வழங்குவதாக கட்சித் தலைமைகள் உறுதியளித்துள்ளனர்.

மேலும் சுமார் 20 வருடங்களாக வன்னியில் தெரிவானவர்கள் முகவரி, உரிமை, விடுதலை எனப் பேசி பேசி மக்களை ஏமாற்றுகின்றனர். இவர்கள் எவரும் வன்னியைச் சேர்ந்த வறிய மக்களின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கு எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்பதை தற்போது மக்கள் நன்கு உணர்ந்துள்ளனர் - என்றார். (க-56)

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே தமிழ் மக்கள் வாக்களிக்கவேண்டும்

## கோருகின்றார் வர்த்தகர் துவாரகேஸ்வரன்

யாழ்ப்பாணம், ஓக. 2

எதிர்வரும் தேர்தலில் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே வாக்களிக்கவேண்டும் என்று வர்த்தகர் தியாகராஜா துவாரகேஸ்வரன் மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்களாகிய நாங்கள் தெரிவு செய்யும் உறுப்பினர்களை தகுதியானவர்களாக தெரிவுசெய்ய வேண்டும். அதிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தேர்தலில் போட்டியிடுபவர்களில் புதிய முகங்களைத் தெரிவு செய்வதற்கு நாம் வாக்களிக்க வேண்டும். நீங்கள் தரகர்களுக்கு வாக்களிக்காது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிப்பது தான் சிறந்தது என நான் கருதுகின்றேன்.

இங்கே போட்டியிடும் சில தென்னிலங்கைக் கட்சிகளில் வேட்பாளர்களாக சில மாபியா குழுக்கள் களமிறங்கியுள்ளன. அவர்கள் எந்த முகத்தோடு தேர்தலில் களமிறங்கியுள்ளார்கள் என்று தெரியவில்லை.

2010ஆம் ஆண்டிலிருந்து இடம்பெற்ற தேர்தல்களில் தோல்வியைச் சந்தித்து தென்னிலங்கை அரசியல் கட்சிக்கு காசைக் கொடுத்து தமது அரசியல் இருப்பை நிலைநாட்டிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் எந்தக் காலத்திலும் தேர்தலில் வெற்றி பெறப்போவதில்லை- என்றார் (து)

பாராளுமன்றத் தேர்தல் 2020

- யாழ் இந்துக் கல்லூரி அன்னையின் பெருமைமிகு புதல்வர்களில் ஒருவன்.
- சமூக சேவைகள் உத்தியோகத்தராக திருகோணமலை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் அர்ப்பணிப்பு மிக்க சேவைகள் ஆற்றியவன்.
- அரச பதவிப் போட்டிப் பரீட்சைகளுக்கு 11 பொதுஅறிவு நூல்களை வெளியிட்டவன்.
- கற்பித்தல் மூலமாகப் பலநூறு பேர் உத்தியோகம் பெற வைத்தவன்.
- யாழ்ப்பாண நினைவுகள் பாகம் 1,2,3 நூல்களை வெளியிட்டு வரலாற்றை ஆவணப்படுத்தியவன்.



வேதநாயகம் தபேந்திரன்
(B.Com (Jaf), PGD.PDS (Jaf), M.A (Jaf)
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
இலங்கைத் தமிழ் அரசு கட்சி X 9
யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட வாக்காளர்களே!
எங்கள் நண்பனை வெற்றிபெறச் செய்யுங்கள்.
யாழ். இந்துக் கல்லூரி மாணவ நண்பர்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
[இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி]
மாபெரும்
தேர்தல் பிரச்சார கூட்டம்



காலம் : 02.08.2020 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : பிற்பகல் 4.00 மணி
இடம் : பஸ் நிலையம் அருகாமை
நகரமத்தி, சாவகச்சேரி.

திருமதி. சசிகலா ரவிராஜ்
B.Sc, Dip.in Edu
சாவகச்சேரி தொகுதி அமைப்பாளர்
தமிழ் தேசியக் கூட்டமைப்பு

அனைவரையும் அழைக்கின்றோம்

## மரண அறிவித்தல்

சிதம்பரா மூர்த்தி கேணியடியில்
17 . 02 . 1937



ஈழத்து சிதம்பரத்தான் மடியில்
31 . 07 . 2020

### திருமதி செல்லம்மா தம்பிராசா (பழனி செல்லம்மா)

காரைநகர் புதுறோட்டு சிதம்பராமூர்த்தி கேணியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தம்பிராசா செல்லம்மா 31.07.2020 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பழனி செல்லையா - லக்ஷ்மிபிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி செல்லத்துரை தம்பிராசா (வாசிந்தா மகன் களபூமி) அவர்களின் ஆசைத் துணைவியும் மற்றும் தவேந்திரன், புவேந்திரன் ஆகியோரின் அன்பு அம்மாவும், உமாதேவி, காலஞ்சென்ற இந்திரவதனி ஆகியோரின் பெருமை மிகு மாமியும், கிருஷாந்தன் (Grand son- in - law), கிருஷாந்தன் விஸ்பா, சதீஷ், முகுந்தா, சரண்யா, அரவிந்தன் ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.08.2020) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கருணையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:

சிதம்பராமூர்த்தி கேணியடி,
புதுறோட், காரைநகர்.

தவேந்திரன் (தவம்)
புவேந்திரன் (புவி } மகன்மார்

(CS 33297)(13.17) **0044 7424 945 450**

## மரண அறிவித்தல்

தோற்றம்
21 . 01 . 1939



மறைவு
31 . 07 . 2020

### ஜோசேப் அந்தோணிப்பிள்ளை

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட ஜோசேப் அந்தோணிப்பிள்ளை 31.07.2020 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜோசேப் - மாக்கிறேட் தம்பதியரின் அருமைப்புதல்வனும், காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை - பிலிப்பாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பெர்ணபேற்றம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற செங்கோல்ராஜா மற்றும் பஸ்ரியாம்பிள்ளை (லண்டன்), இராக்கினியம்மா, யேசுதாசன் (ஆஸ்திரேலியா), லூசியா ஆகியோரின் பாசமிகு அண்ணனும், மேரியூக்கிறேசியா (தேவி), ஜெயமணி, காலஞ்சென்ற லூசியா பிறக்சீற் (மணி) மற்றும் அலோசியஸ் (சமாதான நீதிவான்), காலஞ்சென்றவர்களான அத்தினேசுப்பிள்ளை, அத்தினேசு, சிங்கராயர் மற்றும் லோரேஞ்சியார் (துரை), புலேந்திரன் (பாலசிங்கம் - கனடா), பாக்கியநாதன் (சுருக்கர்), பபிலப்பு (இராசநாயகம்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், அருள்தாசன், அருள்மேரி, அருள்நேசன் (சுவிஸ்), ஜெயசீலி (ஜேர்மன்), ஜெயமணி ஆகியோரின் அன்புத் தந்தையும், மேரிகிறேஸ், செல்வமாணிக்கம், பற்றீசியா, ஜோன் சென் ஜோச், சூசைதாசன் ஆகியோரின் அன்பு மாமனும், மேரிகம்சனா, கௌசிகா, மேருஜா, சதீசன், நிசான், ஜான்சி, பிறின்சிகா, றெபினா, றொசில்டா, ஜெசிந்தா, ஜெரமி, சுஜித்தா, ஜெசில்டா, சுலக்சி, ஜென்சிகா, ஜோன் மேரி ரமேஸ், றொபேட் வின்சன் ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனைத் திருப்பலி நாளை (03.08.2020) திங்கட்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் புனித அன்னாள் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் காக்கைதீவு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS 3305)(13.17) **077 2832 881, 077 539 9985**

# மரண அறிவித்தல்

## கணபதிப்பிள்ளை துரைசிங்கம்

(நேரடம்பன் கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர்)



மண்கும்பான் 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பூநகரி முக்கொம்பனை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை - துரைசிங்கம் 31.07.2020 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - ராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான அழகரட்ணம் அன்னலட்சுமி மற்றும் சோதிமணி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், நிருபா, குகன், காலஞ்சென்ற புஸ்பா மற்றும் ரூபன் (லண்டன்), காந்தன் (சுவிஸ்), சுகுந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், குமுதாவின் பாசமிகு சித்தப்பாவும், அருந்தவநாதன், ஆனந்தன் பவானி, சுசி, வவா, லக்ஷா ஆகியோரின் பாசமிகு மாமனும், சுரேக்கா, தர்ஷா, குயிந்தன் (பிரான்ஸ்), சயிதா, அயந்தன், சன்சிகா, மைந்தன், சரணிகா, யருசியன், யிருசியன், டிதுசியன், துவாரகா, துவாரகன், துஸ்மிதா, லதுமிதா, தியானு, தாரு, அனுஷா, சுகன்யா, அபி, சங்கவன் ஆகியோரின் பாசமிகு பேரனும், ஜோன் அற்றியன், கன்சிகா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.08.2020) முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக 5 அடிவான் இந்து மாயனத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மண்கும்பான்
5 ஆம் வட்டாரம்.

தகவல்:
குடும்பத்தினர்

**077 869 5652** (CS 33005)(13.17)

# பெரமுன மூன்றில் இரண்டு பெறுவதற்கு சு.கவின் வாக்குகளையே பெறவேண்டும்

## *மகிந்தவின் செயலாளர் லொக்குபண்டார தெரிவிப்பு*

பதுளை, ஓக. 2

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைப் பெற்றுக்கொள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் வாக்குகளை பெற்றுக்கொள்ள வேண்டும். என்றாலும் அந்தக் கட்சியின் வேட்பாளர்களுக்கு விருப்பு வாக்குகளை வழங்காது தோற்கடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுஜன பெரமுனவின் புதுளை மாவட்ட வேட்பாளரும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தனிப்பட்ட செயலாளருமான உதித்த லொக்கு பண்டார தெரிவித்துள்ளார்.

பதுளையில் நடைபெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அனைவரினதும் வாக்குகளும் தேவை. ஆனால், அவர்களுக்கு விருப்பு வாக்குகளை வழங்க வேண்டாம்.

எமக்கு பொதுஜன பெரமுனவின் மொட்டுச் சின்னத்தின்அரசை அமைக்க வேண்டும். மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற வாக்குகள் வேண்டும். அவர்களை நாடாளுமன்றுக்கு அனுப்ப விருப்பு வாக்குகளை வழங்க வேண்டாம்.

மஹிந்த ராஜபக் ஷவின் பிள்ளைகளை சிறையில் அடைத்தபோது, பொதுஜன பெரமுனவுக்கு தொந்தரவு கொடுத் போது, எம்மவர்களை சிறையில் அடைத்து பழிவாங்கும் போது, இவர்கள் அரச பங்களாக்களில் விஸ்கி குடித்துக்கொண்டிருந்தனர்.

இவர்களுக்கு விருப்பு வாக்கை வழங்க எங்களுக்கு என்ன பைத்தியமா?. இல்லை. நாங்கள் தூய்மையான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் எமது அரசை அமைப்போம்.

அது மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம்கொண்ட அரசு. இதுதான் செய்தி. எங்களை கைவிட்டுச் செல்லாதவர்கள் எம்முடன் இருக்கின்றனர். இவர்கள் ஒரு மாவட்டத்தில் ஒருவர் என்ற கணக்கில் 25 பேர் நாடாளுமன்றுக்கு வந்தால், எமக்கு எதிராகச் செயற்பட மாட்டார்கள் என்பதில் என்ன நிச்சயம்? எனவும் உதித்த லொக்கு பண்டார குறிப்பிட்டுள்ளார். (து)



# ஓகஸ்ட் 11 இல் புதிய அரசு!

கொழும்பு, ஓக.2

எதிர்வரும் புதன்கிழமை நடைபெறும் பொதுத் தேர்தலில் ஆட்சிக்கு வரும் புதிய அரசாங்கம் ஓகஸ்ட் 11 ஆம் திகதி பதவியேற்கும் எனவும், அன்றைய தினமே அமைச்சரவையும் பதவியேற்க உள்ளது எனவும் தெரியவருகின்றது.

அமைச்சரவை பதவியேற்பதற்கு முன்னர் புதிய அரசின் பிரதமர் பதவிப் பிரமாணம் செய்வார். அத்துடன் புதிய நாடாளுமன்றத்தின் கன்னி அமர்வு ஓகஸ்ட் மாதத்தின் மூன்றாம் வாரத்தில் அதாவது எதிர்வரும் 20 ஆம் திகதி கூட்டப்படலாம் எனக் கூறப்படுகிறது.

நாடாளுமன்றத்துக்கு தெரிவாகும் புதிய உறுப்பினர்களுக்குத் தேவையான பயிற்சிகளை வழங்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இம்முறை பொதுத்தே ர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திர பொதுஜன கூட்டணி வெற்றி பெற்றால், மகிந்த ராஜபக்ச பிரதமராகப் பதவியேற்பார். ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணி வெற்றி பெற்றால், சஜித் பிரேமதாச பிரதமராகப் பதவியேற்பார்.

எந்தக் கட்சிக்கு ஆட்சியமைக்கும் அளவுக்கு பெரும்பான்மை பலம் கிடைக்காது போனால், அரசாங்கம் பதவியேற்பது தாமதமாகும் எனக் கூறப்படுகிறது. (அ)

## பெண்கள் பிரதிநிதித்துவ தரப்படுத்தலில் இலங்கை 182 ஆவது இடத்தில்

கொழும்பு, ஓக.2

சர்வதேச ரீதியில், நாடாளுமன்றத்தில் பெண்கள் பிரதிநிதித்துவ அடிப்படையிலான தரப்படுத்தலில் 193 நாடுகளில் இலங்கை 182 ஆவது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைய இலங்கை நாடாளுமன்றத்தில் நூற்றுக்கு 5 சதவீத பிரதிநித்து வமே காணப்படுகிறது.

இந்நிலையில் 2020 ஆம் ஆண்டுக்கான பொதுத்தேர்தலில் பிரதான கட்சிகள் சார்பில் போட்டியிட களமிறக்கப்பட்டுள்ள பெண் வேட்பாளர்களது விவரங்களை நாடாளுமன்றத்தின் உத்தியோகபூர்வ இணையதளமான Manthri.lk வெளியிட்டுள்ளது.

அதற்கமைய, பொதுஜன பெரமுன சார்பில் 14 பெண் வேட்பாளர்களும், ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் 15 பெண் வேட்பாளர்களும், ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் 10 பெண் வேட்பாளர்களும், தேசிய மக்கள் சக்தி சார்பில் 16 பெண் வேட்பாளர்களும், இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் 4 பெண் வேட்பாளர்களும் களமிறக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி2)

## தேர்தல் சட்ட மீறல்; 7 வேட்பாளர்கள் இதுவரை கைது

கொழும்பு, ஓக 2

தேர்தல் சட்டத்திட்டங்களை மீறிய குற்றச்சாட்டில் 7 வேட்பாளர்கள் இதுவரை கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புத்தளம், குருநாகல், யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த வேட்பாளர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர் என தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் பிரியந்த விஜேசூரிய தெரிவித்துள்ளார். அத்துடன் தேர்தல் சட்டதிட்டங்களை மீறியமை தொடர்பில் பொலிஸார் 10 பேருக்கு எதிராகவும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ரி1)






## தமிழருக்கு...

இது தொடர்பில் அந்த அமைப்பு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கியத்துவத்தை உணர்ந்து எல்லோரும் ஒற்றுமையாகக் கடந்த காலத்தில் பயணித்தனர். தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, அரசியல்வாதிகளையும் மக்களையும் ஒருங்கிணைத்து சிறந்த தலைமைத்துவத்தை வழங்கியுள்ளார். கடந்த காலத்தில் இன விடுதலைப் போராட்டத்தில் பல்வேறு வடிவங்களிலும் அர்ப்பணிப்புடன் நீண்ட காலமாக செயற்பட்டவர். இவரைப் போல் ஒரு தலைவர் எந்தக் காலத்திலும் உருவாகப்போவதில்லை என்று மக்கள் கருதுகின்றார்கள். இவரது அர்ப்பணிப்பான நேர்மையான சேவையை தமிழ் மக்கள் அறிவர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ஒன்றாக இணைந்து கடந்த காலங்களில் இணைந்து செயற்பட்டவர்கள் பதவி நோக்கம், சமூக அந்தஸ்தைப் பெறும் நோக்கம், சுய இலாபம் பெறுதல் போன்ற நோக்கங்களில் இன்று பல்வேறு குழுக்களாக தாங்களாகவே பிரிந்து செயற்படுகிறார்கள். பிரிந்து செயற்படுவது மட்டுமல்ல உண்மைக்கு மாறான பொய்க் காரணங்களைக் கூறியும் மக்களின் அவ நம்பிக்கைக்குரியவர்களாகின்றனர்.

தமிழ் மக்கள் வாக்களிக்கும்போது, காலை 7 மணிக்கு வாக்களிப்பு நிலையத்துக்கு வாக்காளர் அட்டையுடன் செல்லவேண்டும், குடும்பத்தில் உள்ளோரையும், அயலவர்களையும், அறிந்தவர்களையும் வாக்களிக்கத் தூண்ட வேண்டும். வாக்களிக்காமல் இருப்பதனால் ஜனநாயக நன்மையை அனுபவிக்காமலும் போகலாம், சிலர் மோசடியும் செய்யலாம். ஒவ்வொருவரும் தான் விரும்புகின்ற கட்சியின் சின்னத்துக்கு முதலில் புள்ளடி இடப்பட வேண்டும். இது கட்டாயமானது. பின்னர் தான் விரும்பிய மூன்று பேருக்கு (மூன்று இலக்கத்துக்கு) புள்ளடி இடலாம்.

யாருக்கு வாக்களிப்பது என்பதை பின்வரும் விடயங்களை கருத்தில் கொண்டு தீர்மானம் செய்ய வேண்டும். இதுவரையில் தமிழ் மக்களுடைய உரிமைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லுகின்ற கட்சிக்கு வாக்களிக்க வேண்டும். மக்கள் அமைதியாகவும், நிம்மதியாகவும் வாழக்கூடிய சூழ் நிலையை ஏற்படுத்தியவர்களையும், ஏற்படுத்தக் கூடியவர்களையும் இனம் காண வேண்டும்.

வேட்பாளரின் தனிமனித வாழ்க்கை அல்லது அரசியல் வாழ்க்கையில் மக்களுக்கு எத்தகைய சேவை செய்தார், உதவி செய்தார் என்பதனை மதிப்பிடுவதுடன் எதிர்காலத்திலும் தமிழ் மக்களுடைய அபிலாசைகளின் பூர்த்திக்காகவும் அபிவிருத்திக்காகவும் செயற்படக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

கட்சி மாறக்கூடியவர்களையோ அல்லது புதிய கட்சி உருவாக்க நினைப்பவர்களையோ தெரிவு செய்யக் கூடாது. இது தமிழ் மக்களுடைய இழப்பிற்கும், இளைஞர்களுடைய அர்பணிப்புக்கும் எதிராகவே காணப்படும்.

இன்று அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் பலவீனமடைந்துள்ளோம். மக்களுடைய உரிமைகளைப் பெறுவதற்கும் அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கும் நேர்மையான நடுநிலைமையாக உள்ள மக்களுக்கு மேற்கூறிய பிரச்சினைகளிலிருந்து விடுபடக்கூடிய அர்பணிப்பான சேவை வழங்குபவரையே தெரிவு செய்யுங்கள் அது உங்களுடைய வரலாற்றுக்கடமை. மேற்கூறிய விடயங்களை கருத்தில் கொண்டு தமிழ் மக்கள் தீர்க்க தரிசனத்துடன் சிந்தித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிக்குமாறு வேண்டுகிறோம், என்றுள்ளது. (ஒ.5)

## அரசின்...

மாவட்ட முதன்மை வேட்பாளருமான இரா.சம்பந்தன் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

எதிர்வரும் 5ஆம் திகதி வடக்கு, கிழக்கில் தமிழ்பேசும் மக்களின் ஆணையுடன் மாபெரும் வெற்றியை நிலை நாட்டுவோம். எம்மை விமர்சிப்பவர்களைத் தலைகுனிய வைப்போம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

'உதயன்' பத்திரிகைக்கு இரா.சம்பந்தன் நேற்று வழங்கிய செவ்வியில் மேலும் தெரிவித்ததாவது:

நாம் ஜனநாயக வழியில் தமிழரின் விடுதலைக்காகப் போராடுகின்ற கட்சி. எவரின் மிரட்டல்களுக்கும் அடிபணியமாட்டோம். எந்தச் சலுகைகளுக்கும் விலைபோக மாட்டோம். எமக்குப் பதவி ஆசைகள் எதுவும் இல்லை. நிரந்தர அரசியல் தீர்வைக் காணவே பொதுத்தேர்தலில் தமிழ் மக்களின் ஆணை வேண்டி நிற்கின்றோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் முன்வைக்கப்பட்டுள்ள எந்தவொரு விடயங்களும் புரட்சிகரமானவை அல்ல. மக்கள் சமத்துவமாகவும், நாகரிகமாகவும் வாழ்வதற்குமான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அனைத்துப் பிரச்சினைகளுக்கும் அரசமைப்பு ரீதியாக தீர்வு வழங்கப்பட வேண்டும். அதாவது, ஒரேமொழியைப் பேசுகின்ற மக்கள் ஒரே அலகாக வாழ்வதற்கும், ஆட்சி அதிகாரங்கள் மீளப்பெறாத வகையிலும் நிலைத்து நிற்கக் கூடிய வகையிலும் வழங்கப்பட வேண்டும். இவ்விதமான கருமங்கள் நடைமுறைச்சாத்தியமாக்கப்பட வேண்டுமென்றால் சமஷ்டி முறைமையின் அடிப்படையிலேயே அவை சாத்தியமாகும். எனவே, எமது சமஷ்டி முறைமையிலான கோட்பாட்டை மாற்ற முடியாது. சமஷ்டி புரட்சிகர கோரிக்கை இல்லை.

இந்த நாட்டில் சமஷ்டியைக் கோரிக்கையை எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கவே முதலில் முன்வைத்தார். அதற்கு அடுத்தபடியாக கண்டியத் தலைவர்கள் சமஷ்டிக் கோரிக்கையை முன்வைத்தார்கள். அத்துடன் தமிழ் பேசும் மக்கள் வாழும் பிரதேசங்களிலும் சமஷ்டி அடிப்படையிலான அலகு உருவாக்கப்பட வேண்டும் என்றும் முன்மொழித்திருக்கின்றார்கள்.

துரதிஷ்டவசமாக தமிழ்த் தலைவர்கள் அந்தக் கோரிக்கையை ஆதரித்திருக்கவில்லை. உலகத்தில் சுபீட்சமாக இருக்கும் நாடுகளில் சமஷ்டி ஆட்சி முறைமையே உள்ளது. சமஷ்டி என்பது பயங்கரமான விடயமாக கொள்ளப்பட வேண்டியதில்லை. அவ்வாறிருக்கையில் தென்னிலங்கைத் தலைவர்கள் பெரும்பான்மை மக்கள் மத்தியில் சமஷ்டி என்ற சொல்லை ஆபத்தான சொல்லாகப் பரப்புரை செய்து சிந்தனையை ஏற்படுத்தி விட்டார்கள். பெரும்பான்மை மக்களுக்கு தென்னிலங்கைத் தலைவர்கள் உண்மையைக்கூற வேண்டும்.

எந்த அரசு ஆட்சிக்கு வந்தாலும் தீர்வு தொடர்பில் அந்த அரசுடன் நாம் முழுமனதுடன் பேசத் தயாராக இருக்கின்றோம். கடந்த தடவை ராஜபக்சவினர் தவறிழைத்தார்கள் என்பதற்காக அவ்விதமாக தொடர்ந்தும் செயற்படுவார்கள் என்று கூறுவதற்கில்லை. அவர்கள் ஆட்சிக்கு வருவார்களாக இருந்தால் புதிய ஆரம்பத்தின் மூலம் பேச்சுகளை முன்னெடுப்பதற்குத் தயாராகவே இருக்கின்றோம். எமது அடிப்படை கோட்பாடுகளில் பற்றுறுதியுடன் நாம் அந்த முயற்சிகளில் ஈடுபடுவோம்.

இலங்கையின் ஆட்சியாளர்கள், இந்தியாவுக்கும், சர்வதேச நாடுகளுக்கும், ஐக்கிய நாடுகள் சபைக்கும் பல்வேறு வாக்குறுதிகளை வழங்கியுள்ளார்கள். அவை நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். அந்தந்த பிராந்தி யங்களில் வாழ்கின்றவர்கள் தமது விடயங்களைக் கையாள்வதற்கான அதிகாரங்களைக் கொண்டிருக்க வேண்டும் என்பதை முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய பிரத மருமான மஹிந்த ராஜபக்ச ஏற்றுக்கொண்டு பகிரங்கமாகவும் கூறியிருக்கின்றார். அவ்வாறான நிலையில் கொள்கை ரீதியாக அவர்கள் எம்முடன் முரண்பட்டால் அரசியல் தீர்வுக்காக சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்புடன் நாங்கள் முயற்சிகளை எடுப்போம். அதில் வெற்றி பெறுவோம்.

மத்திய அரசில் பங்கேற்று அமைச்சுப் பதவியைப் பெறுவது என்ற முடிவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுக்கவில்லை. அமைச்சுப் பதவியைப் பெறுவதாக இருந்திருந்தால் நாம் கடந்த அரசுகளில் பல்வேறு முக்கிய அமைச்சுக்களைப் பெற்றிருக்க முடியும். அது எமது இலக்கு அல்ல. எமது மக்களின் இறையாண்மை ஏற்றுக்கொள்ளப்பட்டு சர்வதேச ரீதியாக அவர்களுக்கு உள்ள உரிமைகளின் அடிப்படையில் மீளப்பெறமுடியாத நிரந்தரமான தீர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். அந்த இலக்கை வேறு எதற்காகவும் விட்டுக்கொடுக்க முடியாது. அந்த இலக்கை அடைகின்றபோது தேவையேற்படின் ஏனைய விடயங்களையும் நாங்கள் பரிசீலிப்போம். எமது கட்சியின் செயற்குழு, மத்தியகுழு, பொதுச்சபை உள்ளிட்டவை முறையாகக் கூடி அது தொடர்பில் தீர்மானங்களை எடுப்போம். தற்போது வரையில் அவ்விதமான எந்த முடிவையும் எடுக்கப்படவில்லை. அவ்விதமாக யாரும் கூறினால் அது தவறாகும், என்றார். (ஒ.5,22)

## தமிழரின்...

மான எதிர்காலத்துக்கு இந்தத் தேர்தல் முடிவுகள் வழிவகுக்க இறையாசீர் வேண்டுகிறோம். இவ்வாறு யாழ்ப்பாண மறை மாவட்ட ஆயர் யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தேர்தல் பரப்புரைகள் இறுதிக் கட்டத்தை அடையும் வேளை பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்துங்கள். முதலில் வாக்களிப்பைப் புறக்கணியாதீர்கள். கொரோனாவுக்குப் பயந்து வாக்களிக்கப் போகாது விட வேண்டாம். வாக்களிப்பது ஒவ்வொருவரதும் உரிமையும் கடமையுமாகும். பிழையாக வாக்களிக்காது பதட்டமின்றி சரியான விதமாக வாக்களியுங்கள்.

சுகாதார அறிவுறுத்தற்படி முகக்கவசங்களை அணிந்து நேரகாலத்தோடு வாக்களிப்பு நிலையத்துக்குச் சென்று சமூக இடைவெளியைப் பேணி வாக்களித்து விட்டு விரைவாக வீடுகளுக்குச் செல்லுங்கள், என்றுள்ளது. (ஒ.5)



பாராளுமன்ற
தேர்தல் 2020

சமஉரிமையுடன்
நிலையான
அபிவிருத்திக்கு
வாக்களியுங்கள்..




யாழ்ப்பாணம் கிளிநொச்சி
தேர்தல் மாவட்டம்

கிருபா லேனர்ஸ்
அதிபர்

ஐக்கிய
மக்கள்
சக்தி

X 2

# ஒற்றுமையைச் சிதறடிக்க இடமளிக்க வேண்டாம்

## கூட்டமைப்புக்கு வாக்களிக்க வாலிபர் முன்னணி வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஓக. 2

தேர்தலில் தமிழ் மக்களின் ஒற்றுமையைச் சிதறடிப்பதற்காகவும், தமிழ்த் தேசியத்தை மழுங்கடிப்பதற்காகவும் எம்மை தோற்கடிப்பதற்கு 18 அரசியல் கட்சிகளும் 14 சுயேச்சைக் குழுக்களும் களமிறக்கப்பட்டுள்ளமை நல்ல சான்றாகும். எதிர்காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பலப்படுத்தும் நோக்கில் எமது லட்சியத்துடன் பயணிப்போரை ஒன்றுபடுத்தும் முயற்சி மேற்கொள்ளப்படுவதோடு எமது உரிமையைப் பெறும் வரை நாங்கள் யாவரும் ஒற்றுமையாக வீட்டுச் சின்னத்துக்கு வாக்களித்து மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பலம்வாய்ந்த ஒரு அரசியல் சக்தியாக நிலைநிறுத்த வேண்டும். இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வாலிபர் முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

போருக்குப் பின் தமிழ்ப் பேசும் மக்களின் நம்பிக்கைக்குரிய ஒரே சக்தியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டுமே என மக்கள் நம்பியிருந்தனர். மக்களின் விருப்புகளுக்கு மாறாக கூட்டமைப்பைப் பலவீனப்படுத்தும் முயற்சியாக கூட்டமைப்பிலிருந்து சில கட்சிகள் கால ஓட்டத்தில் வெளியேறின. மக்களுக்கு அக் கட்சிகள் செய்த நம்பிக்கை துரோகமாகவே கருதுகின்றோம். என்ன பிரச்சினையாக இருந்தாலும் கூட்டுக்குள் இருந்துகொண்டே போராடியிருக்க வேண்டியவர்கள் மக்களின் விருப்புக்கு மாறாகக் கூட்டை விட்டு வெளியேறிவிட்டார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள கட்சிகளில் பல நீண்ட கால அனுபவம் வாய்ந்த தலைவர்கள் இருக்கும் போதும் பல காரணங்களுக்காக மாகாண சபை தேர்தலில் பல புதிய முகங்கள் தலைமைகளால் களமிறக்கப்பட்டு மக்களுக்கு விளக்கமளிக்கப்பட்டு அமோக வெற்றி பெறப்பட்டு போரால் பெருவாரியாக பாதிக்கப்பட்ட மக்களிற்கு மறு வாழ்வுடன் கூடிய மறுவாழ்வை மேற்கொள்வதற்காக அமைக்கப்பட்ட மாகாணசபை நிர்வாகம் பல கோடி ரூபா பணத்தைப் பயன்படுத்தாது மத்திய திறைசேரிக்குத் திருப்பி அனுப்பியது மாத்திரமல்லாது உலக வங்கி பெருந்திட்டங்களுக்காக நிதி ஒதுக்க முன் வந்த போது தன் உறவுக்காரரை அந்நிதியைக் கையாளும் பொறுப்புக்கு நியமித்த பொழுது அந் நியமனம் ஏற்காததால் அந்த உதவித் திட்டத்தையும் நிதியையும் திருப்பி அனுப்பினர். நடந்த பல திட்டங்களிலும் மோசடிகள் இடம்பெற்றதாக விசாரணை அறிக்கைகள் கூறுகின்றன. இவர்கள் தான் பல சின்னங்களிலும் இத் தேர்தலில் தமது பிரதிநிதிகளை களம் இறக்கியுள்ளனர். இவர்கள் தான் கூட்டமைப்பை விமர்சிக் கின்றனர். மக்களே நீங்கள் சிந்தியுங்கள்.

எம் இனத்தின் அரசியல் சக்தி ஒன்று ஒற்றுமையாகப் பலம் பெறக்கூடாதென நிகழ்ச்சிநிரலில் சிலர் இயங்குகின்றனர். அந் நிகழ்ச்சிநிரலின் தன்மையை அறியாத பலரும் அவர்களுடன் சில சலுகைகளுக்காகவும் நன்மைகளுக்காகவும் சேர்ந்து இயங்குகின்றனர். எவ்வித சலுகைகளுக்கும் விலை போகாமல் பல தலைவர்களின் உயிர்களையே அர்பணித்து தாயக தமிழ்பேசும் மக்களின் உரிமைக்காகத் தொடர்ந்து தாயகத்திலும் சர்வதேச அளவிலும் குரல் கொடுத்து வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வெற்றி பெறச் செய்ய வேண்டியது தமிழ் பேசும் தாயக உறவுகளின் தலையாய கடமையாகும். கடந்த காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்களின் உரிமைக்காக மற்றும் நலனுக்காக காத்திரமான பங்களிப்பை மேற்கொண்டது என்பது யாவரும் அறிந்த உண்மையாகும், என்றுள்ளது.

(ஒ,5)

பாராளுமன்ற பொதுத்தேர்தல் - 2020

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின்
மாபெரும் தேர்தல் பிரசார
பொதுக்கூட்டம்

இடம் : சங்கிலியன் பூங்கா, முத்திரைச்சந்தி, நல்லூர்
காலம் : 02.08.2020 பி.ப. 06.30 மணி
தலைமை : கௌரவ. சி.வி.கே.சிவஞானம் அவர்கள் (அவைத்தலைவர், வடக்கு மாகாண சபை)
பேச்சாளர்கள் : தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்ட அனைத்து வேட்பாளர்களும் கட்சிப் பிரமுகர்களும் கலந்து கொண்டு உரையாற்றுவர்.

X

அனைவரையும்
அன்புடன் அழைக்கிறோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

பாராளுமன்றத் தேர்தல் - 2020
யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்கள்
தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி



சிவாஜிலிங்கம்



க.வி.விக்னேஸ்வரன்



சிறீகாந்தா

X

சர்வதேசக் குற்றங்களில் ஒன்றான
இனப் படுகொலையை இலங்கை அரசு
தமிழ் மக்கள் மீது புரிந்ததை, வடக்கு மாகாண சபை
தீர்மானம் மூலமும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைப்
பேரவையிலும் குரல் எழுப்பியும்
சர்வதேச சமூகத்தை ஏற்க வைத்தவர்கள்

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|

• தேசியம் • தாயகம் • சுயநிர்ணய உரிமை

சிவாஜிலிங்கம் : தொ.பே. 0777729020
facebook.com/ எம்.கே.சிவாஜிலிங்கம்

தேர்தல் போட்டியிலிருந்து

# சம்பந்தனை ஒதுங்குமாறு கோருகின்றார் விக்னேஸ்வரன்

யாழ்ப்பாணம், ஓக. 2

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் திருகோணமலையை நேசிப்பவராக இருந்து அதனை பாதுகாக்க விரும்பினால் தேர்தல் போட்டியில் இருந்து ஒதுங்கி துடிப்பும், ஆற்றலும், அறிவும் கொண்ட தனது தம்பி ரூபனுக்கு வழிவிட வேண்டும் என்று தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் வடமாகாண முன்னாள் முதலமைச்சருமான நீதியரசர் விக்னேஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

'ரூபன் ஒரு வீரத் தமிழன். தன்மானத் தமிழன். ஆகையால், ரூபனுக்கு நீங்கள் விட்டுக்கொடுப்பதன் மூலம் நீங்கள் தோற்க மாட்டீர்கள். மாறாக நீங்கள் வெல்வீர்கள். திருகோணமலை மக்கள் வெல்வார்கள். ஆகவே, நீங்கள் அவ்வாறு செய்தால், வரலாறு உங்களைப் புகழும். திருகோணமலை மக்கள் உங்களைப் போற்றுவார்கள். திருக்கோணேஸ்வர பெருமான் உங்களை ஆசீர்வதிப்பார்' என்று நீதியரசர் நேற்றுச் சனிக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

நான் அரசியலுக்குள் பிரவேசிப்பதற்கு காரணமாக இருந்தவர் நீங்கள் தான் என்பதை நான் மறக்கவில்லை. உங்கள் மீது என்றும் எனக்கு மரியாதை உண்டு. ஆனால், இந்த நாட்டில் தமிழ் மக்களின் இருப்பையும் அவர்களின் உரிமைகளையும் முதன்மைப்படுத்தி உங்களை எதிர்த்து அரசியல் செய்யும் ஒரு நிலைமையைக் காலம் எனக்கு வகுத்திருக்கிறது. என் கடமைகளில் இருந்து சரியமாட்டேன், என்றும் குறிப்பிட்டுள்ளார். (ஒ,5)

# சர்வதேசத்தின் அங்கீகாரம் பெற்றுள்ளது கூட்டமைப்பு!

## கனடியத் தமிழர் பேரவை புகழாரம்

யாழ்ப்பாணம், ஓக. 2

இரா. சம்பந்தன் தலைமையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கனடா, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், இங்கிலாந்து, ஆஸ்திரேலியா மற்றும் இந்தியா உள்ளிட்ட சர்வதேச சமூகத்தின் அங்கீகாரத்தையும், மரியாதையையும் பெற்றுள்ளது. தமிழ் மக்களின் கவலைகள், குறைகள் மற்றும் அபிலாசைகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கவனமாகவும், தொடர்ச்சியாகவும் வெளிப்படுத்தி வந்துள்ளதென்பது பரவலாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது என்று தெரிவித்துள்ளது கனடியத் தமிழர் பேரவை. இது தொடர்பில் அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையில் ஜனநாயக உரிமைகளிற்கான தமிழ் மக்களின் போராட்டத்திற்கு நீண்ட வரலாறு உண்டு. சுதந்திரத்திற்குப் பின்னர் அவர்கள் எதிர்கொண்ட பல பின்னடைவுகள் இருந்தபோதிலும் நீதி, கண்ணியம் மற்றும் சமத்துவம் குறித்த அவர்களின் விருப்பம் குறையவில்லை. தமிழர்கள் தங்கள் உரிமைகளிற்காகவும் சுதந்திரத்திற்காகவும் போராடிய முறைமை பல தசாப்தங்களாக பல்வேறு மாற்றங்களைச் சந்தித்து வந்துள்ளது.

கடந்த நாடாளுமன்றத்தில், தமிழ் அரசியல் தலைமை, தெற்கில் உள்ள பிறமுற்போக்கான சக்திகளின் ஒத்துழைப்புடனும், சர்வதேச சமூகத்தின் உதவியுடனும், உலகளாவிய மனிதாபிமானக் கோட்பாடுகளின் அடிப்படையில், ஜனநாயகத்தை காக்கவல்ல ஆணையங்களை உருவாக்கியதன் மூலம், சமத்துவமான சமுதாயத்திற்கான அடித்தளத்தை அமைக்க முயன்றது.

தேர்தலில் பங்கேற்காததன் மூலமாகவோ அல்லது சுயாதீனக் குழுக்களிற்கும் தென்னிலங்கை பெரும்பான்மையின கட்சிகளிற்கும் வாக்களிப்பதன் மூலமாகவோ தமிழர்களது வாக்குப்பலம் வீணாகித் தமிழ்ச் சமூகத்தின் நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் பலவீனப்படுத்தப்படும்.

எனவே, வடக்கு மற்றும் கிழக்கு இரண்டிலும் தமிழ்ச்சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய ஒரு கொள்கை ரீதியான மற்றும் சக்திவாய்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பது மற்றும் சமூக நலன்களை முன்னேற்றுவதற்கு அவர்களின் கூட்டு வலிமையை திறம்பட பயன்படுத்துவது எமக்குள்ள தேர்வாக அமைய முடியும். தற்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் தலைமையை வலுப்படுத்துவதன் மூலம் மட்டுமே இந்தக் கூட்டு வலிமையை அடையமுடியும் என்று கனேடியத் தமிழர் பேரவை நம்புகிறது - என்றுள்ளது.

(ம)


### மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ 40 வயது கம்பியூட்டர் கிராபிக்ஸ் (வெளிநாட்டு வீடியோ வேலை) சொந்தமாக தொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு: 0779058615 (வைபர்)

### வீடு வாடகைக்கு

யாழ் பிறவுண் றோட் நீராவியடி பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் நல்ல குடியிருப்புக்கு உகந்த சூழலில் நான்கு அறை கொண்ட வீடு (A/C, தளபாடங்களுடன்) வாடகைக்கு உண்டு. முற்பணம், வாடகை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்புகளுக்கு: 077 199 5709

### வேலையாள்கள் தேவை

மல்லாகம் சந்தியில் அமைந்துள்ள கடை ஒன்றுக்கு Thurka Multy Center Photoshop, Coreldraw, Page making தெரிந்தவர்கள் வேலைக்கு தேவை.

T.P: 077 7181 932

### 9- 11 Maths
### பிரத்தியேக வகுப்பு

076 294 3552

### மாபிள் வேலை

உங்கள் வீட்டிற்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்துத் தரப்படும்.
ஒரு சதுரடி - 45/=
தொடர்பு:- 077 3341 281

### வேலைக்கு பெண்கள் தேவை

திருநெல்வேலியில் இயங்கும் பான்சி கடை ஒன்றிற்கு வேலைக்கு பெண்கள் தேவை. நல்ல சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு:- 077 748 0357

### வேலையாள்கள் தேவை

யாழ் பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் அமைந்துள்ள கடை ஒன்றுக்கு Typing, Photo copy வேலை தெரிந்தவர்கள் வேலைக்கு தேவை.

T.P: 077 194 1964
077 9731 868


## நினைவுகளில்...

3 ஆம் ஆண்டு | 26 ஆம் ஆண்டு

மலர்வு 10.01.1946 | மலர்வு 07.01.1936



உதிர்வு 10.09.2017 | உதிர்வு 21.07.1994

**அமரர் துரைராசா பவானிதேவி**

திதி: சதுர்த்தசி (02.08.2020)

**அமரர் தம்பு துரைராசா**

அன்பான அம்மா! ஐயா!
உங்கள் பிரிவு எங்களை ஆறாத் துயரில் அழ்த்துகின்றது!
என்றென்றும் உங்களை எம்மனதில் - இருத்தி
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்து நிற்கும்

அன்பு மறவாத
சகோதரன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம்.

(cs.33271) (13.17)

## மரண அறிவித்தல்

### அம்பலவாணர் பேரின்பராசா

பிறப்பு : 04.12.1961 இறப்பு : 01.08.2020



பாலாவோடையைப் பிறப்பிடமாகவும் புதுவீதியை வதிவிடமாகவும் கொண்ட அம்பலவாணர் பேரின்பராசா நேற்று (01.08. 2020) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராஜசிங்கம் சின்னம்மா தம்பதிகளின் மருமகனும் சந்திராதேவியின் அன்புக் கணவரும் சர்மிளாதேவி முகுந்தன் சுதர்சன், சுதர்சினி, மயூரன், சுகிர்தா, யுவிதா, கவிதா ஆகியோரின் அன்புத் தந்தையும், சண்முகராசா, டசாந்தன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஞானேஸ்வரி, ரதீஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் நடனசிங்கம் காலஞ்சென்ற கிருபானந்தநாயகி லோபாமுத்திரை திருப்புகலூர் சிங்கம், திருப்புலியூர் சிங்கம், சுமத்திராதேவி ரேவதி தேவி புவிராஜசிங்கம் நடனமலர் ஆகியோரின் மைத்துனரும், ஸாருயா, டிலக்ஷனா, தர்மினி, டஷ்சிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.08.2020) திங்கட்கிழமை காலை 7.00 மணியளவில் அன்னாரின் புதுவீதியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக தில்லை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புதுவீதி,
காரைநகர்.

தகவல் :-
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

எமது கடை உரிமையாளர்
ஸ்ரீஸ்காந்தராஜா அவர்களின்
சிறிய தாயார்

**திருமதி தனலட்சுமி சோமசுந்தரம்**

அவர்களின் பிரிவால்
துயருற்றிருக்கும் அன்னாரின்
குடும்பத் தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களை
தெரிவிப்பதுடன் அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.



ஸ்ரீ கண்ணன் ஸ்ரோஸ் - திருநெல்வேலி
ஸ்ரீ பேப்பர் மாட் - யாழ்ப்பாணம்
N.S.B Traders Pvt Ltd - Colombo

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 23 . 04 . 1947



விண்ணில் 02 . 08 . 2015

**அமரர் வைரமுத்து செல்வராசா**

எமது குடும்பத்தின் குல தெய்வமே
பாசத்தினால் எல்லோரையும்
கட்டி வைத்தீர் உம் வசம்.
பண்பினால் எல்லோருக்கும்
வழி காட்டியாக வாழ்ந்தீர்.

என்றும் உம் நினைவில்
குடும்பத்தினர்

பண்டித்தறை,
நெல்லியடி, கரவெட்டி.

## மரண அறிவித்தல்

தோற்றம் 10 . 10 . 1932



மறைவு 01 . 08 . 2020

### திருமதி சின்னப்பா கனகம்மா

வட்டுகிழக்கு, சித்தங்கேணியை பிறப்பிடமாகவும், இல.16.பிறவுண் வீதி (நீராவியடி) யாழ்ப்பாணத்தில் வசித்தவரும் தற்போது 18/A, கம்பல் பிளேஸ், தெகிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னப்பா கனகம்மா நேற்று (01.08.2020) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராஜா சின்னப்பாவின் அன்பு மனைவியும், ஆனந்தநடராஜா (இளைப்பாறிய கணக்காளர் - தே.வீ.அ.சபை - மன்னார்), ரவிக்குமரன் (இளைப்பாறிய சுங்கவரித் திணைக்கள அதிகாரி - கொழும்பு), சிவகுமார் (நந்து - இலண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் வாசுகி, சசிகலா (வைத்தியர் - களுபோவில வைத்தியசாலை), இலட்சுமி (இலண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் நிசாந் (University Of Louisiana - அமெரிக்கா), நிரோஷினி (அஞ்சல் தலைமையகம் - கொழும்பு), வைஸ்ணவி (இலண்டன்), ரம்யா (தெகிவளை), வெங்கடேஷ் (இலண்டன்), விக்னேஷ் (இலண்டன்), மயூரன் (இலண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (03.08.2020) திங்கட்கிழமை மு.ப 10.00 மணியளவில் 18A, கம்பல் பிளேஸ் தெகிவளையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 12.00 மணியளவில் கல்கிசை பொதுமயானத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:- ஆனந்தநடராஜா (மகன்) - 077 959 8231,
ரவிக்குமாரன் (மகன்) - 077 730 0308,
சிவகுமார் (மகன்)- 0044 7424 137991

# லொக்காவின் பருந்து மிருகக்காட்சி சாலைக்கு

கொழும்பு,ஓக.2

பிரபல பாதாள உலக பேர்வழி அங்கொட லொக்காவால் போதைப்பொருள் கடத்தலுக்காகப் பயன்படுத்தப்பட்டதாகக் கருதப்படும் பருந்துகை தெஹிவளை மிருகக்காட்சி சாலையில் ஒப்படைக்குமாறு நீதிமன்றால் உத்தரவிட்டுள்ளது.

அத்துருகிரிய பொலிஸாரால் நீதிமன்றுக்குக் கொண்டுவரப்பட்டிருந்த இந்தப் பறவை மூலமாக ஒரு தடவையில் 15 கிலோ கிராம் பொருள் காவிச் சென்றிருக்க முடியும் என விளக்கமளிக்கப்பட்டுள் ளது.

மீகொட, நாவலமுல்ல பகுதியில் அமைந்துள்ள விலங்குப் பண்ணையொன்றில் போதைப்பொருள் கடத்தல் நடவடிக்கைக்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் பருந்து பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டது.

மேல் மாகாணப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலுக்கமைய, அத்துருகிரிய பொலிஸார் முன்னெடுத்த சோதனையின்போதே இந்தப் பருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

போதைப்பொருளை விநியோகிக்க பாதாள உலக குழு தலைவராகக் கருதப்படும் "அங்கொட லொக்கா" என்பவரால் பருந்து பயன்படுத்தப்பட்டு வந்தது என்று ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இந்தச் சோதனையின் போது குறித்த பண்ணையில் பணியாற்றிய இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து துப்பாக்கி மற்றும் வெடிமருந்துப் பொருள்களையும் அத்துருகிரிய பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட இருவரும் அங்கொட லொக்காவின் நெருங்கிய கூட்டாளிகள் என்று தெரிவிக்கப்படுகிறது.

"குசா அலி சீ ஹாக்" என்று அழைக்கப்படும் இந்தப் பருந்து சுமார் 15 கிலோகிராம் எடையைச் சுமக்கும் திறன்கொண்டதாக நம்பப்படுகிறது. (க)


## பணியாளர் தேவை
கிளிநொச்சியில் உள்ள உணவகம் ஒன்றிற்கு சமையல் உதவியாளர் தேவை.
தொடர்பு:- 077 691 5521

## மணமகள் தேவை
42. விபத்தில் மனைவியை இழந்த Swiss Citizen தற்போது கொழும்பில்
Email: aebischerswissbern1978@gmail.com
011 581 1877

## வகுப்பு
6ஆம் வகுப்பிலிருந்து O/L வரை வரலாறு பாடம் குழுவாகவும், தனிப்பட்ட ரீதியிலும் கற்பிக்கப்படும்.
076 057 6368, 077 290 3762

## வீடு வாடகைக்கு உண்டு
யாழ். இந்துக் கல்லூரிக்கருகில் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு:- 076 333 8311

## வேலையாள்கள் தேவை
பருத்தித்துறை வீதி. கோப்பாயில் அமைந்துள்ள கடைக்கு வேலைக்கு ஆள்கள் தேவை.
(ஆண்/ பெண்) இருபாலரும்.
தொடர்புகொள்ளவேண்டிய தொலைபேசி எண்
076 9031 857

## உடல் எடை குறைய வேண்டுமா?
- எடை கூடுகிறதா?
- வயிறு. மார்பு குறைய வேண்டுமா?
- உடல் எடை குறைகிறதேயில்லை என்கின்ற கவலையா?

பால்மா குளிசை- வயிறு. மார்பு குறைக்கும் கிறீம்
15 நாள்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்.

## கருமை நிறம் நீங்க வேண்டுமா?
கருமை நிறம். கரும்புள்ளி, பருக்கள், பருவந்த அடையாளம், உதட்டுக்கருமை, கை, கால் கருமை நீக்கும் கிறீம், காய்கள் (பாலுண்ணி) அகற்றும் கிறீம், முகத்தில் உள்ள தேவையற்ற ரோமம் அகற்றும் கிறீம் என்பனவிற்பனைக்கு உண்டு.
பாவித்து 15 நாட்களில் அற்புதமான அழகைக் காண்பீர்கள்
077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

## வேலையாள்கள் தேவை
ஊர்காவற்றுறையில் உள்ள பலசரக்குக் கடைக்கு ஆண் அனுபவமுள்ள வேலையாள்கள் தேவை.
வயது 20 - 45 உட்பட்டவராக இருக்கவேண்டும்.
சம்பளம் 45,000/=
077 067 4452

## வேலையாள்கள் தேவை
யாழ் நகரில் இயங்கும் சிறப்பு அங்காடி ஒன்றுக்கு வேலையாளர்கள் தேவைப்படுகின்றனர்.
1. காசாளர் (பெண் - வயது 19 - 25)
2. விற்பனை உதவியாளர் (இருபாலாரும்)
உற்பத்தி நிறுவனம் ஒன்றுக்கு முன் அனுபவம் வாய்ந்த பெண் ஒருவர் தேவைப்படுகிறார் (வயது 35- 40)
நேர்முகத் தேர்வு: 03.08.2020 - 08.08.2020
மு.ப 9.30 - பி.ப 3.30
இடம்:- இல.175, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு : 077 623 1293

## Canada VISA
நம்பிக்கையோடு விரைவாக செய்து தருபவர்கள்
STUDENT VISA Study, Work & Settle
- பாடநெறி கட்டணம் ரூ. 350,000 இருந்து
- O/L உடன் விண்ணப்பிக்கலாம் - Without IELTS
- சகல வசதிகளும் செய்து தரப்படும்

VISIT VISA பல்வேறு சந்தர்ப்பங்களில் கனடா செல்வதற்கு சகல ஏற்பாடுகளை செய்து தரப்படும்
REFUSED VISA உங்கள் மறுக்கப்பட்ட விசாக்கள் எமது தலைசிறந்த சட்டத்தரணிகளால் கூடிய விரைவில் மீண்டும் பெற்றுத்தரப்படும்.
Sponsor Letters
Canada வில் இருந்து பெற்றுத்தரப்படும்
வயதெல்லை இன்றி Visa கிடைப்பதற்கான ஏற்பாடுகள் அனைத்தையும் செய்து தரப்படும்
Hotline: 0777-761 346
flex Institute
6A, Parakumba Place, Colombo 06.
E-mail: flexinstitute04@gmail.com
www.flexinstitute.lk
Flex Institute
STUDENT VISA
VISIT VISA
TOURIST VISA
USA / UK
Australia
New Zealand
Italy / France
Swiss
Germany
Romania
Norway
Finland
Poland
FLEX Graphic
10 வருட கால நம்பிக்கையான சேவை

## விற்பனைக்கு
Computer Tables Typist Chairs, Lecture Hall Chairs
அலுவலக கதிரைகள், அலுவலக மேசைகள் பாலை கதவுநிலை, Home Safe (அல்பா) விற்பனைக்குண்டு.
071 969 4117, 077 922 9041

## பணியாளர் தேவை
- கேபிள் திருத்துனர்
- கணக்கு ஆய்வாளர்
- பில் கிளார்க்
- கொங்கிறீற் வைபிறேற் ஒப்பிறேற்றர்

தொடர்பு:- 076 079 6075

## பெண் பணியாளர்கள் தேவை
கிளிநொச்சியில் இயங்கும் Beautipalar, பன்சி கடைக்கு கீழ்வரும் பெண் பணியாளர்கள் தேவை.
1. அழகு கலை நிபுணர்
2. முகாமையாளர்
3. ஊழியர்கள்

தொடர்புகளுக்கு: 076 938 8052

## வாடகைக்கு தேவை
யாழ்நகரில் 1Km சுற்றுவட்டாரத்தில் உணவகம் ஒன்றிற்கு கடை வாடகைக்குத் தேவை.
077 571 9803

## ஆண் வேலை ஆள்கள் தேவை
மாதகல், மானிப்பாயில் உள்ள கோழிப் பண்ணையிலும், விளான், பண்டத்தரிப்பு, சுழிபுரம், மூளாய் ஆகிய இடங்களில் உள்ள கோழி இறைச்சிக் கடைகளிலும், கோழி உரிக்கத் தெரிந்த வாகனசாரதி அனுமதிப்பத்திரம் உள்ளோர் தேவை.
இரவு, பகல் முழுநேரம்
தொடர்பு:- 077 271 8149

## விற்பனைக்கு
மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஒட்டுபலா, கயூ, கொய்யா, மாதுளை, கமுகு, யம்பு, பசன்புறுட், ரகன் புறுட், தென்னங்கன்று, செவிழை தென்னை, விலும்பி நெல்லி, முருங்கன், பப்பா, டொமினேசி மா, அல்போன்னசா மா, கோப்பி, பட்டர்புறுட், றம்பிட்டான், கறுவா, கராம்பு, மாங்குஸ்த்தான், ஏலக்கா, சீதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலை வேம்பு, ஊர்வேம்பு, சித்திரவேம்பு, சமண்டலை, கருங்காலி, காயா கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், றெட்பாம், கேவி, கொழும்பு வெற்றிலை, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஐந்தாரியம் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: நியூ லங்கா பாம்
பலாலி வீதி, ஊரெழு மேற்கு
பிள்ளையார் கோயில் வீதி,
கணேசா பாடசாலை அருகில்
077 612 9343
கிளை: K.K.S. வீதி, இணுவில்

## கார் விற்பனைக்கு

NISSAN X-TRAIL கார் 2015 Model
விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 077 113 0304

## வேலைக்கு ஆள்கள் தேவை
பருத்தித்துறை வடை, ஊறுகாய், வடகம், மோர்மிளகாய், போன்றவற்றை உற்பத்தி செய்யத் தெரிந்தவர்கள் ஆண், பெண் இருபாலாரும் தொடர்புகொள்ளலாம்
076 826 7703

## வாடகைக்கு தேவை
யாழ்நகரில் 3 Km சுற்றுவட்டாரத்தில் Parking area உடன் வீடு வாடகைக்கு தேவை
077 571 9803

## பணியாளர் தேவை
காணிகள், தோட்ட நிலங்கள் பராமரிப்பதற்கு சாதாரண பணியாளர்கள் தேவை.
076 865 5505

## வீட்டுடன் காணி விற்பனைக்கு
மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோயிலுக்கு அருகில் 4பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு.
077 6778359/ 077 4167634

## தேவை
பரந்தனில் உள்ள விற்பனை நிலையத்தை கவனிப்பதற்கு ஆண், பெண் இருபாலாரும் தேவை.
077 025 6640

## அறை வாடகைக்கு
யாழ். இந்துக் கல்லூரிக்கு அருகில் கே.கே.எஸ். வீதியில் 831/34 ஆம் நம்பர் வீட்டில் படிக்கும் பெண்கள் இருவருக்கு தங்குவதற்கு சகல வசதிகளுடனும் கூடிய அறையுண்டு.
021 222 1781

## பகுதிநேர கணக்காளர் தேவை
கிளிநொச்சியில் உள்ள ரெஸ்ரோறன்ற் ஒன்றிற்கு பகுதிநேர கணக்காளர் தேவை.
தொடர்பு:- 076 940 8589

## வீடு விற்பனைக்கு
3 பரப்புக் காணி சகல வசதிகளுடன் கூடிய வீடு இருபாலையில் அரசடி ஒழுங்கையில் உடனடி விற்பனைக்குண்டு. விலை 25 லட்சம்
077 761 7396

## வேலையாள் தேவை
மிக்சர் தொழிலகம் ஒன்றிற்கு அனுபவம் உள்ள மிக்சர் செய்யக் கூடியவர்களும், பைக்கிங் செய்யக்கூடிய பெண் பிள்ளைகளும் தேவை. வெதுப்பகத்தில் பிஸ்கட் செய்யக் கூடியவர்கள் தேவை.
தொடர்பு:- 077 546 0028

## KTM மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்கு
மிகவும் நல்ல நிலையிலுள்ள மிகக் குறைந்த KM ஓடிய BIE-XXXX இலக்கமுடைய KTM RC 200 Black மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்குண்டு.
T.P: 075 554 6000

## உடன் விற்பனைக்கு
மிகவும் நல்ல நிலையிலுள்ள குளிர்சாதனப் பெட்டி, மைக்ரோ அவன், வோசிங் மெசின், 8 இலாச்சிகளுடன் கூடிய பெரிய அலுவலக மேசை, அலுவலக கதிரைகள், கணினி மேசை, முதிரை சோக்கேஸ், சூடான, குளிரான நீர் தரும் தண்ணீர் ஃபில்ரர், Lumala (Temptation) Mountain கியர் சைக்கிள், மரக் கட்டில் என்பன உடன் விற்பனைக்குண்டு.
T.P: 071 999 9306

## உடனடி வேலை வாய்ப்பு
O/L, A/L படித்து முடித்தவர்களான முழுநேர பகுதிநேர வேலைவாய்ப்பு
077 241 7007

## வீடு வாடகைக்கு
இல.93/14, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள 3 அறை, இரண்டு குளியல் அறை, சமையலறை, Dining அறை பெரிய Hall கொண்ட வீடு நீண்டகால வாடகைக்குண்டு. மாத வாடகை ரூ 25 000/ முற்பணம் ரூ 200,000/
பார்வையிடும் நேரம்: 2pm - 6pm ஞாயிறு
தொடர்பு: 077 538 6435

## வேலையாள்கள் தேவை
யாழ்ப்பாணத்தில் புதிதாக திறக்கப்பட இருக்கும் பலசரக்கு வர்த்தக நிலையத்திற்கு வேலையாள்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
077 419 5015

## சேவை
நீங்கள் அடகுவைத்து மீட்டெடுக்கமுடியாத நகைகளை எமது நிறுவனததின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகுவைத்த நிறுவனத்திற்கு வருகைதந்து மீட்டு எடுத்து அதற்கான பெறுமதிப்பணம் அவ்விடத்திலேயே தரப்படும். நாடளாவியரீதியில் சினேகபூர்வமான சேவை.
AAA Gold Centre 076 568 4346

## துயர் பகிர்வு

எமது இசையாசிரியர் கழக அங்கத்துவ ஆசிரியை திருமதி. சுகந்தி ரட்ணேஸ்வரன் மற்றும் நடனபாட ஆசிரிய ஆலோசகர் திருமதி அகல்யா ராஜபாரதி ஆகியோரின் அன்புத் தந்தையார்.

**திரு. மாணிக்கம் சுந்தரம்** [ஓய்வுநிலை அதிபர்]

30.07.2020 அன்று இறைபதமடைந்தார். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**யாழ். கல்வி வலய இசையாசிரியர் கழகம்.**

## மரண அறிவித்தல்

### திருமதி இராசம்மா ஐயாத்துரை

(இளைப்பாறிய ஆசிரியர்)

பிறப்பு : 19.10.1936 இறப்பு : 01.08.2020



தெல்லிப்பழை மேற்கு வித்தகபுரத்தை பிறப்பிடமாகக் கொண்ட திருமதி. இராசம்மா ஐயாத்துரை 01.08.2020 சனிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு ஆச்சிமுத்து தம்பதியரின் அருமை மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற ஐயாதுரையின் பாசமிகு துணைவியும், அரவிந்தனின் (சுவிஸ்) அருமைத் தாயாரும், பிரதாகினியின் (சுவிஸ்) அன்பு மாமியும், அவன்ஜா (சுவிஸ்) அபிசேக் (சுவிஸ்) ஆகி யோரின் பாசமிகு பேர்த்தியாரும், காலஞ்சென்ற கண்மணியம்மா, சிவபாக்கியம், நல்லம்மா, கந்தையா (இளைப்பாறிய அதிபர்), முருகையா (புகையிரதப்பகுதி), ஆகியோரதும் பார்வதியம்மா, குணரத்தினம் (இளைப்பாறிய சுகாதாரப் பரிசோதகர்), பூமணி (UK) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற கண்மணி, முத்தையா, கனகரத்தினம் (புகையிரதப் பகுதி), பாலசுப்பிரமணியம் (கனடா), சிவராசா (பிரான்ஸ்), பாக்கியம் (ஓய்வுபெற்ற ஆசிரியை), ஆகியோரதும் சந்திரசேகரம் (சுகாதாரப் பகுதி), குணசேகரம் (USA), தவேஸ்வரி, பரமேஸ்வரி (யூனியன் கல்லூரி ஆசிரியை), இராஜேஸ்வரி, அருந்தவதேவி, தனபாலசிங்கம் (UK) பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.08.2020) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனத்திற்காக கீரிமலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வித்தகபுரம், நீலாவத்தை,**
**தெல்லிப்பளை மேற்கு, தெல்லிப்பழை**

**தகவல் :-**
**சகோதரர் குணரத்தினம்**

## மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 08 . 1940



மறைவு 01 . 08 . 2020

### இராசா தணிகாசலம்

(ஓய்வுபெற்ற உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ் மாநகரசபை ஆணையாளர்)

மலேசியாவை பிறப்பிடமாகவும், வடலியடைப்பு மற்றும் யாழ். கொட்டடியை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற உள்ளூராட்சி உதவி ஆணையாளரும், யாழ் மாநகரசபை ஆணையாளருமாகிய இராசா தணிகாசலம் நேற்று (01.08.2020) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசா பிள்ளைநாயகம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிவசாமி கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சந்திராதேவியின் அன்புக் கணவரும், சதீசன் (DFCC வங்கி-பிராந்திய முகாமையாளர்), நர்மதா (USA), Dr.திலீபன் (ஏழாலை அரசினர் வைத்தியசாலை-PMCU), நிமலன் (QS-அபிதாபி) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், மீனா (HNB), பாலயோகன் (USA), கஜந்தா (ஆசிரியர்-யாழ் இந்து மகளிர் கல்லூரி), சர்மிளா (ஆசிரியர்-அபுதாபி) ஆகியோரின் அன்பு மாமனாரும், அத்விகா, அஸ்விந், லயாவானதி, கீரன், அர்வின், ஆரிஷி ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம், சிவபாக்கியம் மற்றும் புவனேஸ்வரி, ஞானேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், அம்பிகைநாதன், காலஞ்சென்றவர்களான தவரத்தினம், நடராசா, ஐங்கரநாதன் மற்றும் செல்வரத்தினம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.08.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.34, ஆஸ்பத்திரி வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.
T.P:021 222 5175

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம் 01 . 09 . 1939



மறைவு 01 . 08 . 2020

### திருமதி.தனலட்சுமி சோமசுந்தரம்

காரைநகர் இராசாவின் தோட்டத்தைப் பிறப்பிடமாகவும், காரைநகர் களபூமியை வதிவிடமாகவும் கொண்டிருந்து யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் வசித்து வந்தவருமாகிய திருமதி. தனலட்சுமி சோமசுந்தரம் அவர்கள் 01.08.2020 சனிக்கிழமை அன்று இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரகத்தி ஆறுமுகம் சுப்பிரமணியம் - சிதம்பரம் தம்பதிகளின் அன்பு மகளும்,காலஞ்சென்றவர்களான கந்தர்ப்பர் வைத்திலிங்கம் - இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும்,காலஞ்சென்ற வைத்திலிங்கம் சோமசுந்தரம் (ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், தனபாலசிங்கம் சோமசுந்தரம் (ஆசிரியர்-றோயல் கல்லூரி, கொழும்பு), திருமதி.விஜயலட்சுமி முருகானந்தன், காலஞ்சென்ற மகாலட்சுமி சோமசுந்தரம் ஆகியோரின் அன்புத் தாயாரும்,சிவசம்பு முருகானந்தன் (உரிமையாளர்.முருகானந்தம் ஸ்ரோஸ், யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மாமியாரும்,காலஞ்சென்றவர்களான பாக்கியம், பர மேஸ்வரி, சாங்கரப்பிள்ளை, ஆறுமுகம், இந்திராணி, கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரியும்,சோபிதா, சௌமியா, அக்ஷயா, வைஷ்ணவி, ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.08.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10:00 மணியளவில் இல.185 பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பின்னர் கொக் குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு:**
**+94777794324 (மகன்)**
**+94778586565 (மகள்)**

**தகவல்:**
**தனபாலசிங்கம் (மகன்)**

## மரண அறிவித்தல்

தோற்றம் 14 . 05 . 1935



மறைவு 31 . 07 . 2020

### வீரகத்தி நடராஜா

கட்டுவனை பிறப்பிடமாகவும், தம்பாலையை வசிப்பிடமாகவும் கொண்ட வீரகத்தி நடராஜா கடந்த (31.07.2020) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரகத்தி - அருமை தம்பதியினரின் அன்பு மகனும் சீனியர் - வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் மருமகனும் காலஞ்சென்ற அருந்தபத்தின் பாசமிகு கணவரும் நல்லம்மா, அன்னம்மா, ஐயம்பிள்ளை ஆகியோரின் சகோதரனும் கேதீஸ்வரன் (லண்டன்), சைலா (லண்டன்), வினோதரன் (பிரான்ஸ்), சுகிர்தா (பிரான்ஸ்), ஜெகதீஸ் (லண்டன்), ஞானதீபம் (லண்டன்), ஞானசேகரம் (லண்டன்), கவிதா (பிரான்ஸ்), சக்திவேல் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும் கபில்ராஜ், கவிசன், சகானா (லண்டன்), குணலன், பமிலா, கிதுசன், மிதுசன் (லண்டன்), தனிசா, அட்ஷயன், கவிஸ்கா (பிரான்ஸ்), சாருஜன், இந்துஜா, இனிஷா (பிரான்ஸ்) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.08.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தம்பாலை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(லண்டன்) 1) கேதீஸ்வரன் (மகன்), ஞானதீபம் (மருமகன்), கபில்றாஜ், கவிசன், சகானா (பேரப்பிள்ளை)
+079 4637 9595

(லண்டன்) 2) சைலா (மகள்), ஞானசேகரம் (மருமகன்), குணலன், பமிலா, கிதுசன், மிதுசன் (பேரப்பிள்ளை)
+077 3793 4789

(லண்டன்) 5) ஜெகதீஸ் (மகன்)
+447 3929 93416

தகவல்:-
**குடும்பத்தினர்**

(பிரான்ஸ்) 3) வினோதன் (மகன்), கவிதா (மருமகள்), தனிசா, அட்ஷயன், கவிஸ்கா (பேரப்பிள்ளை)

(பிரான்ஸ்) 4) சக்திவேல் (மருமகன்), சுகிர்தா (மகள்), தாருஜன், இந்துஜா, இனிஷா (பேரப்பிள்ளைகள்)
0033 6525 49663

# புலிகளைத் தோற்கடிக்க எண்ணியோரே தமிழ்க் கூட்டமைப்பையும் வீழ்த்த முயற்சி

## இடித்துரைக்கிறார் சரவணபவன்

தமிழீழ விடுதலைப் புலிகளால் காலத்தின் தேவை கருதி உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றி என்பது தனியே அந்தக் கட்சியின் வெற்றிமட்டுமல்ல. மாறாக தமிழ் மக்களினதும், தாயக தேசத்தினதும் வெற்றியாகவே கணிக்கப்படும். அதேநேரம் கூட்டமைப்பின் வெற்றி என்பது ராஜபக்சக்களின் சிங்கள பேரினவாதிகளின் தோல்வியாகவும் கருதப்படும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழீழ விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்டது. 2001ஆம் ஆண்டு அப்போதைய அரசியல் சூழலில் தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமையை உணர்ந்து இந்த உருவாக்கம் மேற்கொள்ளப்பட்டது. கூட்டமைப்பின் உருவாக்கம் தொடர்பில் இன்று பலர் பலதையும் கூறலாம். ஆனால் தாயக தேசத்து மக்களுக்கு கூட்டமைப்பை உருவாக்கியது யார் என்ற உண்மை தெரியாததொன்றல்ல. 2004ஆம் ஆண்டு கூட்டமைப்புக்கான ஆதரவை தமிழீழ விடுதலைப் புலிகள் வழங்கியிருந்தார்கள். தமிழீழ விடுதலைப் புலிகளை ஏக பிரதிநிதிகளாக கூட்டமைப்பு தனது தேர்தல் அறிக்கையிலும் ஏற்றுக் கொண்டிருந்தது.

சிங்களவர்களுக்கும், ஆட்சியிலிருக்கும் ராஜபக்சக்களும் தமிழீழ விடுதலைப் புலிகளை ஆயுத ரீதியாகத் தோற்கடித்ததை பெரும் வெற்றியாகக் கொண்டாடுகின்றார்கள். அவர்களுக்கு இப்போது இருக்கின்ற ஒரேயொரு தேவை, தமிழீழ விடுதலைப் புலிகளின் கொள்கைகளை அரசியல் ரீதியாக செயற்படுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தோற்கடிக்க வேண்டும் என்பதுதான். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தோற்கடிப்பதன் ஊடாக தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுத, அரசியல் பலத்தை அடியோடு வேரறுத்து விட்டோம் என்று மார்தட்ட முடியும். அதற்காகவே கூட்டமைப்பை தோற்கடிப்பதற்கு ராஜபக்சக்கள் தலையால் நடக்கின்றனர்.

ராஜபக்சக்களின் நோக்கத்தை நிறைவேற்றும் வகையில், அவர்கள் விரும்பும் வகையில் கூட்டமைப்பைத் தோற்கடிக்க இங்கே பல கோடரிக்காம்புகளும் களமிறங்கியிருக்கின்றன. ம்க்களே! பாலும், கள்ளும் நிறத்தால் ஒன்று. ஆனால் அதன் தரமும் சுவையும் வெள;வேறானவை. தமிழ்க் கூட்டமைப்பு போல் வேடமிட்டு களமிறங்கியுள்ள புல்லுருவிகள் தொடர்பில் விழிப்பு அவசியம். இல்லையேல், தமிழ் மக்களின் எதிர்காலம் இருண்டயுகத்துக்குள்தான் தள்ளப்படும்.

ராஜபக்சக்களின் விருப்பத்தை தமிழ் மக்கள் நிறைவேற்றப் போகின்றனரா? இல்லை ராஜபக்சக்களைத் தோற்கடிக்கப் போகின்றனரா?, என்று கேள்வி எழுப்பினார், சரவணபவன்.

(ஒ.5)

# மொனராகலையில் விவசாயப் பொருளாதாரம்

## ஜனாதிபதி உறுதி

கொழும்பு, ஓக. 2

இளைஞர் தலைமுறையினர் விவசாயத்தைக் கைவிட்டு வேறு தொழில்களுக்குச் செல்வதை நிறுத்தி, விவசாயத்துறைக்கு அவர்களை ஈர்க்கும் வகையில் மொனராகலை மாவட்டத்தில் விவசாயப் பொருளாதாரம் ஒன்று கட்டியெழுப்பப்படும் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

சிறிய நிலப்பரப்பில் குறைந்த உற்பத்திச் செலவுடன் உயர் தொழிநுட்ப முறையைப் பயன்படுத்தி அதிக தரம் வாய்ந்த, கூடுதலான அறுவடையைப் பெறக்கூடிய விவசாயப் பொருளாதாரம் ஒன்றை கட்டியெழுப்புவது தனது கொள்கையாகும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவில் பொதுத் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் வெற்றியை உறுதிசெய்யும் வகையில் ஜனாதிபதி மொனராகலை மாவட்டத்தில் சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்தபோதே இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் இந்தப் பயணத்தின் போது, மொனராகலை மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் அவரிடம் பல கோரிக்கைகளையும் முன்வைத்தனர்.

(ஐ)

பாராளுமன்றப் பொதுத் தேர்தல் - 2020
யாழ்.- கிளிநொச்சி மாவட்டம்


தடம் மாறாத தலைமையின்
வழி காட்டலில்
புதிய பயணம்.....
X 10
தமிழர் விடுதலைக் கூட்டணி
சீவரத்தினம் கோபிதாசன்


பாராளுமன்றத் தேர்தல் 2020
யாழ் மாவட்டம்
"இரண்டு தேசங்கள் ஒரு நாடு"

எமது முன்மொழிவுகள்:
1. ஒற்றையாட்சி அரசியலமைப்பிற்கான இடைக்கால அறிக்கையை முற்றாக நிராகரித்து சுயநிர்ணய உரிமை அடிப்படையில் சமஷ்டி தீர்வை அடைய பாடுபடுதல்
2. இனப்படுகொலைக்கான சர்வதேச நீதி கோரி சர்வதேச ரீதியில் அழுத்தம் கொடுத்தல்
3. அரசியல் கைதிகளின் விடுதலை மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான தீர்வினையும் நீதியையும் வேண்டி சர்வதேச சமூகத்தின் உதவியையும் பொறிமுறையையும் வலியுறுத்துதல்.
4. பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்க நடவடிக்கை எடுத்தல்
5. ஆக்கிரமிக்கப்பட்டுள்ள அரச, தனியார் காணிகளை விடுவிக்கவும், மீள்குடியேற்ற நடவடிக்கைகளை துரிதப்படுத்தவும் அழுத்தம் கொடுத்தல்,
6. திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் சிங்கள பௌத்த மயமாக்கலை எதிர்த்தல் மற்றும் இராணுவ பிரசன்னத்திற்கெதிராக குரல் கொடுத்தல்
7. தொல்லியல் திணைக்களம் உட்பட பல அரச திணைக்களங்களால் மேற்கொள்ளப்பட்டுவரும் வழிபாட்டுத்தல, நில ஆக்கிரமிப்புக்கெதிராக சாத்தியமான நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.
8. போதை மற்றும் வன்முறைக் கலாசாரத்தை இல்லா தொழித்தல்
9. சமய, சமூக பாகுபாடுகளற்ற பால் நிலை சமத்துவத்தை பேணும் தமிழ் அரசியல் கலாச்சாரத்தை வளர்த்தெடுத்தல்.
10. எமது பிரதேசங்களில் நிலவும் வேலையற்ற இளைஞர் யுவதிகளின் பிரச்சினை மற்றும் வாழ்வாதார பிரச்சினைகளுக்கு புலம்பெயர் தமிழர்களின் உதவியுடன் வேலை வாய்ப்புகளையும், உடனடி நிவாரண உதவிகளையும் பெறுவதற்கு பாடுபடுதல்.


X 2 4 10
நடராஜர் காண்டீபன்
(சட்டத்தரணி)
சட்ட ஆலோசகர் - தமிழ் தேசிய மக்கள் முன்னணி
(அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்)
தாயகம் - தேசியம் - சுயநிர்ணய உரிமை

# பாராளுமன்றத் தேர்தல் - 2020

## யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்

## தேசியம்... சூழலியம்... சுயநிர்ணயம்


10
**கா.சோ. சிவநேசன்**
சூழலியல் நிபுணர்


1
முதன்மை வேட்பாளர்
**பொ. ஐங்கரநேசன்**
சூழலியலாளர்
முன்னாள் விவசாய அமைச்சர் - வடமாகாணம்


2
**க. கேதீஸ்வரநாதன்**
கௌரவ உறுப்பினர்
நெடுந்தீவு பிரதேச சபை


9
**சண் தயாளன்**
ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர்


3
**ஜீ. ஜெயதீஸ்**
மரபியலாளர்


8
**மலர் சின்னையா**
ஓய்வுநிலை அதிபர்
ஆசிரியர் கலாசாலை. கோப்பாய்.


4
**தே. மிதுசன்**
மாணவன்
யாழ். பல்கலைக்கழகம்.


6
**நிமலினி வோல்டன்**
சமூக சேவகி

அரசியலில்
தமிழ்த் தேசியச் செழுமை
அபிவிருத்தியில்
நிலைபேறான முழுமை
சுற்றுச்சூழலில்
காணுமிடமெல்லாம் பசுமை


7
**பா. காசிநாதன்**
ஓய்வுநிலை ஆசிரியர்
யாழ். பரியோவான் கல்லூரி


5
**நா. பார்த்தீபன்**
பொது முகாமையாளர் - பனை, தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் - கரவெட்டி.

## மாங்கனி வெற்றிக்கனி

சுயேச்சைக் குழு - 8 | X

# தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்

# ஜனநாயக உரிமையான வாக்களிப்பில் ஈடுபடுங்கள்

## மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் வேண்டுகோள்

**மட்டக்களப்பு, ஓக. 2**

**நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் பொதுமக்கள் எவ்வளவு கஷ்டம் இருந்தாலும் அனைவரும் நேரம்ஒதுக்கி தமது ஜனநாயக உரிமையான வாக்களிப்பில் ஈடுபடவேண்டும் என்று மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் கலாநிதி பொன்னையா பொதுமக்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.**

மட்டக்களப்பு ஜோசப் ஆயர் இல்லத்தில் நேற்றுமுன்தின் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

நான் அரசியல் சார்பற்றவன். எந்த அரசியல் கட்சிகளையும் சாராதவன். அரசியலுக்கு அப்பால் எல்லா மதங்களுக்கும் பொதுவாகவே சேவை புரிந்து வருகின்றேன். வாக்களிப்பது மனித உரிமை. அது எமது கடமையுமாகும். சிறையிலிருப்பவர்களுக்கும் வாக்களிக்கும் உரிமையை அரசு வழங்கவேண்டும் என கோரிக்கை விடுத்தவன். மட்டக்களப்பு மாவட்டத்தில் பலர் சிரமத்தில் வாக்களிப்பதில்லை. பலரது வாக்குகள் நிராகரிக்கப்படுப வையாகவும் காணப்படுகின்றன. இவற்றை நன்றாகக் கவனத்தில் கொண்டு வாக்களிக்க வேண்டும். பொதுமக்கள் நன்றாக சிந்தித்து பொருத்தமானவர்களை நீங்களே தெரிவு செய்யவேண்டும். எவ்வளவு கஷ்டமான வேலைகள் இருந்தாலும் நீங்கள் அனைவரும் கட்டாயம் நேரமொதுக்கி வாக்களிக்க வேண்டும். நான் சிவில் சமுகத்தின் போசகராக செயற்பட்டு வருகின்றேன். இனவாதம், மதவாதம், மொழி வாதம் இருக்கக்கூடாது. அதனைத் தவிர்க்கவேண்டும். வேட்பாளர்கள் வன்முறைகளைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும் எனவும், இதனை ஊடகங்கள் மக்களிடையே கொண்டு செல்லவேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார். (ரி2)

# வாக்காளர்களுக்கு 2 கோடி

## பதுளை வேட்பாளர் மீது குற்றஞ்சாட்டும் சீ.எம்.ஈ.வி

கொழும்பு, ஓக 2

பொதுத்தேர்தலில் பதுளை மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் வாக்குகளை சேகரிப்பதற்காக 5 ஆயிரம் ரூபாய் தாள்கள் வாக்காளர்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இவர் இதுவரை வாக்காளர்களுக்கு 2 கோடி ரூபாயை வழங்கியுள்ளார் என்று தேர்தல் வன்முறைகள் தொடர்பான கண்காணிப்பு மையமான சீ.எம்.ஈ.வி தகவல் வெளியிட்டுள்ளது. இந்த நிலையில் தேர்தலுக்கு முன்னர் தேர்தல் களத்தில் இவ்வாறான சீரற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. என சீ.எம்.ஈ.வியின் தேசிய இணைப்பாளர் மஞ்சுள கஜநாயக்க தெரிவித்துள்ளார்.

இவ்வாறான் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் முகமாக நாடாளுமன்றத்தில் யோசனை ஒன்று முன்வைக்கப்பட்டுள்ள போதிலும் அது அங்கீகரிக்கப்படவில்லை என் தேர்தல்கள் ஆணைக்குழு தலைவ ஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி1)

# தன்னுரிமைப் போராட்டத்தை சிதைவடையாது காக்கவேண்டும்




## ஆஸ்திரேலிய தமிழ் கலாசாரக் கழகம் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக. 2

இலங்கையில் கடந்த எழுபது வருடங்களாக நடந்துவரும் தமிழ் மக்களின் தன்னுரிமைக்கான போராட்டம் பெருமைக்குரிய ஒன்று. அதைச் சிதைவடையாது பாதுகாக்கவேண்டியது தமிழ் பேசும் மக்களின் கடமை என்று ஆஸ்திரேலியத் தமிழ் கலாசாரக் கழகம் குறிப்பிட்டுள்ளது.

இது பற்றி கழகம் அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஆழ்ந்து சிந்தித்து தங்கள்வாக்குகளை செலுத்துமாறு விண்ணப்பிக் கிறோம். பல பின்னடைவுகளைச் சந்தித்திருப்பினும் நீதிக்கும் இறைமைக்கும் சம உரிமைக்குமான வேட்கை என்றும் தணியவில்லை. போராட்ட வடிவங்கள் காலத்துக்கு காலம் மாறிவந்திருக்கின்றன.

தொடக்க காலத்தில் சமஷ்டிக்கட்சி (தந்தை செல்வா தலைமையிலான தமிழ் அரசுக் கட்சி) 'ஒத்துழையாமை' என்ற ஆயுதத்தையே பயன்படுத்தியது.

பின்னர் அது ஆயுதப் போராட்டம் என்ற வடிவில் குறித்த காலம் நீடித்திருந்தது. அதன் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களுக்கான தலைமையை ஏற்று அரசின் தமிழ் மக்களுக்கு எதிரான செயற்பாடுகளை எதிர்த்தும் மெத்தனப் போக்குகளை கண்டித்தும் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை நடைமுறைப்படுத்துமாறும் அரசைக் கோரிவந்துள்ளது.

கடந்த நாடாளுமன்றின் ஆட்சிக்காலத்தில் தென்பகுதியில் உள்ள முற்போக்குவாதிகளுடனும் வெளிநாடுகளின் சக்திகளுடனும் இணைந்து தமிழ் மக்களுக்கான தீர்வை உருவாக்க முனைந்தது. அதனால் சிறிய முன்னேற்றம் ஏற்பட்டிருப்பினும் தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றும் காத்திரமான தீர்வைத் தரும் நிலையை அடைய முடியவில்லை . தமிழ் மக்களுக்கு அவர்களின் தன்னுரிமை கோரிக்கை முக்கியமானதாயினும் இலங்கை அரசுக்கு அது பலவற்றில் ஒன்றான ஒரு விடயம்.

அதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தம் கருத்தில் பெரும்பான்மையை நாடாளுமன்றத்தில் கொண்டுவருவதில் ஈடுபட்டது. இது சாத்தியமாவதற்கு தென்பகுதி ஆதரவு இன்றியமையாதது மட்டுமல்ல அவர்களுடன் ஒரு பொதுக் கட்டமைப்பை உருவாக்க வேண்டிய நிர்ப்பந்தம் இங்கு உண்டு.

தமிழ்த் தலைமைக்கு ஒரு நீண்டகால தொலைநோக்கு அவசியம். அதனடிப்படையில் 2018 இல் அரசமைப்பில் ஏற்பட்ட சிக்கலில் ஜன நாயக உரிமைகளைக் காக்க உதவியதால் ஒரு சிறு முன்னேற்றம் உலகளாவிய அளவிலும் தென்பகுதியிலும் ஏற்பட்டது. இந்த முன்னேற்றம் மேலும் இன்றைய நிலையில் வலுப்படுத்தப்படுவது மிக இன்றியமையாதது.

இலங்கையில் இன்றைய அரசு, ஊழல் இராணுவமயமாக்கல் தான்தோன்றித்தனமான ஆட்சி, நீதிமுறைகளை தமக்குச் சார்பாக மாற்றுதல் அல்லது நசுக்குதல் போன்ற அதிகார அத்துமீறல்களை நடத்தி வருகிறது. அரசின் பதின்மூன்றாம் பத்தொன்பதாம் அரசமைப்புத் திருத்த நீக்கம்' நடைமுறைக்கு வருமானால் அது தமிழர்களுக்கு மிக மோசமான பின்னடைவையே உருவாக்கும். என்றுள்ளது. (து)

# நான்கரை ஆண்டுகளில் நாம் செய்தவை ஏராளம்

## கூறுகின்றார் மனோ கணேசன்

கொழும்பு, ஓக. 2



40 வருடங்கள் அமைச்சரவையில் பலமிக்க அமைச்சு பதவிகளை வகித்த மலையக அரசியல்வாதிகள் செய்யாத பல சேவைகளை தமிழ் முற்போக்கு கூட்டணி நான்கரை ஆண்டு காலப்பகுதிக்குள் செய்துள்ளது என்றும் அலரிமாளிகையை பிடிப்பதே தமது கட்சியின் இலக்கு என்றும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மலையகம் தொடர்பில் புதிய கனவுகளை நாம் காணவில்லை. நாம் கண்ட கனவுகள் கணிசமானவற்றையே நிறைவேற்றி இருக்கிறோம். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் நிறுவுநர் சௌமியமூர்த்தி தொண்டமான் தொடக்கம் அமரர் ஆறுமுகன் தொண்டமான் வரையில் 40 வருடங்களாக அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக இருந்திருக்கிறார்கள். அவர்கள் தூங்கிக் கொண்டே இருந்திருக்கிறார்கள். அதனாலேயே அவர்கள் வெறும் கனவுகளை மாத்திரம் கண்டார்கள். நல்லாட்சி அரசில் நாங்கள் வெறும் நான்கரை வருடங்களே அமைச்சரவையில் அமைச்சராக இருந்தோம். இந்த நான்கு வருடங்களில் 40 வருடங்களுக்கு ஈடு செய்யும் விதத்தில் மலையகத்தில் அபிவி ருத்தியும் எமது மக்களுக்கு சேவையும் முன்னெடுக்கப்பட்டது. - என்றார். (து)



## 22 சாரதிகளுக்கு ரூ.4 லட்சம் தண்டம்

சாவகச்சேரி.ஓக.2
போக்குவரத்து விதிமுறைகளை மீறி வாகனம் செலுத்திய 22 வாகனச் சாரதிகளுக்கு சாவகச்சேரி நீதிமன்றால் 4 லட்சத்து 7 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.
சாவகச்சேரி மற்றும் கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டன. மது போதையில் வாகனம் செலுத்தியோர், மது போதையில் சாரதிய அனுமதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்தியோர், மது போதையில் வாகன வரிப்பத்திரமின்றி வாகனம் செலுத்தியோர் உள்ளிட்ட 22 பேருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டன. இதன் போது நீதிவானால் தண்டம் விதிக்கப்பட்டது. (க9)

## போதைப்பொருள் கடத்தல் சந்தேகநபர் கைது

கொழும்பு, ஓக 2
தெமட்டகொடை பிரதேசத் தில் பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பொன்றில் போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய சந்தேகநபரொருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். கைதுசெய்யப்பட்ட நபரின் வீட்டிலிருந்து 140, 000 அமெரிக்க டொலர் மற்றும் 5 கோடியே 80 இலட்சம் ரூபா பணம் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ரி1)

கிரிதலேகம மத்திய மகா வித்தியாலய

## ஆசிரியர்கள், மாணவர்கள் சுயதனிமைப்படுத்தலில்

பொலநறுவை, ஓக.2
பொலநறுவை, கிரிதலேகம மத்திய மகா வித்தியாலயத்தில் கற்கும் 450 மாணவர்கள் 82 ஆசிரியர்கள் மற்றும் 7 ஊழியர்கள் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். லங்காபுர பிரதேச செயலகத்தில் அடையாளம் காணப்பட்ட கொரோனா நோயாளியுடன் நெருங்கிப் பழகிய ஆசிரியர் ஒருவர் காரணமாகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
இந்த ஆசிரியர் இதுவரை சுயதனிமைப் படுத்தப்பட்டுள்ள நிலையில் அவர் கடந்த நாள்களில் பாடசாலைகளில் கற்கை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ரி3)

# கொரோனாவை ஒழிப்பதற்கு இலங்கையுடன் கைகோர்க்கத் தயார்

### சீனா அறிவிப்பு

**கொழும்பு, ஓக. 2**
**கொவிட் 19 வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தி, அதனை முற்றாக இல்லாதொழிப்பதில் இலங்கையுடன் தொடர்ந்தும் இணைந்து செயற்படத் தயாராக இருப்பதாக சீனா தெரிவித்துள்ளது.**



சீனத்தூதரகமும், 'பாத் ஃபைண்டர் பவுண்டேஷன்' அமைப்பும் ஒன்றிணைந்து கொழும்பில் கடந்த வியாழக்கிழமை 'கொவிட் 19 கட்டுப்பாடு மற்றும் தடுப்பு' என்ற நூலின் சிங்கள மொழிபெயர்ப்பு நூலை வெளியிட்டுள்ளன.
இந்தச் சிங்கள மொழிபெயர்ப்பு நூலின் முதற்பிரதி சீனத்தூதரக விவகாரங்களுக்குப் பொறுப்பான அதிகாரி ஹூ வே மற்றும் பாத் ஃபைண்டர் பவுண்டேஷன் அமைப்பின் முன்னாள் பணிப்பாளர் லக்ஸ்மன் சிறிவர்தன ஆகியோரால், சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் வைத்திய கலாநிதி லக்ஷ்மி சோமதுங்க மற்றும் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் அனுஷா பெர்னாண்டோ ஆகியோரிடம் கையளிக்கப்பட்டது.
இதன்போது 'கொவிட் 19 கட்டுப்பாடு மற்றும் தடுப்பு' என்ற நூலை மொழி பெயர்ப்பதற்கான பதிப்புரிமையை இலவசமாக வழங்கிய சீனப் பங்காளர்களுக்கு நன்றி தெரிவித்த லக்ஷ்மன் சிறிவர்தன, கொரோனா வைரஸ் தொற்றுநோயின் பின்னர் இருநாடுகளுக்கும் இடையிலான நட்புறவும் ஒத்துழைப்பும் மேலும் வலுவடையும் என்ற நம்பிக்கையுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.
மேலும், இலங்கை மற்றும் சீன நாடுகளின் சுகாதாரத் திணைக்களங்களுக்கு இடையில் நீண்டகாலமாகப் பேணப்பட்டுவரும் இணக்கப்பாடு மற்றும் அண்மைக்காலமாக சீனாவினால் தொடர்ச்சியாக வழங்கப்பட்டுவரும் மருத்துவ உதவிகள், கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் அனுபவப்பகிர்வு ஆகியவை பெரிதும் வரவேற்கப்பட வேண்டியவையாகும் என்று சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் தெரிவித்துள்ளார். (ரி2)



## ஷானி அபேசேகர விளக்கமறியலில்

கொழும்பு, ஓக 2
குற்றப்புலனாய்வுத் திணைக்கள முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர எதிர்வரும் 7ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். கம்பஹா நீதவான் முன்னிலையில் அவர் நேற்று முன்தினம் இரவு ஆஜர்படுத்தப்பட்ட போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.
ஷானி அபேசேகர கொழும்பு குற்றவியல் பிரிவினரால் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டு 8 மணித்தியாலங்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார். இதனையடுத்து அவர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார். (ரி1)



லண்டன் என்பீல்ட் நாகபூசணி அம்பாள் ஆலயத்தின் நிதி உதவியுடன், வெளிச்சம் அறக்கட்டளையால் பாடசாலை மாணவர்களுக்கு முகக் கவசங்கள் வழங்கும் திட்டத்தின் ஐந்தாவது கட்டமாக, வவுனியா கருங்காலிக்குளம் அ.த.க. பாடசாலை மற்றும் வவுனியா செட்டிகுளம் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலை மாணவர்களுக்கான முகக்கவசங்கள் பாடசாலைகளின் அதிபர்களிடம் வழங்கப்பட்டன. (ரி3-222)

ரிஷாத்துக்கு எதிரான

## வில்பத்து வழக்கு தீர்ப்பு ஒத்திவைப்பு

கொழும்பு, ஓக. 2
முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் உட்பட ஐவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோரி சுற்றுச்சூழல் நீதிக்கான மையம் தாக்கல் செய்த வழக்கின் தீர்ப்பு திகதி அறிவிப்பு இன்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது. வில்பத்து சரணாலயத்தில் காட்டின் ஒரு பகுதியை அழித்து சட்ட விரோதக் கட்டுமானங்கள் மற்றும் மீள் குடியேற்றத்தை முன்னெடுத்தனர் எனக் கூறப்படும் விடயம் தொடர்பிலான வழக்கின் தீர்ப்பே இவ்வாறு மேன் முறையீட்டு நீதிமன்றத்தினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.
நேற்றுமுன்தினம் இந்த ரிட் மனு தொடர்பிலான தீர்ப்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதிகளான ஜனக்க டி சில்வா, நிஷங்க பந்துல கருணாரத்ன ஆகியோரால் அறிவிக்கப்படவிருந்த நிலையிலேயே இவ்வாறு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் இந்த நீதிபதிகள் இருவர் உள்ளடங்கிய அமர்வுகள் எவையும் இடம்பெறவில்லை. இதனால் மேன் முறையீட்டு நீதிமன்றின் 204 ஆம் இலக்க விசாரணை அறையில் நேற்றுமுன்தினம் விசாரிக்கப்படவிருந்த அனைத்து வழக்குகளும் எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்படுகின்றது என அறிவிக்கப்பட்டுள்ளது. (ரி1)



கிளிநொச்சி நகரின் பல பகுதிகளில் அன்றாடம் பயன்படுத்தும் கழிவுப் பொருள்களை சுகாதார நடைமுறையைப் பின்பற்றாமல் மக்கள் பல இடங்களிலும் கொட்டிவருகின்றனர். இதன் காரணமாக பல தொற்று நோய்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களை மக்கள் தாமே உரு வாக்கி வருகின்றனர் எனவும், இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நட வடிக்கை எடுக்கவேண்டும் எனவும் சமூக ஆர்வலர்கள் கோரியுள்ளனர். (ரி3-113)

## ராஜித, மொஹமட் ரூமிக்கு எதிராக குற்றப் பத்திரிகைகள் தாக்கல்

கொழும்பு, ஓக. 2
முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன மற்றும் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபன முன்னாள் தலைவர் மொஹமட் ரூமி ஆகியோருக்கு எதிராக நேற்று கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர், வெள்ளை வான் கடத்தல் தொடர்பில் செய்தியாளர் சந்திப்பு ஒன்றை ஏற்பாடு செய்த குற்றச்சாட்டுத் தொடர்பிலேயே சட்டமா அதிபரால் இந்தக் குற்றப் பத்திரிகைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்த நிலையில் குறித்த செய்தியாளர் சந்திப்பின் போது சாட்சியங்களாக கொண்டுவரப்பட்ட இருவரையும் விடுவிக்கும் கோரிக்கையும் சட்டமா அதிபரால் மன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

வெள்ளை வான் கடத்தல்களின் போதும், கிளிநொச்சியில் இருந்து தங்கம் கொண்டு வந்தபோதும் தாமே சாரதியாக இருந்தார் என்று கூறி செய்தியாளர் சந்திப்பொன்று 2019 ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

எனினும், இது விசாரணைகளின்போது புனையப்பட்ட ஒரு செய்தியாளர் சந்திப்பு என்ற அடிப்படையிலேயே, ராஜித மற்றும் மொஹமட் ரூமி ஆகியோருக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. (ரி2)

# எம்.சி.சி. உடன்படிக்கை தொடர்பில் அரசின் நிலைப்பாடு என்ன?

*தேர்தலுக்குமுன் வெளிப்படுத்தக் கோரிக்கை*

கொழும்பு, ஓக 2

**எம்.சி.சி.உடன்படிக்கை தொடர்பில் அரசாங்கம் தேர்தலுக்கு முன்னர் தமது நிலைப்பாட்டை வெளியிட வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. அதேநேரம் படையினர் தொடர்பான “சோபா”உடன்பாடு மற்றும் திருகோணமலையின் எரிபொருள் குதங்கள்,கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு தளம் மற்றும் மத்தளை வானூர்தி தளம் ஆகியவை தொடர்பிலும் அரசாங்கம் தமது நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டும் என்று தேசிய மக்கள் சக்தி கோரியுள்ளது.**

தேசிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜெயதிஸ்ஸ செய்தியாளர் சந்திப்பின் போது இந்தக் கோரிக்கைகளை முன்வைத்தார். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச வெறுமனே நாடளாவிய ரீதியில் மக்களிடம் சென்று வருவது போன்று ஊடக சாகசம் காட்டாமல் இந்த விடயங்கள் தொடர்பில் தமது நிலைப்பாட்டை வெளியிடவேண்டும் என்று நளிந்த ஜெயதிஸ்ஸ கேட்டுக்கொண்டார். எம்.சீ.சீ தொடர்பில் அரசாங்கம் ஜனாதிபதி தேர்தலின்போது இழிவாகப்பேசியது. எனினும் தற்போது அரசாங்கம் அந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டு வருகிறது. எனவே எம்.சீ.சீ உடன்படிக்கையை தேர்தலுக்கு முன்னரும் சோபா உடன்படிக்கையை தேர்தலின் பின்னரும் அரசாங்கம் கைச்சாத்திடப்போகிறதா என்பது தொடர்பில் கோத்தாபய தமது நிலைப்பாட்டை வெளியிட வேண்டும் என்று நளிந்த ஜெய திஸ்ஸ கோரிக்கை விடுத்துள்ளார். (ரி1)

## குழந்தைகளை விகாரையில் கைவிட்டுச் சென்ற தாய் கைது

பதுளை, ஓக 2
இரு குழந்தைகளை விகாரை மண்டபத்தில் கைவிட்டுத் தலைமறைவாகிய 28 வயதுடைய தாயை, கொஸ்லந்தைப் பொலிஸார் நேற்றுக் காலை கைது செய்துள்ளனர். மீட்கப்பட்ட இரண்டரை வயது பெண் குழந்தையும் ஐந்து மாதங்களைக் கொண்ட ஆண் சிசுவும் கொஸ்லந்தை அரசினர் மருத்துவமனையின் விசேட அறையொன்றில் வைத்துப் பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

கைது செய்யப்பட்ட தாய் பொலிஸாரிடம் வழங்கிய வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளதாவது:

எனது கணவனுக்கும் எனக்குமிடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டு, கணவனுடன் தொடர்ந்து வாழ முடியாத நிலை, எனக்கு ஏற்பட்டது. எனதும், குழந்தைகளதும் பாதுகாப்பு கருதி, எமது ஊர் விகாரைக்குச் சென்று இரவு தங்கினேன். மறுதினம் அதிகாலை குழந்தைகள் நித்திரையிலிருக்கும் போது, குழந்தைகளை விட்டு விட்டு சென்று, நிக்கபொத்தை என்ற இடத்தில் உறவினர் வீடொன்றில் தங்கியிருந்தேன். பொலிஸார் என்னைத் தேடி வந்து கைதுசெய்தனர். எனது கணவனுடன் வாழ முடியாதாலேயே, இவ்வாறாக செயற்பட்டேன்' எனத் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து, இப் பெண்ணின் கணவரையும் கைது செய்ய பொலிசார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட பெண்ணை, பண்டாரவளை மஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய ஏற்பாடுகளை செய்துள்ளோம் என்று கொஸ்லந்தை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (ரி1)

## கட்டுநாயக்க விமான நிலைய புதிய கட்டுமானம் விரைவில்

கொழும்பு, ஓக.2
பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் புதிய முனையத்தின் கட்டுமான பணிகள் எதிர்வரும் செப்ரெம்பரில் ஆரம்பிக்கப்பட்டு, மூன்று ஆண்டுகளுக்குள் நிறைவடையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், புதிய முனையத்தின் கட்டுமானப்பணிகள் முடிவடைந்ததும், ஆண்டுக்கு மேலும் 9 மில்லியன் பயணிகளைக் கையாள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கட்டுநாயக்க விமான நிலையத்தில் ஆண்டுக்கு 15 மில்லியன் பயண்கிளைக் கையாளுவதற்கு இந்த புதிய முனையம் உதவியாக இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், புதிய முனையத்தின் கட்டுமானத் திட்டத்தின் முக்கிய பங்குதாரர்களுக்குத் திட்டம் குறித்து தெளிவுபடுத்தும் நிகழ்வு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ரி3)





## ஹெரோய்ன் மீட்பு ஒருவர் கைது

கொழும்பு, ஓக 2
வெல்லம்பிட்டி பகுதியில் அமைந்துள்ள வீடொன்றிலிருந்து 23 கிலோகிராம் ஹெரோய்ன் விசேட அதிரடிப்படையினரால் மீட்கப்பட்டுள்ளதுடன், ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போதே ஹெரோய்ன் மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி1)

## சிறுவன் துஷ்பிரயோகம்; பெண் விளக்கமறியலில்!

கொழும்பு, ஓகஸ்ட் 2
சிறுவனைப் பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்திய பெண் ஒருவரை, விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்தச் சம்பவம் மெதிரிகிரிய பகுதியில் இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது;

முகநூல் வழியாக 15 வயது சிறுவனும், 29 வயது பெண்ணும் அறிமுகமாகியிருந்தனர். அந்தப் பெண் திருமணமாகியிருந்த போதும், குழந்தைகள் இருக்கவில்லை. முகநூல் பழக்கம் வலுவடைந்ததும், பாடசாலைக்கு என்று செல்லும் சிறுவன், பல சந்தர்ப்பங்களில் அந்தப் பெண்ணுடன் சென்று விடுவதை வாடிக்கையாக கொண்டிருந்தான். கடந்த 3 மாதங்களாக இந்த தொடர்பு நீடித்தது.

மாணவனின் வரவு ஒழுங்கில்லாமலிருந்த விடயம் பெற்றோருக்குத் தெரியவந்த பின்னர், மாணவனை அவதானித்த போது, அந்த பெண்ணுடனான அவரது தொடர்பு தெரியவந்தது.

மாணவனை வீட்டுக்கு அழைத்துச் சென்று, பாலியல் அத்துமீறலில் அந்தப் பெண் ஈடுபட்டிருந்தமை தெரியவந்ததும், மெதிரிகிரிய பொலிஸாரிடம் முறையிட்டனர். பொலிஸார் அந்தப் பெண்ணை கைது செய்து, நீதிமன்றத்தில் முற்படுத்தியபோது, எதிர்வரும் 11 ஆம் திகதி வரை அவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. (ரி2)

# கொரோனா ஆபத்து குறையவில்லை

*எச்சரிக்கின்றது சுகாதாரப் பிரிவு*

கொழும்பு, ஓக 2
இலங்கையில் கொரோனா ஆபத்துக்கள் இன்னமும் குறையவில்லை என சுகாதாரப் பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது.

கொரோனா நோயாளர்களை அடையாளம் காண்பதற்கான பி.சி.ஆர் பரிசோதனைக்காக இதுவரையில் 1.3 பில்லியன் ரூபாய் பணம் செலவிடப்பட்டுள்ளது என்று சுகாதார பணிப்பாளர்



அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார். அத்துடன் நாட்டில் கொரோனா வைரஸ் பரவும் ஆபத்து இதுவரையில் குறையவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் நாடு முழுவதும் பரவலாக தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி1)

# 44 நாள்களில் நாடு முழுவதும் ஒரு இலட்சத்து 3,698 பேர் கைது

## பொலிஸ் தலைமையகம் அறிவிப்பு

கொழும்பு, ஓக.2

**நாடளாவிய ரீதியில் கடந்த 44 நாள்களாக மேற்கொள்ளப்பட்டு வந்த விசேட சுற்றிவளைப்பின்போது பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பில் ஒரு இலட்சத்து 3698 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.**

திட்டமிட்ட குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் பொலிஸார் , பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மற்றும் குற்றப் புலனாய்வு பிரிவினர் நாடுமுழுவதிலும் விசேட சுற்றிவளைப்பில் ஈடுபட்டுவருகின்றனர். இதற்கமைய கடந்த மாதம் 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை ஆறு மணிமுதல் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை காலை ஆறு மணிவரை முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்புக்களின் போது, சட்டவிரோத ஆயுதங்கள், போதைப் பொருள்கள், சட்டவிரோத மதுபானம் வைத்திருந்தமை பிடியாணை உத்தரவு வழங்கப்பட்டிருந்தவர்கள் மற்றும் பல்வேறு குற்றச் செயல்களில் தொடர்புடையோர் என்று கூறப்படும் நபர்களே இவ்வாறு சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.




இதன்போது போதைப் பொருள் வைத்திருந்தமை தொடர்பில் கைதுசெய்யப்பட்ட 24 ஆயிரத்து 412 சந்தேக நபர்களுள் 13 ஆயிரத்து 346 சந்தேகநபர்கள் ஹெரோய்ன் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து 17 கிலோ 42 கிராம் 737 மில்லி கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது.கஞ்சா போதைப் பொருளுடன் 9333 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து 787 கிலோ 773 கிராம் 385 மில்லி கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

இதேவேளை ஐஸ் போதைப் பொருளுடனும் 733 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து ஒரு கிலோ 456 கிராம் 534 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது.

சட்டவிரோத மதுபானம் தொடர்பில் இடம்பெற்ற சுற்றிவளைப்புகளில் 21ஆயிரத்து 397 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து 5 இலட்சத்து 36 ஆயிரத்து 709 லீற்றர் மதுபானம் கைப்பற்றப்பட்டுள்ளது. இதேவேளை சட்டவிரோதமான முறையில் ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகளை வைத்திருந்தமை தொடர்பில் 255 பேர் கைது செய்யப்பட்டனர். ஆயுதங்கள் வைத்திருந்தனர் என்று 235 பேரும் , வெடிமருந்துகளை வைத்திருந்தனர் என்று 20 பேரும் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். இதன்போது 30 குழல் 12 ரக துப்பாக்கிகளும், 33 உள்நாட்டு துப்பாக்கிகளும், 125 ரிபிடர் ரக துப்பாக்கிகளும், 2 வேறுவகை துப்பாக்கிகளும், 8 கைத்துப்பாக்கிகளும், 14 ரி 56 ரக துப்பாக்கிகளும், ரி 81 ரக துப்பாக்கி ஒன்றும், ரிவோல்வர் ரக துப்பாக்கிகள் இரண்டும், 1808 தன்னியக்க தோட்டாக்கள் மற்றும் 12 வாள்களும் , 9 கத்திகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை 367 கிராம் தொகை வெடி மருந்து, 28 டெட்டனேட்டர்கள் மற்றும் 36 கைக்குண்டுகளும் மீட்கப்பட்டுள்ளன.

இதேவேளை பிடியாணை பிறப்பிக் கப்பட்டிருந்த 20,384 சந்தேக நபர்களும், வேறுவகையான குற்றச்செயல்களைப் புரிந்த 38250 பேரும் இதன்போது கைது செய்யப்பட்டுள்ளனர். (ரி1)

# வெங்காயச் செய்கை மழையால் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஓக.2

யாழ் குடாநாட்டில் நேற்றுமுன்தினம் அதிகாலை பெய்த கனத்த மழையினால் வெங்காயச் செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதுடன், தாழ்ந்த விவசாய நிலங்களில் வெள்ளமும் ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக வலிகாமம் கிழக்கு பகுதியில் அநேகமான இடங்களில் வெங்காயப் பயிர்கள் கடுமையான மழையால் பாதிக்கப்பட்டுள்ளன.

சில இடங்களில் அறுவடை செய்யப்பட்டு வெயிலில் காய வைக்கப்பட்ட வெங்காயப் பயிர்கள் மழையில் நனைந்து பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் வெங்காயச் செய்கையாளர்கள் நஷ்டமடைந்துள்ளனர். இதேவேளை, காலநிலை வேறுபாட்டினால் சின்ன வெங்காயத்தின் விலை மேலும் அதிகரிக்கலாம் என்று வெங்காயச் செய்கையாளர்கள் தெரிவித்துள்ளனர். (ரி3)







கிளிநொச்சி பெரியகுளம் பகுதி பல வருடகாலமாக புனரமைப்பு செய்யப்படாமையால் குளத்தின் உட்பகுதிகள் மற்றும் அணைக்கட்டு பகுதி என்பவற்றில் பற்றைகள் வளர்ந்துள்ளன. அங்கு பல குற்றச்செயல்கள் நடந்து வருகின்றன எனவும் இரவு வேளைகளில் அப் பகுதியூடாக செல்லும் மக்கள் அச்சத்துடன் செல்லவேண்டி நிலை ஏற்பட்டுள்ளதாகவும் விசனம் தெரிவித்துள்ளனர். மேலும் மழைகாலங்களில் மழைநீர் குடியிருப்பு பகுதிகளில் உட்புகுவதாகவும் மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தமக்கு விரைவில் தீர்வைப் பெற்றுத்தரவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ரி3-113)

# இன்றைய நாள்

**மேடம்:** உங்களின் நல்ல செயலை சிலர் கேலி பேசுவர். நம்பிக்கையுடன் செயல்படுவது அவசியமாகும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற புதிய யுக்தியை கையாள்வீர்கள். சீரான அளவில் பணவரவு கிடைக்கும்.

**இடபம்:** எதிரான சூழ்நிலை நிலவினாலும் மனசாட்சியுடன் நடந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வருகிற குளறுபடியை மாற்று உபாயத்தால் சரிசெய்வது நல்லது.

**மிதுனம்:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பணிகளில் நம்பிக்கையுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி திட்டமிட்ட இலக்கை எட்டும்.

**கடகம்:** பேச்சு, செயலில் தயக்கம் ஏற்படலாம். தொழிலில் உற்பத்தி, விற்பனை சீரான அளவில் இருக்கும். அதிக நிபந்தனையுடன் கடன் பெற வேண்டாம். விஷப்பிராணிகளிடம் இருந்து விலகுவது நல்லது.

**சிம்மம்:** மதிநுட்பத்துடன் செயல்படுவீர்கள். முயற்சிகளுக்கான பலன் திருப்திகரமாக கிடைக்கும். தொழில், வியாபாரம் செழிக்கும். சமூகத்தில் தனி அந்தஸ்தை பெறுவீர்கள். பணம் கொடுக்கல், வாங்கல் சீராகும்.

**கன்னி:** சொந்த விஷயங்களை பற்றி பிறரிடம் சொல்ல வேண்டாம். தெய்வ அனுகூலத்தால் நினைத்த செயல் அனைத்தும் நிறைவேறும். சிக்கனமாகச் செலவு செய்வீர்கள்.

**துலாம்:** சிலருக்கு சரியான நேரத்தில் உதவிசெய்வீர்கள். தொழில், வியாபாரம் செழிக்க தேவையான மாற்றத்தை செய்வது நல்லது. பணவரவுடன் நன்மையும் அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** செயல்கள் அனைத்திலும் நேர்த்தி காணப்படும். குடும்பத்தினரால் பாராட்டும் பெறுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியில் முன்னேற்றகரமான பலன் உண்டு.

**தனுசு:** வெளிவட்டார தொடர்பு தொந்தரவு தரலாம். எந்தச் செயலிலும் பொறுமை அவசியம். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் பயனளிக்கும். பணவரவை விட செலவு அதிகரிக்கும்.

**மகரம்:** மாற்று கருத்து உடையவரிடம் விலகுவது நல்லது. தொழில், வியாபாரம் செழிக்க கிடைக்கும் வாய்ப்பை சரியாக பயன்படுத்துவீர்கள். சிக்கனம் சிரமத்தை தவிர்க்க உதவும்.

**கும்பம்:** செயல்களில் இரக்க குணம் வெளிப்படும். பிறருக்கு உதவுவதை விருப்பமாக கொள்வீர்கள். உபரி வருமானம் கிடைக்கும்.

**மீனம்:** புதியவர்களின் நட்பு கிடைக்கும். தாமதமான பணிகளை ஆர்வமுடன் நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப் பணி திட்டமிட்டபடி நிறைவேறும்.

## ஹஜ் பெருநாள் தொழுகைகள்

யாழ்ப்பாணம் ஐந்து சந்தியில் அமைந்துள்ள செவல முகைதீன் பள்ளிவாசலில் புனித ஹஜ் பெருநாள் துவாதொழுகைகள் செவல முகதீன் பள்ளிவாசலின் வழிபாட்டு ஒருங்கிணைப்பாளர் ஆர்.எச்.ஜபீர் மௌலவி தலைமையில் நேற்று முன்தினம்சிறப்பாக இடம்பெற்றன. (ரி3-20)



மன்னார் மூர்வீதி ஜும்மா பள்ளிவாசலில் மௌலவி எம்.அசீம் தலைமையில் புனித ஹஜ் பெருநாள் விசேட தொழுகைகள் மௌவி எம். அசீம் தலைமையில் நேற்றைய தினம் இடம் பெற்றது. பெண்களுக்கான சிறப்புத் தொழுகை காலை 7 மணிக்கும் ஆண்களுக்கான தொழுகை காலை 7.45 மணிக்கும் நடைபெற் றன. (ரி3-56)



மட்டக்களப்பு வாழைச்சேனை ஹைராத் பள்ளிவாசலில் பெருநாள் தொழுகையும் பெருநாள் கொத்பா பேருரையும் கிழக்கு பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்ஷெய்க் எம்.ரீ.எம்.ரிஸ்வி தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றன. (ரி3-150)



வவுனியா தௌஹீத் ஜமாத் அமைப்பினால் ஏற்பாடுசெய்யப்பட்ட ஹஜ் பெருநாள் தொழுகை நிகழ்வு பட்டானிச்சூர் குடாவயல் திடலில் மௌலவி ஏ. தஸ்னீம் (தைமீ) தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. (ரி3-110)

# கொரோனாவின் தாக்கம் பல தசாப்தங்கள் நீடிக்கும்

## உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை

**ஜெனிவா, ஓக 2**
**உலகில் கொரோனா வைரஸின் தாக்கமானது, பல தசாப்தங்களுக்கு நீடிக்கும் என உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.**

உலக சுகாதார அமைப்பின் அவசரநிலை குழு, கொவிட்19 தொடர்பாக கடந்த ஆறு மாதங்களாக மேற்கொண்ட மதிப்பாய்வு அறிக்கையை வெளியிட்டு இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

உலக சுகாதார அமைப்பின் உறுப்பினர்கள் 18 பேரையும், ஆலோசகர்கள் 12 பேரையும் உள்ளடக்கிய அவசரநிலை குழு, கொரோனா வைரஸ் தாக்கம் ஆரம்பமானதன் பின்னர், நான்காவது தடவையாக நேற்றுமுன்தினம் ஜெனிவாவில் கூடியது.

நூற்றாண்டுக்கு ஒருமுறை சுகாதார நெருக்கடி ஏற்படும் நிலையில், கொவிட்19 தொற்றின் தாக்கமானது அடுத்துவரும் பல தசாப்தங்களுக்கு உலகில் நீடிக்கும் என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. (ரி1)

# மற்றொரு துறைமுக நகருக்கான உருவாக்கத் திட்டங்கள் ஆரம்பம்

கொழும்பு, ஓக 2

கொழும்பில் நிர்மாணிக்கப்பட்டு வரும் துறைமுக நகருக்கு அருகில் மீண்டும் கடலை நிரப்பி மேலும் ஒரு நகரத்தை உருவாக்குவதற்கான திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் பிரியத் பந்துவிக்ரம தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கொழும்பு துறைமுக நகருக்கு அருகில் கடலை நிரப்பி மற்றுமொரு நகரத்தை நிர்மாணிக்கும் திட்டத்தை நாங்கள் ஆரம்பித்துள்ளோம். உண்மையில் இந்த திட்டமானது 2013 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் திட்டம்.

கடந்த 5 ஆண்டுகளாக இதனைச் செய்ய முடியாமல் போனது. இதனால், நாங்கள் இந்தத் திட்டத்தை துரிதமாக ஆரம்பித்துள்ளோம். துறைமுக நகருடன் மற்றுமொரு நிலப்பரப்பை இணைத்து, இந்த புதிய நகரம் உருவாக்கப்படும். அதனைச் சுற்றி பேர வாவியை அண்மித்த பகுதியையும் அபிவிருத்தி செய்ய உள்ளோம் எனவும் பிரியத் பந்து விக்ரம தெரிவித்துள்ளார். (ரி1)

சாவகச்சேரியில்

# உரிமைகோராத சடலம்; அரச செலவில் அடக்கம்

சாவகச்சேரி, ஓக.2

**ரயிலில் மோதுண்டு இறந்தவரின் சடலம் நேற்று சனிக்கிழமை சாவகச்சேரி கண்ணடிப்பிட்டி இந்து மயானத்தில் அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டது.**

கடந்த மாதம் 15 ஆம் திகதி சாவகச்சேரி ரயில் நிலையம் அருகில் யாழிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த ரயிலில் மோதி கனேமுல்லவைச் சேர்ந்த நபர் ஒருவர் உயிரிழந்தார். அவரது சடலம் சாவகச்சேரி பொலிஸாரால் சாவகச்சேரி மருத்துவமனை சவச்சாலையில் வைக்கப்பட்டிருந்தது. இவரது மரணம் தொடர்பாக பொலிஸார் தமிழ், சிங்களப் பத்திரிகைகளில் பிரசுரித்து அடையாளம் காண உதவுமாறு அறிவித்தீருந்தனர். நேற்றுவரை 17 தினங்கள் ஆகியும் சடலம் உரிமை கோரப்படவோ, அடையாளம் காட்டப்படவோ இல்லை. எனவே சடலம் அரச செலவில் அடக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்நிலையில் நீதிவானின் உத்தரவின் பிரகாரம் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி சீ.சீ.இளங்கீரனால் விசாரணைகள். மேற்கொள்ளப்பட்டு, அவரின் பணிப்பின் பேரில் சட்ட மருத்துவ அதிகாரி மருத்துவர் வாசுதேவ உடற்கூற்றுப் பரிசோதனைகளை மேற்கொண்டார். இதன் பின்னர் பிரிவு கிராம அலுவலரால் சடலத்தைப் பொறுப்பெடுக்கப்பட்டு அரச செலவில் சாவகச்சேரி இந்து மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டது. (ரி3-9)

# வீரபுரம் இளவேனில் குடியிருப்புக்கு குடிதண்ணீர்

வவுனியா,ஓக.2

செட்டிகுளம் வீரபுரம் இளவேனில் வீட்டுத்திட்டப்பகுதி மக்களால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக, தமிழ் விருட்சம் அமைப்பின் 18 ஆவது குடி தண்ணீர்த்திட்டம் செட்டிகுளம் பிரதேச செயலாளர் கை.சிவகரனால் திட்டம் கையளிக்கப்பட்டது. புலம் பெயர்ந்த தாயக உறவான லண்டன் வாழ் சமூகத் தொண்டர் பாலரஞ்சன் குடும்பத்தினரின் நிதியுதவி யில் குடி தண்ணீர் திட்டம் அமைக்கப்பட்டது.

நிகழ்வில் தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர், கிராம அலுவலர், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (க)



# மோட்டார் சைக்கிள் இறக்குமதி தடையை மீள்பரிசீலனை செய்க

## இருசக்கர வாகன விற்பனையாளர் முகவர் சங்கம் வேண்டுகோள்

கொழும்பு, ஓக 2

மோட்டார் சைக்கிள் இறக்குமதி செய்வதில் உள்ள தடையை அரசாங்கம் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என இருசக்கர வாகன விற்பனையாளர் முகவர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அகில இலங்கை புதிய இருசக்கர வாகனங்களின் விற்பனை முகவர் சங்க கிழக்கு மாகாண பிரதிநிதி ஜயாசாமி ராமலிங்கம் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, நாட்டில் கொரோனாத் தொற்று காரணமாக இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கான கட்டுப்பாட்டை அரசாங்கம் விதித்துள்ளது. இதில் டொலர் பெறுமதியில் ஏற்பட்டுள்ள தளம்பலை நிலையானதாகப் பேணுவதற்காக அரசாங்கம் இருசக்கர வாகனங்களின் இறக்குமதியில் கட்டுப்பாடு விதித்துள்ளது. இதன் காரணமாக இறக்குமதி செய்யப்படும் இருசக்கர வாகனங்களை நம்பி தொழில் செய்யும் வாகன முகவர்கள், எம்மிடம் தொழில்புரியும் தொழிலாளர்கள், திருத்த வேலைசெய்யும் தொழிலாளர்கள் உள்ளிட்ட அனைவரும் நேரடியாகவும், மறைமுகமாவும் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் ஜனாதிபதியினால் வழங்கப்பட்ட 4 சதவீத கடன் தொகையைப் பெற்றே இத்தொழிலை நாங்கள் செய்து வருகின்றோம். இத்தடை காரணமாக இக்கடன் தவணைக் கட்டணங்களையும் செலுத்த முடியாமற் போயுள்ளது. எனவே ஜனாதிபதி இவ்விடயத்தில் கவனஞ் செலுத்தி இருசக்கர வாகன இறக்குமதியில் ஏற்படுத்தியுள்ள தடையை மறுபரிசீலனை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம் எனத் தெரிவித்தார். (ரி1)

# இனவாதத்தை வெளிப்படுத்தும் நாட்டின் பௌத்த பீடங்கள்

## குமுறுகின்றார் யோகேஸ்வரன்



**கொழும்பு, ஓக. 2**

**மத பீடங்கள் நல்ல போதனையை மக்களுக்கு வழங்கவேண்டும். ஆனால் நாட்டில் இருக்கின்ற சில பௌத்த பீடங்கள் இனவாதத்தையே வெளிப்படுத்துகின்றன என்று மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் வேட்பாளருமான சீ.யோகேஸ்வரன் தெரிவித்தார்.**

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை, மகிழடித்தீவில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

'மிகவும் இனவாதம் கொண்ட ஜனாதிபதி தமிழ் மக்களின் எதிர்ப்புக்கு மத்தியிலும் உருவாக்கப்பட்டுள்ளார். தமிழர்களுக்கு எதிரான பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

2015 ஆம் ஆண்டுக்கு பின்னர் அரசாங்கத்துக்கு சில ஆதரவுகளை வழங்கியதன் காரணமாக முன்னெடுக்கப்பட்டுவந்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு செயற்பாடு புதிய ஜனாதிபதியின் வரவின் பின்னர் தடைசெய்யப்பட்டுள்ளது. தேசிய கீதமும் தமிழில் பாடும் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு தனிச்சிங்களத்தில் பாடுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுள்ளன.




மத பீடங்கள் நல்ல போதனையை மக்களுக்கு வழங்கவேண்டும். ஆனால் இந்த நாட்டில் இருக்கின்ற சில பௌத்த பீடங்கள் இனவாதத்தையே வெளிப்படுத்துகின்றன.

இவ்வாறானவர்கள் புதிய ஜனாதிபதிக்கு ஆலோசனைகளை வழங்கிக்கொண்டு தமிழ் மக்களுக்கான எந்த உரிமையையும் வழங்காத வகையில் இந்த பீடங்கள் செயற்படுகின்றன.

பௌத்த பீடத்தின் ஏற்பாட்டில் இராணுவத்தையும் இணைத்துக்கொண்டதாக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ, கிழக்கு தொல்பொருள் செயலணியை உருவாக்கி அதன் மூலம் மட்டக்களப்பு மாவட்டத்தில் 56 இடங்களை பிரகடனப்படுத்தி அந்த இடங்களில் பௌத்த விகாரைகளை நிர்மாணிப்பதற்கும் அதன் மூலம் சிங்கள குடியேற்றங்களை ஏற்படுத்துவதற்கும் நடவடிக்கையெடுத்துவருகின்றார்.

இவ்வாறு தமிழ் மக்களுக்கு எதிரான மிகப்பெரும் திட்டங்களை முன்னெடுப்பதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை தங்களது சிங்கள சமூகத்தில் கோரிவருகின்றார்.

நாடு பிளவுபடப்போகின்றது அதனைப் பாதுகாக்க எங்களுக்கு வாக்களியுங்கள் என்றே மொட்டுக்கட்சி சிங்கள மக்கள் மத்தியில் பரப்புரைகளை முன்னெடுத்து வருகின்றது.

நாங்கள் நாடு பிளவுபடுத்துமாறு கூறவில்லை. ஒன்றுபட்ட நாட்டுக்குள்ளேயே தீர்வைக் கோரிவருகின்றோம்.

அனைத்து சிங்கள தலைவர்களிடமும் இதனை நாங்கள் வலியுறுத்தியுள்ளோம்.

ஆனால் அவர்கள் தமிழ் மக்களுக்கு எதுவும் வழங்கிவிடக்கூடாது என்பதிலும் சிங்கள மக்களை தமிழ் மக்களுக்கு எதிராக திரட்ட தமது சுயநலத்தைப் பேணுவதற்காக சிங்கள பகுதிகளில் மொட்டுக்கட்சி தீவிரமான பிரசாரங்களை தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொண்டு வருகின்றது.

இந்த இடத்தில் தமிழ் மக்கள் ஒன்றுபட்டு செயற்படக்கூடிய காலம் ஏற்பட்டுள்ளது. தமிழ் தேசியக் கூட்டமைப்பு பலமடைந்து நாடாளுமன்றத்தில் குரல்கொடுக்க கூடாது என்பதற்காக ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஸ பல கட்சிகளை பலகோடி நிதிகளை வழங்கி களமிறக்கியுள்ளார். அதில் முதலாவது மொட்டுக்கட்சி.

அந்தக் கட்சியில் ஏனைய சமூகத்தைச் சேர்ந்தவர்களும் இணைந்திருந்தனர். தற்போது வியாழேந்திரன் மூலமாக அதனை தனி தமிழ் கட்சியாக காட்டி அதன் மூலம் தமிழ் மக்களின் வாக்குகளைப் பிரிப்பதற்கான நடவடிக்கையை முன்னெடுத்துள்ளார் - என்றார்.

(ஐ)

---

# ஆட்சியில் மாற்றம் ஏற்பட ஐ.ம.சவுக்கு வாக்களியுங்கள்

## அரவிந்தகுமார் அறைகூவல்

கொழும்பு, ஓக. 2

ஆட்சிமாற்றத்தின் ஊடாகவே மலையகத்தில் சுபீட்சம் ஏற்படும். எனவே, ஐக்கிய மக்கள் சக்திக்கு பேராதரவை வழங்கி அந்த மாற்றத்தை ஏற்படுத்துமாறு மலையக மக்கள் முன்னணியின் அரசியல் பிரிவு தலைவரும், பதுளை மாவட்ட வேட்பாளருமான அ.அரவிந்தகுமார் அறைகூவல் விடுத்துள்ளார்.

பதுளை, லுணுகலை ஹொப்டன் பகுதியில் நேற்று நடைபெற்ற தேர்தல்பரப்புரைக்கூட்டத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

கடும் குளிர், மழை என்பவற்றைக்கூட பொருட்படுத்தாமல் எமக்காக மக்கள் அணிதிரளுகின்றனர். இது அன்பால் சேர்ந்த கூட்டம், ஆதரவாளர்களின் ஒருமித்தக் குரலோடு சங்கமித்த கூட்டம். இவ்வாறான ஆதரவும், ஒற்றுமையுமே மலையகத்துக்கு தேவைப்படுகின்றது. நாம் வெவ்வேறான தொழிற்சங்கங்களில் அங்கம் வகித்தாலும் சமூகம் என வரும்போது இணைந்து பயணித்தால் தான் இலக்கை நோக்கி பயணிக்கக்கூடியதாக இருக்கும். பரப்புரை நடவடிகைகளுக்காக தோட்டங்களுக்கு செல்லும் போது ஆயிரம் ரூபா தொடர்பில் மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். இந்த ஆட்சி நீடிக்கும் வரை ஆயிரம் ரூபா கிடைக்கப்போவதில்லை என்பதுதான் எனது பதிலாக இருக்கின்றது. எனவே, கிடைக்காத ஒன்றை கிடைக்கும் எனக் கூறி மக்கள் மத்தியில் ஏமாற்றுகாரனாக வலம் வருவதற்கு நான் தயாரில்லலை.

உண்மையை பேசினால் சிலர் அபசகுனம் என விமர்சிக்கின்றனர் ஆயிரம் ரூபா கிடைக்க வேண்டும் என்றால் இந்த ஆட்சி மாற வேண்டும். அதன் ஊடாகவே மலையகத்தில் சுபீட்சம் ஏற்படும்- என்றார்.

(ஐ)

---

# மூச்சு உள்ளவரை மாணவர்களின் கல்வியை உயர்த்த பாடுபடுவேன்

## கூறுகின்றார் சாணக்கியன்

மட்டக்களப்பு, ஓக. 2

என் மூச்சு உள்ளவரை மாணவர்களின் கல்வி தரத்தை உயர்த்த பாடுபடுவேன் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு - தாண்டியடி பகுதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

'நான் எனது சுயநலம் சார்ந்து சிந்திப்பவன் இல்லை. கடந்த காலங்களில் நான் பல்வேறு அபிவிருத்தி பணிகளை மட்டக்களப்பு மாவட்டம் முழுவதும் செய்துள்ளேன்.

குறிப்பாக எமது எதிர்கால சந்ததியினரான மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு பல்வேறு வகையான உதவித் திட்டங்களை வழங்கியுள்ளேன்.

ஒரு காலத்தில் கற்றல் செயற்பாடுகளில் முன்னிலையில் இருந்த நமது மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளும் இன்று வீழ்ச்சிப் பாதை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கின்றன.

உங்களுக்கு தெரியும், தமிழர்களின் இருப்பை கேள்விக்குறியாக்கும் செயற்பாடுகளை தற்போதைய அரசாங்கம் மிகவும் நுட்பமான முறையில் முன்னெடுத்து வருகின்றது. இன்று கிழக்கு மாகாணத்தில், சில விடயங்களைக் கவனமாகச் சிந்திக்க வேண்டும். திருகோணமலை, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் நாடாளுமன்ற சிங்கள பிரதிநிதித்துவம் இருக்கின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டுமே, நாடாளுமன்ற சிங்கள பிரதிநிதித்துவம் இல்லை. இது தென் மாகாணத்தில் இருப்பவர்களுக்குப் பெரிய தாக்கமாகும் - என்றார்.

(ஐ)

---

# பொருளாதார வீழ்ச்சியை மறைக்கவே சஜித் அணியை விமர்சிக்கின்றது அரசு

## ஹர்ஷ டி சில்வா குற்றச்சாட்டு



கொழும்பு, ஓக. 2

வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கு அரசாங்கத்திடம் முறையான திட்டம் இல்லாத போது அதனை மறைப்பதற்காக, தமது வேலைத்திட்டங்கள் மீது விமர்சனங்களை மேற்கொண்டு வருவதாக குற்றஞ்சாட்டிய ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் ஹர்ஷ டி சில்வா, இது போன்ற செயற்பாடுகளை நிறுத்திவிட்டு வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கான திட்டத்தை முன்வைக்குமாறும் வலியுறுத்தினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

நாட்டின் பொருளாதாரம் பெருமளவில் வீழ்ச்சியடைந்துள்ளது. இதனை முன்னேற்றுவதற்கு நாங்கள் ஒரு திட்டத்தை முன்வைத்தாலும் அதனை விமர்சித்து வருகின்றார்கள். அப்படி என்றால் அவர்களது திட்டத்தை நாட்டுக்கு தெரியப்படுத்த வேண்டும். 2019 ஆம் ஆண்டு முதல் நான்கு மாதங்களில் மாத்திரம் வரி அறவீட்டின் மூலம் 575 பில்லியன் ரூபா வருமானம் கிடைக்கப் பெற்றது. ஆனால் இவ்வருடத்தின் ஆரம்ப ஏழு மாதங்களில் வரி அறவீட்டின் மூலம் 408 பில்லியன் ரூபா வருமானமே கிடைக்கப் பெற்றுள்ளது. அதற்கமைய அரசாங்கத்தின் முறையற்ற வரிச் சலுகையால் இதுவரையில் மாத்திரம் 150 பில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் அமைச்சர் பந்துல குணவர்தன அவருடன் விவாதத்தில் ஈடுப்படுமாறு எனக்கு அழைப்பு விடுத்துள்ளார். அவருடன் விவாதத்தில் ஈடுபடுவதற்கு எப்போது என்றாலும் நான் தயாராகவே இருக்கின்றேன். அதனால் ஊடகச்சந்திப்புகளை ஏற்படுத்தி விவாதத்தில் ஈடுபடுவதற்கு அழைப்பு விடுக்காது, பொருளாதாரம் எவ்வளவு வீழ்ச்சியடைந்துள்ளது என்பதை நாட்டு மக்களுக்குத் தெரியப்படுத்துங்கள்- என்றார்.

(ஐ)

## மீளப்பெற முடியாத அடுத்த ஐந்து வருடங்களுக்கான தெரிவு உங்கள் கைகளில். சிந்தித்து வாக்களியுங்கள்!

# "வரப்புயர"

### எனது செயல்திட்டம்

### சிறந்ததோர் சமுதாயம்

எதிர்கால உலகின் வளர்ச்சிக்கு ஈடுகொடுக்கும் கல்வி, தொழில் வாய்ப்புகள், மற்றும் தற்கால நவீன உலகிற்கு ஏற்ப இயங்கும் தகுதிகளால் மேலோங்கிய சமூகத்தை உருவாக்குதல்.

### அடிப்படைத் தேவைகளில் தன்னிறைவு

ஒவ்வொரு பிரஜைக்குமான உணவு, உடை, கழிவறை வசதியுடன் கூடிய வீடு மற்றும் முறையான சுகாதார நலன்களை கொண்ட வாழ்க்கைச் சூழலை அமைத்தல்.

### கல்வி வாய்ப்புகள்

யாழ்ப்பாணத்தின் தனித்துவம் நிறைந்த கல்வித் தகைமைகளைக் கொண்ட தகுதிவாய்ந்த தலைமைத்துவங்களை மீளக் கட்டி எழுப்பிட, தூரநோக்குடன் கூடிய மூலதனங்களையும் மற்றும் உயர்பட்டப்படிப்புகளையும் சமத்துவமாக பயணிக்கக்கூடிய தொழில்சார் தேர்ச்சிகளையும் வழங்குதல்.

### தொழில் வாய்ப்புகள்

பாரம்பரியம் சார்ந்த தொழில்முயற்சிகளுக்கான சந்தை வாய்ப்புகள் மற்றும் புதிய தொழில் முயற்சியாளர்களுக்கான வலுவூட்டல் என்பவற்றை வழங்கி உழைக்கும் சமுதாயத்தினை ஆதரித்தல்.

### இளைஞர் மற்றும் பெண்கள் சக்தி

இளைஞர்களுடைய திறமைக்கேற்ற வேலைவாய்ப்புகள் மற்றும் பெண் தலைமைத்துவ குடும்பங்களின் தேவைகளை முன்னிறுத்திய சேவைகளூடாக வலுவான எதிர்காலத்தை உருவாக்கல்.

### முன்பள்ளி ஆசிரியர்களின் வாழ்க்கைத் தரம்

தாயின் அரவணைப்பிலிருந்து ஆசானின் நிழலுக்கு போகும் குழந்தைகளே எமது தேசத்தின் எதிர்காலம். அப்படியான எதிர்காலத்தை முழு அர்ப்பணிப்புடன் சுமக்கும் முன்பள்ளி ஆசிரியர்களின் வாழ்க்கையை முன்னேற்றுவதுடன் முறையான சூழலையும் பயிற்சிகளையும் வழங்கி உடல் உள ஆரோக்கியம் மிக்க சமுதாயத்தை உருவாக்க துணைபுரிதல்.

### கௌரவமான முதியோர் சமுதாயம்

ஆதரவற்ற நிலையில் இருக்கக்கூடிய முதியோருக்கு கௌரவமிக்க வாழ்க்கைக்கான திட்டங்கள் மற்றும் உழைக்கும் முதியோருக்கான அபிலாஷைகளை சாத்தியப்படுத்தல்.

### வணிக முன்னேற்றம்

விவசாயம், கைத்தொழில் மற்றும் தொழிநுட்பம் ஆகிய துறைகளில் சிறந்த சந்தைப்படுத்தலுக்கான தொடர்பாடலை உள்ளூரிலேயே ஏற்படுத்தல், மற்றும் வணிகர்களின் வாழ்வாதாரம் சிறக்கும் படியான வாய்ப்புகளை உருவமைத்தல்.






### தேர்தலின் தேர்வு பவதாரணியாக இருக்கட்டும்.

எனது கொழும்பு நண்பன் ஜெரோமின் அறிமுகத்தான் பவதாரணி ராஜசிங்கம். இரண்டுமணி நேரங்களுக்கு மேல் நீடித்த ஓர் தொலைபேசி உரையாடல் பல ஆண்டுகள் பழகிய நட்பை கொடுத்தது.

சமூகம், கலை, அரசியல் என எல்லா தளங்களிலும் எங்கள் பேச்சுக்கள் பயணித்தன. தன் சமூகம் [illegible] தளர்ந்து போயுள்ளமை பற்றி மனம் குமுறினார். இலங்கைத் தமிழ்க் கலைக்கு தான் தயாரித்த "கோமாளி கிங்ஸ்" திரைப்படம் மட்டும் போதாது இளைஞர் [illegible] ஓர் துறையா இது மாற்றி அமைக்கப்பட வேண்டும் எனப் பேசினார். அத்துடன் இலங்கை அரசியல் அதில் தனது வருகை ஏன் என தெளிவு படுத்தினார். ஒரு சகோதரியாக, ஓர் குடும்பத் தலைவியாக, தமிழ்க் கலைஞியாக தமிழர்களுக்குத் தேவையான எதிர்காலம் பற்றி பேசினார். உசுப்பு அரசியல் கலைந்து உணர்வுபூர்வ அரசியல் பேசினார். புலம்பெயர் தமிழர்களோடு உறவுகளை ஏற்படுத்துவது என ஏராளமான விடயங்களை தெளிவாகப் பேசினார்.

இலங்கையின் பொருளாதார பொற்கால ஆட்சி கொடுத்த சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி (SLFP) கட்சியில் வட மாகாணத்தை பிரதிநிதுவப்படுத்தி தேர்தல் களமாடுகிறார். [illegible] காலம் எத்தனையோ தமிழ்க் கட்சிகளைப் பலதடவை பாராளுமன்றம் அனுப்பிய உங்களுக்கு கிடைத்த பெறுபேறுகளை மனதில் கொண்டு இம்முறை பவதாரணியை தெரிவு செய்யுங்கள். [illegible]

நாம் வெற்றி பெறுவதற்கும் [illegible] பவதாரணி ராஜசிங்கத்தை வெற்றிபெற வைப்போம். [illegible]

நட்புடன்,
[illegible]

# தென்னிலங்கை சக்திகளுக்கு வாக்களித்தால் தமிழ் மக்களுக்கு எதிரான அடாவடி நீடிக்கும்

## அனைவருமே 'வீடு' சின்னத்துக்கே வாக்களியுங்கள்

## யாழ்.வணிகர் கழக முன்னாள் தலைவர் ஜெயசேகரன் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஓக. 2

**தமிழ் மக்களே! நாங்கள் தென்னிலங்கைச் சக்திகளுக்கு அளிக்கும் ஒவ்வொரு வாக்கும் தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை நாங்களே அங்கீகரிப்பதாகவே முடிந்துவிடும். அதற்கு இடங்கொடாமல், தமிழர்களின் ஏகோபித்த சக்தியாகச் செயற்பட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையே தெரிவுசெய்வோம்.**



இவ்வாறு வலியுறுத்தியுள்ளார், யாழ்ப்பாண வணிகர் கழக முன்னாள் தலைவரும் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான இ.ஜெயசேகரன்.

இது குறித்து அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுடைய தாயகம் என்பதை உறுதிப்படுத்தி நீதியான தீர்வைப்பெற, உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தமிழர்களின் ஏகோபித்த சக்தியாகச் செயற்பட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையே தெரிவு செய்வோம்.

1948ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரமடைந்த பின்பு அப்போதிருந்த அரசு தனிச்சிங்கள நாடாக சித்திரித்து அதற்குரிய வேலைத்திட்டத்தை ஆரம்பித்தது.

### தொடர்கின்ற அட்டூழியங்கள்

அதற்குரிய வேலைத்திட்டங்களாக தனிச் சிங்கள மொழிச் சட்டம் கொண்டு வரப்பட்டமை, தமிழர்களின் பாரம்பரிய பகுதிகளில் சிங்களக் குடியேற்றம், தமிழர்களுக்கு வேலைவாய்ப்புக்கள் புறக்கணிப்பு, தமிழ்ப் பகுதியின் அபிவிருத்தியில் பாரபட்சம், தமிழ் மாணவர்களுக்கான கல்வித் தரப்படுத்தல் முறைமை, பொருளாதார ரீதியில் முன்னணி வகித்த தமிழர்களை கலவரங்களை ஏற்படுத்தி பொருளாதாரரீதியில் அழித்தமை, தமிழர்களுடைய வரலாற்று இடங்களை தொல்பொருள் திணைக்களம், வனவளத் திணைக்களம் மூலம் கையகப்படுத்தல் அல்லது பௌத்த விகாரை அமைத்தல், தமிழர்களுடைய வரலாற்றுச் சுவடுகள், பொக்கிஷங்கள் அடங்கிய யாழ்ப்பாண நூல் நிலையத்தை எரித்தமை, தமிழ் ஆராய்ச்சி மாநாட்டை குழப்பி உயிர்ச்சேதங்களை ஏற்படுத்தியமை என்று தமிழ் விரோத கொள்கைகளை காலம் காலமாக நடத்திவந்துள்ளார்கள். அண்மைக் காலமாக பிரசித்திபெற்ற இந்து ஆலயங்கள் அமைந்த இடங்கள் தங்களுக்கு உரித்தானதென்றும் வடக்கு கிழக்கு தமிழர்களின் தாயகம் இல்லை என்றும், தமிழர்கள் சுயாட்சி கேட்டால் குருதி ஆறு ஓடும் என்றும் சொல்கின்றார்கள்.




இப்படியானவர்களுக்கா தமிழ் மக்கள் வாக்களிக்கப் போகின்றார்கள்?

நாங்கள் தென்னிலங்கைச் சக்திகளுக்கு அளிக்கும் ஒவ்வொரு வாக்கும் தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை அங்கீகரிப்பதாகவே முடிந்துவிடும். ஆகையால் தமிழ் மக்களே! நன்கு சிந்தித்துச் செயற்படுங்கள்.

தமிழ்த் தலைவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து தனிவழி போவதற்காக வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை 1976ஆம் ஆண்டு நிறைவேற்றினார்கள். அதற்கான செயல்வடிவைக் கொடுக்க முற்பட்டவர்களே தமிழ் இளைஞர்கள்.

இளைஞர்களின் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்பு சில பௌத்த பிக்குகளும், தென்னிலங்கை அரசியல்வாதிகளும் இனவாதம் பேசுகின்றார்கள், போரில் வெற்றிபெற்றுவிட்டோம் என்ற மமதையில் தமிழர்களை அடக்கி ஆளமுற்படுகின்றார்கள். ஆகையால் அன்பார்ந்த தமிழ் மக்களே! இந்தியா உட்பட்ட சர்வதேசத்தின் ஆதரவுடன் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் தலைமைகள் சுயாட்சி அதிகாரமுள்ள நியாயமான தீர்வை நோக்கி முன்னெடுத்துச் செல்கின்ற இந்தவேளையிலே கடந்த 72வருடங்களாக இனவிடுதலைக்காகப் போராடிய தமிழ் மக்களுடைய நோக்கம் நிறைவேற தமிழ் மக்களாகிய நாங்கள் உரிமைப் போராட்டத்தில் உறுதியாகவும், பற்றுறுதியுடனும் இருக்கின்றோம் என்பதை தென்னிலங்கைக்கும், உலகுக்கும் உறுதியாகத் தெரிவிப்பதற்கு உங்கள் வாக்குரிமையைப் பயன்படுத்துங்கள்.

ஐ.நா. பிரகடனத்தின்படி எமக்கு சுயநிர்ணய உரிமை உண்டு. ஆனால் இலங்கைத் தமிழ் மக்களுக்கு அது மறுக்கப்படுகின்றது. உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் எங்களை நாங்களே ஆள உரிமையுள்ளது. அதை அரசும் சிங்கள இனவாதிகளும் வழங்க மறுக்கின்றார்கள். அதை நாம் பெறுவதற்கு மட்டுமே அரசுடன் இணைந்து செயற்படவேண்டும். உரிமைகள் கிடைக்காமல் அரசுடன் சேர்ந்து இயங்கினால் எமது உரிமைப் போராட்டம் அழிந்துவிடும். கடந்த 72 வருடங்களாக எமது உரிமைக்காக அகிம்சை, ஆயுத வழிகளில் போராடி பல உயிர்களை இழந்த எமது போராட்டத்தை வீணடிக்காமல் எமது இனம் தனித்துவமாக தேர்தலில் வெற்றியடைய வேண்டும். ஒரு வாக்கைக்கூட வீணடிக்காமல் தமிழ் அரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்துக்கு வாக்களித்து தமிழ்த் தேசியக் கூட்மைப்பின் வேட்பாளர்களை வெற்றியடையச் செய்யுங்கள் - என்றுள்ளது. (கு)

# மயிலிட்டி துறைமுகம் சிங்கள மீனவர் கையில்!

## *சேனாதிராசாவும் விஜயகலாவுமே காரணம்; குற்றஞ்சாட்டுகின்றார் வரதராஜசிங்கம்*

கொடிகாமம், ஓக. 2

சீரமைக்கப்பட்ட மயிலிட்டி துறைமுகத்தை சிங்கள மீனவர்கள் தொழில் செய்யும் இடமாக மாற்றியது மாவை சேனாதிராசாவும் திருமதி விஜயகலா மகேஸ்வரனும்தான் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்ட வேட்பாளர் ப.வரதராஜசிங்கம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாண மீனவ சமுதாயங்களின் சொர்க்கபுரியாக விளங்கிய மயிலிட்டித் துறைமுகத்தை அபிவிருத்திசெய்து தருகிறோம் எனக்கூறி அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் நரித்தனங்களுக்குள் அகப்பட்டு இன்று சிங்கள மீனவர்கள் எமது வளத்தை அபகரித்துச் செல்லும் நிலைக்கு வித்திட்டுள்ளனர்.

துறைமுகத்தைச் சீரமைக்கும்போது அங்கு தொழிலில் ஈடுபட்ட மீனவர்களுக்கு ஏற்ற மீன்பிடி உபகரணங்களை வழங்காமலும் அந்தப் பிரதேசத்தில் வசித்த மக்களை மீள்குடியேற்றம் செய்யாமலும் எவ்வாறு மயிலிட்டி துறைமுக அபிவிருத்தியை மேற்கொள்வார்கள்?

எமது அரிய கடல் வளத்தை தென்னிலங்கை மீனவ சமூகத்துக்கு விற்கும் நோக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அப்போதைய ஐக்கிய தேசிய முன்னணி அரசும் செயற்பட்டதில் எந்த மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை -என்றார். (த-159)

# தமிழர் ஒற்றுமையைச் சிதைக்க பேரினவாதிகளுக்கு வாக்களியாதீர்!

## தமிழ் அரசு கட்சியின் கிளைச் செயலர் கோரிக்கை

மட்டக்களப்பு, ஓக. 2

வடக்கு, கிழக்கை தாயகமாகக் கொண்டு இயங்கும், தமிழ்த் தேசியத்தை தாரகமந்திரமாகக் கொண்டு இயங்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் ஒற்றுமைப்பட்டு வாக்களிக்க வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம் தமிழர் ஒற்றுமையை பேரினவாத சக்திகளுக்கும், சர்வதேசத்துக்கும், தமிழர்களைப் பிரித்தாள நினைக்கும் எம் இன துரோகிகளுக்கும் படம்போட்டுக் காட்ட வேண்டும்.

இவ்வாறு மட்டக்களப்பின் கோறளைப்பற்று பிரதேச சபை உறுப்பினரும், தமிழ் அரசுக் கட்சியின் கோறளைப்பற்று கிளை செயலாளருமான கனகரெட்ணம் கமலநேசன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஆதரித்து வாழைச்சேனை நாசிவந்தீவு மீனவர்களுடனான கலந்துரையாடலின்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே தமிழர்களின் பலம். தமிழ் மக்களின் அரசியல் சக்தியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிளிர வேண்டும் என்பதற்காகவே அன்று அதை தலைவர் உருவாக்கினார். எவ்வாறு தமிழ்த் தேசியத்தைக் கூறுபோடலாம் என்று கங்கணம்கட்டிக்கொண்டு இருந்த பேரினவாத அரசுக்கு துருப்புச் சீட்டாக கருணா அமைந்தாரோ, அதைப்போல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சிதைப்பதற்கு பல துருப்புச் சீட்டுக்களை கட்சிக்குள்ளும் வெளியிலும் இந்த பேரினவாத அரசு களம் இறக்கிவிட்டுள்ளது. இவ்வாறான சக்திகளை எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலோடு வீட்டுக்கு அனுப்ப தமிழ் மக்கள் ஒன்றுபட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிடும் நமது தொகுதி பிரதிநிதிகளைத் தெரிவு செய்ய முன்வரவேண்டும்.

எம் இனத்தை அழித்தவர்களுக்கான விசாரணைகளை துரிதப்படுத்தவும் அவர்களுக்கான தண்டனையைப் பெற்றுக்கொடுக்கவும் தமிழ் மக்களுக்கான தீர்வு ஒன்றை பெற்றுக்கொள்ளவும் ஐக்கிய நாடுகள் சபையில் அதற்கான ஆணித்தரமான குரல் கொடுக்கவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் மட்டுமே முடியும். அதை இல்லாமல் செய்வதற்காக பேரினவாதிகள் பல நபர்களை, குழுக்களை, கட்சிகளை களம் இறங்கியுள்ளனர் வாக்குகேட்டு தமிழர் ஒற்றுமையை சிதைக்க பலர் உங்கள் முன் வருவார்கள். தற்காலிக சுகபோகங்களுக்கு மயங்கி அவர்களுக்கு வாக்களிப்பீர்களானால் உங்கள் எதிர்கால சந்ததியின், தமிழர்களின் எதிர்காலம் சிதைவடைந்து ஈழமணி திருநாட்டில் தமிழர் இருப்பு கேள்விக்குறியானதாக மாறிவிடும் - என்றார். (த)

# தமிழ் வாக்காளர்களே! தேர்தலில் வாக்களிக்க 5ஆம் திகதிக்கு முன் சொந்த ஊருக்குப் புறப்படுங்கள்!

## தமிழ் அரசுக் கட்சியின் கொழும்புக் கிளை கோரிக்கை



**கொழும்பு, ஓக. 2**

**யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் வாக்காளர்களும் வடக்கு கிழக்கு மாகாணத்தில் வாக்குரிமை பெற்று வடக்கு கிழக்குக்கு வெளியேயும் விசேடமாக கொழும்பு மாவட்டத்தில் வாழ்கின்ற தமிழ் வாக்காளர்களும் தத்தமது மாவட்டங்களில் தத்தமது வாக்களிப்பு நிலையங்களில் 5ஆம் திகதி கட்டாயம் வாக்களியுங்கள். அதற்கான உங்கள் பகுதிகளுக்கு இந்தமுறை கட்டாயம் சென்றுவிடுங்கள் என்று தமிழ் அரசுக் கட்சியின் கொழும்புக் கிளை கோரியுள்ளது.**

தமிழ் அரசுக் கட்சியின் கொழும்புக் கிளையின் விசேட ஒன்று கூடல் கொழும்புக் கிளைத் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா தலைமையில் பம்பப்பிட்டி கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. அதில் மேற்கண்ட தீர்மானம் எடுக்கப்பட்டது. இதுமட்டுமன்றி மேலும் பல விடயங்கள் குறித்து விவாதிக்கப்பட்டன.

இது பற்றி தமிழ் அரசுக் கட்சியின் கொழும்பு மாவட்டக் கிளையின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி ஆனோல்ட் பிரியந்தன் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளதாவது:

**தேசியப் பட்டியல் நியமனம்**

2010ஆம் ஆண்டு பொதுத்தேர்தலின் பின்னர் தலைநகர அரசியல் சரியான முறையில் ஒழுங்குபடுத்தப்படவேண்டும் என்ற அடிப்படையில் அது மிகவும் தேவையுடையதாக இருந்தமையால் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கொழும்புக் கிளை சீரமைக்கப்பட்டு அதன் தலைவராக கே.வி தவராசா தெரிவு செய்யப்பட்டார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மத்தியகுழு உறுப்பினர், சட்டத்துறைச் செயலாளர் சர்வதேசக்குழு, அரசியல்குழு, தேர்தல் நியமனக்குழு ஆகியவற்றின் நியமனத்துடன் ஒழுக்காற்றுக் குழு வுக்கும் அவரைத் தலைமை வகிக்கும்படி தலைமையகத்தால் நியமிக்கப்பட்டு கட்சிக்காகச் செயற்பட்டார்.

**சிறீதரனின் கருத்து தனிப்பட்டது**

கொழும்பு வாழ் தமிழர்கள் முன்னாள் அமைச்சர் மனோ கணேசனை ஆதரிக்க வேண்டுமென்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்ற வேட்பாளருமன சிறீதரன் விடுத்துள்ள அறிக்கை அவரது தனிப்பட்ட கருத்தென்றும் அது கட்சியின் முடிவல்ல என்றும் விவாதிக் கப்பட்டது. ஆயினும் அவரது கருத்துக்கு தமிழ் அரசுக் கட்சியின் கொழும்புக் கிளையின் பெரும்பாலான உறுப்பினர்கள் தமது அதிருப்தியை பதிவுசெய்தனர்.

கொழும்பில் வாக்குரிமை பெற்றுள்ள தமிழர்கள் தமது வாக்குகளை இந்த முறை அளிக்காமல் தேர்தலைப் புறக்கணிக்கச் செய்வதே சரியானது என்றும் தமிழ்த் தேசியத்துக்கு எதிரான மனநிலையைக் கொண்டுள்ளவர்களுக்கும் அதைப் பலவீனப்படுத்த முயற்சிப்பவர்க . ளுக்கும் கொடுக்கப்படும் சரியான படிப்பினையாக இருக்கும் என்றும் இந்தக் கூட்டத்தில் பெரும்பாலான அங்கத்தவர்கள் கருத்துக்களை முன்வைத்து ஆழமாக விவாதித்தனர்.

அதேவேளை, வாக்களிப்பில் கலந்து கொள்ள வேண்டுமென சில அங்கத்தவர்கள் கருத்துக்களை முன்வைத்தனர். ஆயினும் இது தொடர்பில் இறுதி முடிவு எட்டப்படவில்லை.

யாழ்.,கிளிநொச்சி மாவட்டங்களின் வாக்காளர்களும் வடக்கு கிழக்கிலுள்ள வாக்காளர்களும் தமது மாவட்டங்களில் வாக்களிக்க 5ஆம் திகதிக்கு முன்னர் தத்தமது ஊர்களுக்குச் சென்றுவிடவேண்டும் என்றும் தமிழ் வாக்காள பெருமக்களிடம் கோரிக்கை முன்வைத்து தீர்மானமும் நிறை வேற்றப்பட்டது- என்றார். (த)

# கூட்டமைப்பை வலுப்படுத்தினால்தான் கூட்டு வலிமையை அடைய முடியும்!

## தமிழரிடம் கோருகின்றது கனேடிய தமிழர் பேரவை

கொழும்பு, ஓக. 2

வடக்கு மற்றும் கிழக்கு மாவட்டங்களில் தமிழ்ச் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய கொள்கை ரீதியான மற்றும் சக்திவாய்ந்த நாடாளுமன்றஉறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பது மற்றும் சமூக நலன்களை முன்னேற்றுவதற்கு அவர்களின் கூட்டு வலிமையைத் திறம்படப் பயன்படுத்துவதே எமக்குள்ள தெரிவாக அமையும். தற்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வலுப்படுத்துவதன் மூலம் மட்டுமே இந்தக் கூட்டு வலிமையை அடைய முடியும் என்று கனேடியத் தமிழர் பேரவை குறிப்பிட்டுள்ளது.

இது பற்றி பேரவை அனுப்பிய செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

இலங்கையில் ஜனநாயக உரிமைகளுக்கான தமிழ் மக்களின் போராட்டத்துக்கு நீண்ட வரலாறு உண்டு. சுதந்திரத்துக்குப் பின்னர் தமிழர்களுக்குப் பல பின்னடைவுகள் இருந்தபோதிலும் நீதி, கண்ணியம் மற்றும் சமத்துவம் குறித்த அவர்களின் விருப்பம் குறையவில்லை. தமிழர்கள் தங்கள் உரிமைகளுக்காகவும் சுதந்தி ரத்துக்காகவும் போராடிய முறைமை பல தசாப்தங்களாக பல்வேறு மாற்றங்களைச் சந்தித்து வந்துள்ளது.

மே 2009 இல் போர் முடிவடைந்த பின்னர், சிறிலங்கா அரசின் நீதியற்ற நடவடிக்கைகளை எதிர்ப்பதற்கான தலைமைத்துவத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே கொண்டுள்ளது. இராஜதந்திர வழிமுறைகள் மூலம் தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றவும் கூட்டமைப்பு முயன்று வந்துள்ளது.

கடந்த நாடாளுமன்றத்தில், தமிழ் அரசியல் தலைமை, தெற்கில் உள்ள பிறமுற்போக்கான சக்திகளின் ஒத்துழைப்புடனும், சர்வதேச சமூகத்தின் உதவியுடனும், உலகளாவிய மனிதாபிமானக் கோட்பாடுகளின் அடிப்படையிலும், ஜனநாயகத்தை காக்கவல்ல ஆணையங்களை உருவாக்கியதன் மூலமும், சமத்துவமான சமுதாயத்துக்கான அடித்தளத்தை அமைக்க முயன்றது.

துரதிர்ஷ்டவசமாக, அவற்றை முன்னோக்கி கொண்டுசெல்வதிலும், செயற்படுத்துவதிலும் பல சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. எனினும், இந்தச் சிறிய, முன்னோக்கிய நடவடிக்கைகள் தமிழ் மக்களுக்கு தற்காலிக சுவாச வெளியை வழங்கியிருந்தாலும், தமிழினத்துக்கு அர்த்தமுள்ள அரசியல் தீர்வை வழங்கப் போதுமானதாக இருக்கவில்லை.

உலகளாவிய மனிதாபிமானக் கோட்பாடுகளின் அடிப்படையில் அரசியல் தீர்வுக்கான பேச்சு நடத்த இலங்கையின் கள அரசியல் நிலைமை கடினமாக உள்ளது. இலங்கையில் தற்போதைய அரசியல் கலாசாரத்தின் தனிச்சிறப்பு என்னவென்றால், சட்டத்தின் ஆட்சி இல்லாதது, சமரசத்துக்குள்ளான நீதித்துறை இல்லாமை, அடிபணிந்த ஊடகச் சூழல் மற்றும் நிர்வாகத்தின் இராணுவமயமாக்கல் ஆகியனவாகும்.

**தேர்தலின் பின்னர் நிலைமை மோசமாகும்**

நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் நிலைமைகள் மேலும் மோசமடைவதற்கான வாய்ப்புகளே உள்ளன. இவை சிறு பான்மைச் சமூகங்கள் மீதே அதிக தாக்கத்தை ஏற்படுத்தும்.




இலங்கையில் உள்ள தமிழர்கள் ஓரங்கட்டப்பட்ட சமூகமாக உள்ளார்கள். நாடாளுமன்றில் தமிழர்களது வலிமை குறைவாகவே உள்ளது. எனவே, தமிழர்களது வாக்குகளும் வீணடிக்கப்படக் கூடாது என்பது விமர்சன ரீதியாக முக்கியமானது.

தேர்தலில் பங்கேற்காததன் மூலமாகவோ அல்லது சுயாதீனக் குழுக்களுக்கும் தென்னிலங்கை பெரும்பான்மையினக் கட்சிகளுக்கும் வாக்களிப்பதன் மூலமாகவோ தமிழர்களின் வாக்குப்பலம் வீணாகி தமிழ்ச் சமூகத்தின் நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் பலவீனப்படுத்தப்படும் - என்றுள்ளது. (த)

# முல்லையில் பணம், மது வகைகள் வாக்குகளுக்காக விநியோகம்

## குற்றஞ்சாட்டுகின்றார் வேட்பாளர்

முல்லைத்தீவு, ஓக. 2

வன்னித் தேர்தல் தொகுதியில் வாக்காளர்களிடம் வாக்குகளைப் பெற்றுக்கொள்வதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட முஸ்லிம் வேட்பாளர்கள் மதுபான கலாசாரத்தையும் பணத்தையும் அள்ளி வீசுகின்றனர் என்று ஜனநாயக இடதுசாரி முன்னணியின் வேட்பாளர் அரவிந்தன் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் தேர்தலில் மக்களின் வாக்குரிமையைப் பணம் கொடுத்து மக்களைத் தொடர்ந்தும் அவல நிலையில் வைத்துக்கொள்வதற்காக அவ்வாறு செயற்படுகின்றனர் என்று தெரிவித்தார்.

பல வேதனைகளை, சோதனைகளைச் சந்தித்த வன்னி மண், இன்று அவலமான அரசியல் களத்தை எதிர்கொண்டுள்ளது. இது கவலையளிக்கின்றது. நீதியான முறையில் பரப்புரை மேற்கொள்ளப்படவில்லை. மக்கள் வாழிடங்களுக்குச் செல்ல துணிவற்ற கூட்டமைப்பின் வேட்பாளர்கள் முகவர் கட்டமைப்புக்களை நிறுவி போலியான வாக்குறுதிகளை வழங்கி வாக்குகளைச் சேகரித்து வருகின்றார்கள்.

தமிழ் மக்கள் இவ்வாறானவர்களைக் கண்டு ஏமாறாமல் எதிர்வரும் தேர்தலில் சரியான முறையில் சிந்தித்து வாக்களிக்க வேண்டும்- என்றார். (த-19)




## JAFFNA HOT TALENT- 2020
# இறுதிச்சுற்று இன்று

யர்ழ்ப்பாணம், ஓக.1
யாழ்ப்பாண மாவட்ட இளைஞர் யுவதிகளின் திறமைகளை உலகறியச் செய்யும் வகையில் முதன் முறையாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ள நடன மற்றும் பாடல் கலைத்திறமையினை வெளிக்கொணரும் விதமாக JAFFNA HOT TALENT2020 சுற்றுப்போட்டி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
இப் போட்டியின் இறுதிச் சுற்று நாளை 2ஆம் திகதி மாலை 3.30 மணியளவில் யாழ்ப்பாணம் தந்தை செல்வா மண்டபத்தில் சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என விழா ஒழுங்கமைப்பு குழுவினர் தெரிவித்துள்ளனர். (ரி3)

# அரச அலுவலர்கள் தொடர்பில் அதிகளவு முறைப்பாடுகள்
## ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் தெரிவிப்பு

**கொழும்பு, ஓக.2**
**அரச அலுவலர்கள் தேர்தல் பிரசாரத்தில் தேர்தல் விதிமுறைகளை மீறியமை தொடர்பில் அதிகளவான முறைப்பாடுகள் ட்ராஸ்பரன்சி இன்டர்நேஷனல் ஸ்ரீலங்கா நிறுவனத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ளன.**

ஜூலை 30ஆம் திகதி வரையில் பொதுச் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கான நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 152 சம்பவங்கள் அறிக்கையிடப்பட்டிருந்தன. அவற்றில் 137 முறைப்பாடு கள் இதுவரையில் உறுதிசெய்யப்பட்டுள்ளன.
இவற்றுள் 37 முறைப்பாடுகள் அபிவிருத்தி செயற்றிட்டங்களான வீதி மற்றும் பாலங்களை திறந்து வைப்பதனூடாக அவற்றை பிரச்சார நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தியமை தொடர்பில் கிடைக்கப்பெற்றுள்ளன.
33 முறைப்பாடுகள் தேர்தல் விதிமுறைகளை மீறிய அரச அலுவலர்கள் தொடர்பாகவும், 33முறைப்பாடுகள் அரசுக்குச் சொந்தமான வாகனங்களைப் பயன்படுத்தியமை தொடர்பாகவும் கிடைக்கப்பெற்றுள்ளன.
பொதுச் சொத்துக்களின் தவறான பிரயோகம் தொடர்பான பெரும்பாலான முறைப்பாடுகள் ஹம்பாந்தோட்டை, புத்தளம், மற்றும் கொழும்பு மாவட்டங்களில் முறையே 20, 19, 17 ஆக பதிவாகியுள்ளன.
இது தொடர்பில் ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நேஷனல் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அசோக ஒபேசேகர தெரிவித்துள்ளதாவது, தேர்தல் ஆணைக்குழுவின் சட்ட விதிமுறைகளை மீறுபவர்கள் தொடர்பாக அரசமைப்பின் உறுப்புரை 104இன் பிரகாரம் தேர்தல் ஆணைக்குழுவின் பொறுப்புக்கூறல் கடுமையாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்பதோடு, இவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு பொறுப்பான நிறுவனங்கள் அவற்றின் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவது மட்டுமல்லாது எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறுவதைத் தவிர்க்கவும் உதவியாக அமையும் எனத் தெரிவித்தார்.
விரிவான தகவல்களை உள்ளடக்கிய சம்பவங்களின் விவர வரைபடத்தை பொதுச் சொத்துக்களை பாதுகாப்பதற்கான வலைத்தளமான www.apesalli.lkvDk எனும் இணையத்தளத்தினூடாக பார்வையிட முடியும். (ரி1)

## கட்டுநாயக்க விமான நிலையத்தில்
# இலங்கையர்களை இத்தாலிக்கு அனுப்பும் மோசடி நடவடிக்கை

கொழும்பு, ஓக.1
கட்டுநாயக்க விமான நிலையத்தில் இலங்கையர்களை இத்தாலிக்கு அனுப்பும் மோசடி நடவடிக்கை இடம்பெற்று வருவதாக தெரியவந்துள்ளது.
போலி ஆவணம் தயாரித்து இத்தாலி உட்பட ஐரோப்பிய நாடுகள் பலவற்றுக்கு இலங்கைப் பணியாளர்களை அனுப்பும் பிரதிநிதிகள் சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
கைது செய்யப்பட்டவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் எனக் குற்ற விசாரணைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.
இந்த மோசடி நடவடிக்கைகள் சில காலங்களாக இடம்பெற்று வருவதாக குற்ற விசாரணைத் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (ரி2)

## தேர்தல் சட்டமீறல்:
# புதிதாக 1,084 சட்ட முறைப்பாடுகள்

கொழும்பு, ஓகஸ்ட் 1
தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் புதிதாக 1,084 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.
இதற்கமைய, தேசிய தேர்தல்கள் முறைப்பாட்டு முகாமைத்துவ மத்திய நிலையத்தில் இதுவரை ஆயிரத்து 68 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.
அத்துடன், மாவட்ட தேர்தல்கள் முகாமைத்துவ மத்திய நிலையத்தில் 6 ஆயிரத்து 15 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. (ரி2)

# மத்திய கிழக்கில் இருந்து இலங்கையர்கள் நாட்டுக்கு வருகை

யாழ்ப்பாணம், ஓக.1
மத்திய கிழக்கு நாடுகளில் பணிகளுக்குச் சென்ற 349 இலங்கையர்கள் நேற்றுக் காலை இரண்டு விமானங்களின் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.
நேற்று அதிகாலை 12 மணிக்கு டுபாய் விமான நிலையத்திலிருந்து எமிரேட்ஸ் விமானத்தில் 335 இலங்கையர்களும், அதிகாலை 1.30 மணியளவில் கட்டார் மற்றும் டோஹாவில் வணிகக் கப்பல்களில் பணியாற்றச் சென்ற 14 இலங்கையர்கள் கட்டார் ஏர்வேஸ் விமானத்தின் மூலமும் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.
மேலும், இலங்கையில் சீன முதலீட்டு திட்டங்களில் பணிபுரியும் 29 சீன நாட்டு பிரஜைகள் நேற்று மாலை 6.30 மணிக்கு சீனாவின் ஷங்காயில் இருந்து சீனா ஈஸ்டன் விமானத்தில், கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.
விமான நிலையத்தில் வந்திறங்கிய பயணிகள் அனைவரும் பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டமையுடன் தனிமைப்படுத்தலுக்காக தனிமைப்படுத்தல் முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (ரி3)

# கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையம் தொடர்பில் உறுதியான தீர்மானம் கிடைக்கும்வரை போராட்டம் தொடரும்
## ஒன்றிணைந்த தொழிற்சங்கத் தலைவர் தெரிவிப்பு



கொழும்பு, ஓக.2
கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை விற்பனை செய்ய வேண்டாம் என்று கோரிக்கை விடுத்து, அதனைப் பாதுப்பதற்காக ஒன்றிணைந்த தொழிற்சங்கத்தினரால் முன்னெடுக்கப்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டத்துக்கு அரசாங்கத்திடமிருந்து உறுதியான தீர்மானம் கிடைக்கும் வரையில், போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை என்று ஒன்றிணைந்த தொழிற்சங்கத் தலைவர் பிரசன்ன களுத்தரதுங்க தெரிவித்துள்ளார்.
கொழும்புத் துறைமுகத்தின் கிழக்குமுனையைப் பாதுகாப்பதற்கான ஒன்றிணைந்த தொழிற்சங்கத்தினரால் முன்னெடுக்கப்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டம் தொடர்பில் வினவிய போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது;
கொழும்புத் துறைமுகத்தின் கிழக்குமுனையை விற்பனை செய்யவேண்டாம் என்றே நாங்கள் இந்த சத்தியாக்கிரகப் போராட்டத்தை நடத்தி வருகின்றோம். கடந்த புதன்கிழமையே இந்த போராட்டத்தை ஆரம்பித்தோம். இதன் போது நாங்கள் எமது கோரிக்கையை முன் வைத்து துறைமுகத் துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றும் செய்திருந்தோம். எமது ஆர்பாட்டத்தில் 23 தொழிற்சங்கங்கள் இணைந்து கொண்டிருந்தன. துறைமுகத்தில் பணியில் ஈடுபட்டிருந்த தொழிற்சங்கத்தின் அனைத்து உறுப்பினர்களும் தற்போது வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால் இதுவரையில் அரசாங்கத்திடமிருந்து உரிய பதில் எதுவும் கிடைக்கப்பெறவில்லை. ஆளும் தரப்பினருடன் கலந்துரையாடுவதற்கு நாங்கள் முயற்சிக்கின்ற போதிலும் அது முடியாமல் போயுள்ளது. இந்நிலையில் நாங்கள் துறைமுகத்தின் நுழைவாயிலை மறைத்து ஆர்பாட்டமொன்றை தற்போது முன்னெடுத்து வருகின்றோம். எங்களது வேண்டுகோள் குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தி நியாயத்தைப் பெற்றுக் கொடுக்கும் வரையில் எமது இந்தப் போராட்டம் தொடரும்-என்றார். (ரி2)

# பிரபலங்களின் டுவிட்டர் கணக்கை ‘ஹக்’ செய்த 17 வயதுச் சிறுவன்




**வொஷிங்டன், ஓக.2**
**அமெரிக்கப் பிரபலங்களின் கணக்குகளைக் ஹக் (Hack) செய்து அதில் பிட்கொய்ன் தொடர்பான தகவல்களை வெளியிட்டது 17 வயது சிறுவன் உள்ளிட்ட 3 பேர் கொண்ட இளைஞர்கள் குழு எனத் தெரியவந்தது.**

புளோரிடாவை சேர்ந்த நிமா பாசீல் (22), இங்கிலாந்தை சேர்ந்த ஷேப்பர்டு (19) ஆகிய இருவரும் டுவிட்டர் ஹேக்கிங்கில் ஈடுபட்டுள்ளனர். மூன்றாவது நபரான 17 வயது நிரம்பிய சிறுவன் தான் இந்த ஹக்கிங்கில் மூளையாக செயல்பட்டுள்ளான் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். கிரா காம் கிளார் என்ற பெயருடைய 17 வயது சிறுவன் தான் இந்த மிகப்பெரிய ஹாக்கிங்குக்கு முக்கிய காரணம் என தெரியவந்ததையடுத்து அவர்கள் அனைவரையும் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த டுவிட்டர் ஹக்கிங்கில் கிளார் குறைந்தது 1 லட்சம் டொலர்கள் அளவில் முறைகேட்டில் ஈடுபட்டுள்ளார் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
அமெரிக்காவின் பிரபலங்களான மைக்ரோசொப்ட் நிறுவன அதிபர் பில் கேட்ஸ், ஸ்பேஸ் எக்ஸ் விண்வெளி நிறுவனத்தின் தலைவர் எலன் மஸ்க், அமேசன் நிறுவனர் ஜெப் பெஸோஸ், அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஒபாமா மற்றும் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளராக களம் இறங்கும் ஜோ பிடன் உள்ளிட்டவர்களின் டுவிட்டர் கணக்குகள் கடந்த மாதம் ஹாக்கிங் செய்யப்பட்டன. இந்த ஹாக்கிங் ரஷ்யா அல்லது சீனாவால் நடைபெற்றிருக்கலாம் என அமெரிக்கா சந்தேகம் எழுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ரி1)



# அமெரிக்காவிலும் ‘டிக் டொக்’ தடை

வொஷிங்டன், ஓக 2
தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல், தனி நபர் தகவல் திருட்டு ஆகியவற்றால் அமெரிக்காவில் டிக் டொக் செயலியைத் தடை செய்வோம் என்று ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார். இதேவேளை, சீனாவின் பைட்டான்ஸ் நிறுவனத்தின் செயலியான டிக் டொக்கை, அமெரிக்காவின் மைக்ரோசொப்ட் நிறுவனம் வாங்கத் திட்டமிட்டு இருப்பதாகவும் அதற்கான பேச்சுவார்த்தை நடந்து வருகிறது எனவும் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன. கிழக்கு லடாக் எல்லையில் சீன ராணுவத்துடன் நடந்த மோதலில் 20 இந்திய வீரர்கள் கொல்லப்பட்டனர். அதையடுத்து சீன நிறுவனமான டிக் டொக் உள்ளிட்ட 47 செயலிகளுக்கு இந்தியா தடை விதித்தது. இந்த நடவடிக்கையைத் தொடர்ந்து அமெரிக்காவிலும் டிக் டொக் செயலியைத் தடை செய்யும் குரல் ஓங்கி ஒலிக்கத் தொடங்கியமை குறிப்பிடத்தக்கது. (ரி1)



போட்ஸ்வானாவில்

# மர்மமான முறையில் யானைகள் உயிரிழப்பு

காபோரோன், ஓக 2
தென்னாபிரிக்க நாடான போட்ஸ்வானாவில் கடந்த மூன்று மாதங்களில் நூற்றுக்கணக்கான யானைகள் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளன.
இதையடுத்து மேற்கொள்ளப்பட்ட முதற்கட்ட பரிசோதனைகளின் அடிப்படையில் யானைகளின் மர்ம இறப்பிற்கு பின்னால் இயற்கையான நச்சுத்தன்மை காரணமாக இருக்கலாம் என வனவிலங்கு மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.
குறைந்தது 350 க்கும் மேற்பட்ட யானைகளின் திடீர் மரணங்களுக்குப் பின்னால் ஒரு தொற்று நோய் காரணமாக இருப்பது சாத்தியமில்லை என்று வன விலங்கு மற்றும் தேசிய பூங்காக்கள் துறை பணிப்பாளர் சிரில் தாவோலோ தெரிவித்துள்ளார்.
யானை இறப்புகள் சில சுற்றுச்சூழல் மற்றும் வனவிலங்குகளின் பாதுகாவலர்களை கவலையடையச் செய்துள்ளது.
ஒரு காரணத்தை விரைவாக நிறுவ முடியாவிட்டால் மரணங்கள் கட்டுப்பாட்டை மீறக்கூடும் என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. (ரி1)

சீனாவை விரட்டும் கொரோனா

# 5 நாள்களில் 400 பேருக்கு தொற்று உறுதி



பீஜிங், ஓக.2
சீனாவின் உய்குர் இன மக்கள் அதிகம் வசிக்கும் பகுதியான ஜின் ஜியாங் மாகாணத்தில், கொரோனா வைரஸ் தொற்று கடந்த சில நாட்களாக பரவி வருகிறது. கடந்த 5 நாட்களில் 400க்கும் மேற்பட்டோருக்கு கொரோனாத் தொற்று கண்டறியப்பட்டுள்ளது. இதனால், சீனாவில் கொரோனா வைரஸின் 2 ஆவது அலை ஏற்பட்டு விடுமோ என்ற அச்சம் அந்நாட்டு மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.
கொரோனா முதன் முதலில் சீனாவின் வூகான் நகரில் கண்டறியப்பட்டது. அதையடுத்து சீனா பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளை எடுத்தது. வூகான் நகரம் அமைந்துள்ள ஹூபெய் நகரை முழுவதுமாக முடக்கியது. சீனா மேற்கொண்ட அதிரடி நடவடிக்கைகளால் அந்நாட்டில் கொரோனா தொற்று கட்டுப்படுத்தப்பட்டது. (ரி1)



# ஈராக் தேர்தல் அடுத்த ஆண்டு

பாக்தாத், ஓக 2
ஈராக் நாடாளுமன்ற தேர்தலை அடுத்த வருடம் ஜூன் மாதம் 6 ம் திகதி நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. எதிர்வரும் 2022ம் ஆண்டு திட்டமிடப்பட்டிருந்த தேர்தலையே முன்கூட்டி நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது என்று அந்நாட்டு பிரதமர் முஸ்தபா அல் கத்மீ தெரிவித்துள்ளார்.
பல மாதங்காலமாக ஈராக்கில் இடம்பெறும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களினால் அரசாங்கம் நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ளது. விரைவில் பொதுத்தேர்தலை நடத்த வேண்டுமென ஆர்ப்பாட்டகாரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்நிலையில், ஈராக் அரசாங்கம் தேர்தலை நடத்துவதற்கான தீர்மானத்தை ஐக்கிய நாடுகள் அமைப்பு பாராட்டியுள்ளன என்று சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன. (ரி1)

# கொரில்லாவை கொன்றவருக்கு 11 ஆண்டுகள் சிறை



கம்பாலா, ஓக.2
உகண்டாவில் பெரிதும் அறியப்பட்ட ரபிக்கி என்ற பெயர் கொண்ட கொரில்லா மனிதக் குரங்கை கொன்றவருக்கு 11 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.
பாதுகாக்கப்பட்ட பகுதிக்கு சட்டவிரோதமாக நுழைந்து மனிதக் குரங்கை கொன்றார் என பெலிக்ஸ் ப்யமுகாமா மீது குற்றஞ்சாட்டப்பட்டது. டுய்கர் என்று அழைக்கப்படும் சிறிய மான் மற்றும் காட்டுப் பன்றி ஒன்றை கொன்றது மற்றும் அந்த இரு விலங்குகளினதும் இறைச்சியை வைத்திருந்தார் என்றும் ப்யமுகாமா குற்றஞ் சாட்டப்பட்டார். கடந்த ஜூன் 1 ஆம் திகதி காணாமல் போன ரபிக்கி கொரில்லா கடும் தேடுதலை அடுத்து அடுத்தநாள் அதன் உடல் கண்டுபிடிக்கப்பட்டது. அந்த மனிதக் குரங்கு கூரியஆயுதத்தால் தாக்கப்பட்டே கொல்லப்பட்டுள்ளது என்று விசாரணையில் தெரியவந்தது. எனினும் அந்த மனிதக் குரங்கு தம்மை தாக்கியதால் தற்காப்பிற்காக ரபிக்கியை கொல்ல வேண்டி ஏற்பட்டது என ப்யமுகாமா தெரிவித்திருந்தார். (ரி1)

# நாடாளுமன்றத் தேர்தல் - 2020

## யாழ்ப்பாணம் - கிளிநொச்சி
## தேர்தல் மாவட்டம்

**எனது அன்புக்குரிய வாக்காளப் பெருமக்களே!**
**வர்த்தகப் பெருமக்களே!**

தற்போதைய சூழலில் உங்கள் அனைவரையும் தனித் தனியாகச் சந்திக்கும் வாய்ப்பு கிடைக்காததையிட்டு மனம் வருந்துகின்றேன்.

தேர்தல் முடிந்த பின்னர் **60** நாள்கள் நான் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அனைத்து மக்களையும் சந்தித்து, உங்கள் பிரச்சினைகள், தேவைகள் என்பவற்றை அறிந்து, பல்கலைக்கழகப் புத்திஜீவிகள் சமூகத்துடனும் கலந்து ஆலோசித்து எனது நாடாளுமன்ற அரசியல் பணியை தொடங்குவேன் என்றும் உங்களுக்கு உறுதிபடக் கூறுகின்றேன்.



**சப்த தீவகத்தின் அபிவிருத்திக்கும் மற்றும் வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், கிளிநொச்சிக்கான அபிவிருத்திக்கும் உண்மையான மண்ணின் மைந்தன் விண்ணன் ஆகிய என்னை வெற்றிபெறச் செய்யுங்கள்!**

5 ஆம் திகதி காலையில் நீங்கள் உன்னும் கையை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்!
எனது 5 ஆம் இலக்கத்தையும் நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்!

கை சின்னத்துக்கும் அங்கஜன் இராமநாதன் அவர்களின் வெற்றி இலக்கம் 1 இற்கும் எனது வெற்றி இலக்கமாகிய இலக்கம் 5 இற்கும் வாக்களித்து மேலும் நீங்கள் விரும்பிய ஒரு இலக்கத்துக்கும் வாக்களியுங்கள். கட்டாயமாக மூன்று இலக்கங்களைத் தெரிவு செய்து வாக்களியுங்கள். அது உங்கள் உரிமை!

**ஆளும் கட்சியும் அடுத்த ஐந்தாண்டுக்கு ஆட்சியில் இருக்கப்போகும் கட்சியான எங்களுக்கு வாக்களிப்பதன் மூலம் வடக்கு கிழக்கு இணைந்த சமஷ்டி உரிமைகளுக்கும் பாரிய அபிவிருத்தித் திட்டங் களுக்கும் இளைஞர் யுவதிகளுக்கான தொழிற்சாலைத் திட்டங் களுக்கும் உங்கள் வாக்குகளை அளியுங்கள்!**

**உண்மைகள் யாவையும் வெளிக்கொண்டு வருவதற்கு நாடாளுமன்றத்துக்கு செல்கின்றேன்**

**"உங்கள் வாக்கு உங்கள் உரிமை சரியான முறையில் வாக்களியுங்கள்!"**

**தமிழ்த் தேசியமும் தமிழ்த் தாயும் பல்லாயிரம் ஆண்டுகள் வாழ்க.**

## பரநிருபசிங்கம் வரதராஜசிங்கம் (விண்ணன்)

"உங்கள் வாக்கு உங்கள் உரிமை சரியான முறையில் வாக்களியுங்கள்!"

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி

facebook.com/vinnan05

# கோலி முதலிடம்

புதுடில்லி, ஓக. 2

ஐ.சி.சி வெளியிட்டுள்ள ஒருநாள் கிரிக்கெட் துடுப்பாட்ட வீரர்கள் தரவரிசையில் 871 புள்ளிகளுடன் இந்திய அணி தலைவர் விராட் கோலி முதல் இடத்தையும், 855 புள்ளிகளுடன் துணைத் தலைவர் ரோஹித் ஷர்மா இரண்டாவது இடத்தையும் பிடித்துள்ளனர்.

டெஸ்ட் போட்டிக்கான தரவரிசையில் விராட் கோலி இரண்டாவது இடத்தில் நீடிக்கிறார். முதல் இடத்தை ஆஸ்திரேலிய வீரர் ஸ்மித் தக்க வைத்துள்ளார். ரி-20 தரவரிசையில் கே.எல்.ராகுல் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளார். விராட், ரோஹித் முறையே 10 மற்றும் 11ஆவது இடத்தைப் பிடித்துள்ளனர். முதல் இடத்தை பாகிஸ்தான் வீரர் பாபர் அசாம் கைப்பற்றியுள்ளார்.

பந்துவீச்சைப் பொறுத்தவரை வேகப் பந்து வீச்சாளர் பும்ரா ஒருநாள் போட்டிக்கான தரவரிசையில் 719 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தையும், டெஸ்ட் தரவரிசையில் 8 ஆவது இடத்தையும், ரி-20 போட்டிகளில் 13 ஆவது இடத்தையும் பிடித்துள்ளார்.

பும்ராவைத் தவிர ஏனைய இந்தியப் பந்துவீச்சாளர்கள் முதல் பத்து இடங்களுக்குள் இல்லை என்பது குறிப்பி டத்தக்கது. அணிகளுக்கான தரவரிசையில் இந்திய அணி டெஸ்ட் போட்டிகளில் 3 ஆவது இடத்தையும், ஒருநாள் போட்டிகளில் இரண்டாவது இடத்தையும், ரி-20 போட்டிகளில் 3 ஆவது இடத்தையும் கைப்பற்றியுள்ளது.

மேற்கிந்தியத் தீவுகள் அணியுடனான டெஸ்ட் போட்டியில் அசத்திய இங்கிலாந்து வீரர் ஸ்டுவர்ட் பிராட் ஏழு இடங்கள் முன்னேறி மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளார். (ரி2)

# ரி.என்.பி.எல். ஒத்திவைப்பு

புதுடில்லி, ஓக. 2

இந்த ஆண்டுக்கான ரி.என்.பி.எல். கிரிக்கெட் தொடரானது நவம்பர் அல்லது அடுத்தாண்டு மார்ச் மாதம் நடைபெறும் என்று தமிழ்நாடு கிரிக்கெட் சங்க செயலாளர் ராமசாமி அறிவித்துள்ளார்.

தமிழக கிரிக்கெட் சங்கம் சார்பில், 2016 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு பிரிமீயர் லீக்கின் ரி-20 கிரிக்கெட் தொடர் நடத்தப்படுகிறது. இந்த ஆண்டு நடைபெறவிருந்த 5 ஆவது சீசன் கொரோனா பரவல் காரணமாக ஒத்திவைக்கப்பட்டது.

இத் தொடர் ஓகஸ்ட்-செப்ரெம்பர் மாதங்களில் நடத்தப்படும் என்று கூறப்பட்டது. ஆனால் தமிழகத்தில் ஓகஸ்ட் 31 ஆம் திகதி வரை எவ்வித விளையாட்டு போட்டிகளையும் நடத்த தமிழக அரசு அனுமதி வழங்கவில்லை.

இந்த நிலையில், ரி.என்.பி.எல் தொடரை நடத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ரி2)

# ரோகித் ஷர்மாவே அடுத்த டோனி

புதுடில்லி, ஓக.2

இந்திய கிரிக்கெட் அணியின் அடுத்த டோனி, ரோஹித் ஷர்மாதான் என இந்தியக் கிரிக்கெட் வீரரும், சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் உப தலைவருமான சுரேஷ் ரெய்னா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

நான் ரோஹித் ஷர்மாவின் செயற்பாடுகளை பார்த்து இருக்கிறேன். அவர் மிகவும் அமைதியானவர், மற்றவர்களின் கருத்தைக் கேட்கக்கூடியவர். சக வீரர்களுக்கு நம்பிக்கை அளிப்பதில் ஆர்வம் கொண்டவர்.

எல்லாவற்றுக்கும் மேலாக தானே முன்னின்று அணியை வழிநடத்துவதில் திறமை மிக்கவர். அணியை முன்னின்று நடத்துவதுடன், வீரர்களின் ஓய்வறை சூழலுக்கும் மதிப்பு அளிப்பவர். இவ்வாறு செயற்படும் போது, நீங்கள் எல்லாம் கிடைத்தது போன்று உணர்வீர்கள். அவர் அனைவரையுமே அணித்தலைவராக நினைப்பார். அவரது தலைமைத்துவத் தன்மையை நான் பார்த்து இருக்கிறேன்.



ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் எமது அணி கிண்ணத்தை வென்றபோது அவரது தலைமையின் கீழ் நான் விளையாடியிருக்கிறேன்.

இளம் வீரர்களான ஷர்துல் தாக்கூர், வொஷிங்டன் சுந்தர், யுஸ்வேந்திர சாஹல் ஆகியோருக்கு அவர் எந்த அளவுக்கு நம்பிக்கை அளித்தார் என்பதைப் பார்த்து இருக்கிறேன்.

டோனிக்கு அடுத்து முன்னணி வீரர்களில் ஒருவராக ரோஹித் ஷர்மா விளங்குகிறார். டோனி புத்திசாலியான தலைவர். ஆனால், டோனியையும் விட அதிக ஐ.பி.எல். கிண்ணத்தை ரோஹித் ஷர்மா வென்றுள்ளார்.

இருவருடைய தலைமைத்துவப் பண்பும் ஒரே மாதிரித் தான் இருக்கும். இருவருமே மற்றவர்களின் கருத்தை உள்வாங்கி கணக்கில் எடுக்கக் கூடியவர்கள்.

உங்கள் தலைவர்கள் மற்றவர்கள் சொல்வதை கவனித்தாலே நிறைய பிரச்சினைகளை தீர்க்க முடியும். அத்துடன் வீரர்களின் மனரீதியான பிரச்சினைகளையும் சமாளிக்க முடியும். என்னைப் பொறுத்த மட்டில் இருவருமே அற்புதமான அணித் தலைவர்கள் - என்றார். (ரி2)

# ஆஷ்லி 'அவுட்'

**வொஷிங்டன், ஓக. 2**

**அமெரிக்க பகிரங்க டெனிஸ் போட்டியிலிருந்து பெண்களுக்கான ரென்னிஸ் தரவரிசையில் முதலிடத்திலுள்ள ஆஸ்திரேலியாவின் ஆஷ்லி பார்ட்டி விலகியுள்ளார்.**




கிராண்ட்ஸ்லாம் ரென்னிஸ் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் போட்டி கடந்த 31 ஆம் திகதி முதல் செப்ரெம்பர் 13 ஆம் திகதி வரை நியூயோர்க்கில் நடைபெறவுள்ளது. கொரோனா அச்சுறுத்தலால் கடந்த மார்ச் மாதத்துக்கு பிறகு எந்தவொரு சர்வதேச ரென்னிஸ் போட்டிகளும் நடத்தப்படவில்லை. இதனால் அமெரிக்க பகிரங்க டெனிஸ் போட்டி, எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்தாலும், இன்னொரு பக்கம் அமெரிக்காவில் கொரோனா பரவல் தீவிரமாக உள்ளதால் வீர, வீராங்கனைகள் ஒருவித கலக்கத்தில் உள்ளனர். ரசிகர்களின்றி கொரோனா தடுப்பு உயிர் பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றி இந்தப் போட்டி நடத்தப்படுகிறது.

இந்தநிலையில், அமெரிக்கபகிரங்க ரென்னிஸ் போட்டியிலிருந்து விலகுவதாக ஆஷ்லி பார்ட்டி அறிவித்துள்ளார்.

பிரெஞ்சு பகிரங்க சம்பியனான 24 வயதான ஆஷ்லி பார்ட்டி இது குறித்து தெரிவிக்கையில்;

நானும், எனது அணியினரும் சின்சினாட்டி ஓப்பன் மற்றும் அமெரிக்க ஓப்பன் போட்டிக்கு இம்முறை அமெரிக்காவுக்கு செல்வதில்லை என்று முடிவு எடுத்துள்ளோம். அமெரிக்க ஓப்பன் மற்றும் சின்சினாட்டி இரண்டும் எனக்கு பிடித்தமான போட்டிகள். ஆனால் கொரோனா காரணமாக அங்கு சென்று விளையாடுவதில் இதுவரை அபாயம் உள்ளது. இதனால் வேறு வழியின்றி போட்டியிலிருந்து விலகும் கடினமான முடிவை எடுத்திருக்கிறேன். அடுத்த ஆண்டு அமெரிக்க ஓப்பனில் விளையாடுவதாகவுள்ளேன். செப்ரெம்பர் மாதம் நடக்கும் பிரெஞ்ச் ஓப்பனில் கலந்து கொள்வது குறித்து இனி வரும் வாரங்களில் முடிவு செய்வேன் - என்றார். (ரி2)

# சூதாட்ட விளம்பரத்தால் கோலி, தமன்னாக்கு சிக்கல்

புதுடில்லி, ஓக. 2

இணைய சூதாட்ட விளம்பரங்களில் நடித்துள்ள இந்திய கிரிக்கெட் அணித்தலைவர் விராட் கோலி, நடிகை தமன்னா ஆகியோரைக் கைது செய்யுமாறு சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக சட்டத்தரணி சூரியபிரகாசம், சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

அந்த மனுவில் அவர் தெரிவித்திருப்பதாவது;

இணைய சூதாட்டத்துக்குத் தடை விதிக்க வேண்டும். இணைய சூதாட்டம் தொடர்பான விளம்பரங்களில் நடித்த கோலி, தமன்னா போன்றோரைக் கைது செய்ய வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. (ரி2)

**தவறிவிட்டது**

மதவடி லேனுக்கும், சுதுமலைச் சந்திக்கும் இடையில் மணி பேர்சுடன் கூடிய தேசிய அடையாள அட்டை, தொழில் அனுமதி அட்டை, மோட்டார் சைக்கிள் அனுமதிப்பத்திரம், காப்புறுதிப் பத்திரம் என்பன தொலைந்துவிட்டன. கண்டெடுத்தவர்கள் 077 673 5120 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

வைரவப்பிள்ளை ஞானச்சந்திரன்
மதவடி லேன்,
சுபா பேக்கரி அருகில் சுதுமலை.

**கணித விஞ்ஞான வகுப்புக்கள்**

தரம் : 6 தொடக்கம் O/L வரை
கணித, விஞ்ஞான வகுப்புக்கள் விரிவான விளக்கத்துடன் கற்பிக்கப்படும்.
வினாக்களும் செய்து விடப்படும்.
076 686 7099, 077 024 1080

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் சபாபதி வீதியில் கே.கே.எஸ். வீதியில் இருந்து 200m தூரத்தில் "செல்வமஹால்" மண்டபத்துக்கு முன் ஒழுங்கையில் ஒரு பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
077 616 2875

**மணமகள் தேவை**

யாழ். இந்து கௌரவ குடும்பத்தை சேர்ந்த 1983 திருவாதிரை நட்சத்திரம் சூரியன் செவ்வாய் இரண்டில் 28 பாவம் உடைய அரச உத்தியோகத்தருக்கு தகுந்த மணமகளை எதிர்பார்கின்றோம்.
076 677 9813

**பணிப் பெண் தேவை**

மானிப்பாய் பராமரிப்பு நிலையத்தில் இருக்கும் வயோதிப பெண் ஒருவரை அவருடன் தங்கி நின்று பார்த்துக்கொள்வதற்கு பெண் வேலையாள் ஒருவர் தேவை.
(சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்)
077 045 6898, 077 480 1265



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.08.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.